
# ஜம்மு-காஷ்மீருக்குத் தன்னாட்சி உரிமை அளித்திடு! காங்கிரசுத் தலைவர் ப. சிதம்பரம் சொன்னது என்ன? பரூக் அப்துல்லா கோருவது என்ன? பிரதமர் மோடியின் கூற்று பொய்யானது



ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு என்று தனி அரசமைப்புச் சட்டம் உண்டு. அது ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்ட அவையால், 17-11-1956இல் நிறைவேற்றப்பட்டது.

**அது, இந்திய அரசமைப்புச் சட்டம் விதி 370 இன்படி ஜம்மு-காஷ்மீருக்குத் தனி உரிமையை வழங்கியது.**

**அந்தத் தனி உரிமை என்பது ஜம்மு-காஷ் மீருக்குப் பிரதமர் உண்டு; குடிஅரசுத் தலைவர் உண்டு; தனிக்கொடி உண்டு.**

இவ்வளவு தனி உரிமைகளையும், பிரதமர் நேரு பறித்துக் கொண்டார். அப்போது முதற்கொண்டு, ஜம்மு-காஷ்மீர் மக்கள் அந்தத் தன்னுரிமையை முழுவதுமாகத் திருப்பிக் கேட்கிறார்கள்.

ஆனால் நாளது அளிக்க வரையில் இந்திய அரசு அந்த உரிமையை அளித்திட மறுத்து வருகிறது.

காங்கிரசுக் கட்சி ஆட்சி 2014 வரை மறுத்தது. பாரதிய சனதாக் கட்சி ஆட்சி 2014 முதல் மறுத்து வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர் ப.சிதம்பரம், 28.10.2017 சனிக்கிழமை, குசராத்தில், ராஜ்கோட்டில், செய்தியாளர்களிடையே பேசும் போது பின்வரும் கருத்தைக் கூறியுள்ளார்.

**“ஜம்மு-காஷ்மீர் மாநிலம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்க வேண்டும். அதேவேளையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவின்படி, காஷ்மீருக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக, ஜம்மு-காஷ்மீர் மக்களுடன் கலந்துரையாடினேன். அவர் களில் பெரும்பாலோர் காஷ்மீருக்குத் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்று கூறினர். அதுவே என் விருப்பமாகவும் உள்ளது” என்று கூறியிருந்தார்.**

ப. சிதம்பரம், “ஜம்மு-காஷ்மீர் நாட்டைத் தனிநாடு ஆக்கிடுங்கள்” என்று கூறவில்லை.

இச்செய்தி அவருடைய சொந்தக் கருத்து என்று காங்கிரசுத் தலைவர்கள் கூறுகிறார்கள். அதையும் ப. சிதம்பரம் மறுக்கவில்லை.

ஆனால், பிரதமர் நரேந்திர மோடி, 29.10.2017 ஞாயிறு அன்று, பெங்களூரில் வானூர்தி நிலையத்தில் பாரதிய சனதாக் கட்சித் தொண்டர்களிடையே பேசும் போது, “காங்கிரசுத் தலைவர்கள், காஷ்மீரிகள் சுதந்தரம் (ஆசாதி) கேட்கி றார்கள் என்று பேசுகிறார்கள் என்று பொத்தாம் பொதுவாகக் கூறுகிறார். இது இந்திய நாட்டைக் காப்பாற்றிப் போராடும் இராணுவத்தை அவமானப்படுத்துவது ஆகும்” என்று இட்டுக்கட்டிப் பொய் பேசுகிறார்.


சுவடி : 42
ஏடு : 6
திசம்பர் 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**‘சிந்தனையாளன்’**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.

தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

பிரதமர் மோடி கூறுவது பொய். ஏன்?

ஷேக் அப்துல்லாவின் மகனும், காஷ்மீர் மாநில முன்னாள் முதல்வரும், காங்கிரசுக் கூட்டில் இந்திய மத்திய அரசில் அமைச்சராக இருந்தவருமான பரூக் அப்துல்லா, 15 ஆண்டுகளுக்குப் பிறகு 29.10.2017 ஞாயிறு அன்று ஸ்ரீநகரில் கூடிய, தம் தேசிய மாநாட்டுக் கட்சிப் பிரதிநிதிகள் 1000 பேர் கொண்ட கூட்டத்தில் பேசிய போது, **“ஜம்மு-காஷ்மீர் மக்கள் இந்தியாவின் பகுதியாக இருக்கிறோம்; இனியும் இருப்போம். ஆனால் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 370-இன்படி, எங்களுக்கு முழுத் தன்னாட்சியைத் திருப்பிக் கொடுங்கள். அதுவே எங்கள் கோரிக்கை” என்று உறுதிபடக் கூறிவிட்டார்.**

இதுவே இன்று வேண்டப்படும் தீர்வு.

அதை விட்டு விட்டு, காங்கிரசு ஆட்சியில் 7 இலட்சம் கொண்ட இந்தியப் படையை நிறுத்தி ஜம்மு-காஷ்மீர் மக்களை அடக்கி ஆண்டதும்-இப்போது அதைவிடக் கூடுதலான எண்ணிக்கையில் இந்தியப் படை வீரர் களை அனுப்பி ஜம்மு-காஷ்மீர் மக்களை அடக்கி வைப்பதும், ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரி மூலம் ஜம்மு-காஷ்மீர் மக்களுடன் பேச்சு வார்த்தை நடத்திட இந்திய அரசு ஏற்பாடு செய்திருப்பதும் தீர்வு ஆகமாட்டா.

**ஜம்மு-காஷ்மீருக்கு, முழுத் தன்னாட்சி (Full Autonomy) அளித்திடுங்கள்!**

**தமிழகத்துக்கு முழுத் தன்னாட்சி அளித்திடுங்கள்.**

**ஒவ்வொரு இந்திய மொழி மாநிலத்துக்கும் முழுத் தன்னாட்சி அளித்திடுங்கள்!**

**இந்தியாவை உண்மையான கூட்டாட்சியாக அமைத் திடுவோம், வாருங்கள்!**

**07-01-2018இல் நடைபெறும் சென்னை கூட்டாட்சி மாநாட்டுக்கு, அனைவரும் வாருங்கள்!**

**01-12-2017 ❖ - வே. ஆனைமுத்து**

## மா.பெ.பொ.க. தோழர்களே! ஆதரவாளர்களே!

## சிந்தனையாளன் வாசகர்களே!

## 7-1-2018 ஞாயிறு சென்னை நிகழ்ச்சிக்கு மாவட்டம் தோறும் சிற்றுந்தில் வந்து குவிந்திடுங்கள் மகிழுந்தில் வந்து மகிழ்ச்சியூட்டுங்கள்


## பெரியார் பெருந்தொண்டர் காஞ்சி அரங்க சானகிராமன் மறைவு



பெரியார் பெருந்தொண்டர் மா.பெ.பொ.க. வேளாண் அணி செயலாளர் காஞ்சி அரங்க சானகிராமன் 27.11.2017 செவ்வாய் இரவு மறைவுற்றார். அன்று இரவே அவரது விழிகள் கொடையாக வழங்கப் பட்டது. 28.11.2017 பிற்பகல் 2 மணிக்கு நினைவேந்தல் கூட்டம் மா.பெ.பொ.க.காஞ்சி மாவட்டச் செயலாளர் சி.நடராசன் தலைமையில் நடைபெற்றது.

க.முகிலன், மா.பெ.பொ.க.உயர்மட்டக்குழு, வாலாசா வல்லவன், மா.பெ.பொ.க., சி.பெரியசாமி, மாநில துணைப் பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க., பொன் காமராசு, தி.மு.க. முன்னாள் நகரப் பொருளாளர், காஞ்சி அமுதன், தமிழக இளைஞர் எழுச்சி இயக்கம், பாவலர் பூங்குன்றன், ஜனதா சம்பத் நெல் அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவர், டாக்டர் விமுனா மூர்த்தி, க.கோதண்டம், முற்போக்கு சமூக நீதிப்பேரவை, புஞ்சை வில்லவன், ஆர்.அண்ணாமலை, தலைமை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கி.இளையவேல், தி.க., மாரிமுத்து (முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்), இறைவன், ஆசிரியர் அச்சமில்லை, குறள்மிழ்தன், திருக்குறள் பேரவை, இ.வளையபாதி, ம.தி.மு.க., சி.வி.எம்.எ.சேகர், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர், சி.வி.எம்.பி.எழிலரசன், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் உட்பட பலர் இரங்கல் உரை ஆற்றினர். இறுதி நிகழ்வில் பங்கேற்ற தோழர்கள் மு.ஜெயப்பிரகாசு, தீ.கோபால கிருட்டிணன், இராசசேகர், இரா.நாராயணமூர்த்தி, க.வெங்கடேசன், மா.கோதண்டபாணி, க.பொன்னப்பன், வில்லியம்பாக்கம் விசயக்குமார், லோ.க.பண்பாளன், வ.வேதகிரி, மு.சந்திரமோகன், சிவக்குமார், ஏகாம்பரம், ஞானம், தாம்பரம் மா.சுப்பிரமணி, ஆனை. பன்னீர் செல்வம், ப.வடிவேலு, கு.கிருட்டிணமூர்த்தி, மணிவன்னன், வேலூர் மோ.சி.சங்கர், சா.குப்பன், புதுவை சீனு.அரிமா பாண்டியன், சென்னை கலைமகள் உள்ளிட்ட தோழர்கள் மற்றும் பல்வேறு அமைப்பு களைச் சார்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**செய்தி : காஞ்சி சி.நடராசன்**



## காஞ்சி தந்த தன்மானச் செம்மல், மா.பெ.பொ.க. மாநில வேளாண் அணிச் செயலாளர்

# அரங்க. சானகிராமன் மறைந்தார்!

**கா**ஞ்சிபுரம் பெருநிலக்கிழாரும், நெல் அரைவை ஆலை உரிமையாளரும், பார்ப்பனர் அல்லதார் இயக்க ஆதரவாளரும் ஆன மு.அரங்கசாமி நாயகர்-இலட்சுமி அம்மாள் மகனாக சானகிராமன் 4.8.1933இல் பிறந்தார். அவருக்கு ஒரே தமக்கை. அவர் பெயர் யசோதா.

சானகிராமன் இளமையில் காஞ்சியில் படித்தார்.

அவர் தந்தையாரும் அ.க.தங்கவேலு முதலியாரும் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்க ஆதரவாளர்கள். இவர்கள் சி.என்.அண்ணாதுரை, சி.வி.எம்.அண்ணாமலை போன்ற இளைஞர்களை 1930களில் ஊக்குவித்தவர்கள்.

சி.வி.எம்.அண்ணாமலை, மு.அரங்கசாமி நாயகரின் மைத்துனர் ஆவார். பின்னாளில் தமிழக அமைச்சராக விளங்கியவர்.

அப்போதே, சிறுவனாக பெரியாருக்கு அறிமுகம் ஆனவர்; அவரோடு படம் எடுத்துக்கொண்டவர், சானகிராமன்.

தந்தை பெரியார் தலைமையில் 6.2.1955இல் அரங்க. சானகிராமன்-சரோசா அம்மையாரை வாழ்க்கைத் துணைவியராக ஏற்றார்.

சிறுதொழில் அதிபர் சி.பி.இராசமாணிக்கம், டி.ஏ.கோபால், அரங்க.சானகிராமன் இவர்கள் ஒத்தவயதினர். செங்கற்பட்டு மாவட்டத் திராவிடக் கழகச் செயல்வீரர்களாகத் திகழ்ந்தவர்கள்.

அண்ணாமலைப் பல்கலையில் 1947இல் படித்த நான், தந்தை பெரியாரின் அணுக்கச் செயலாளராக விளங்கிய என்.வி.நடராசனுடன், 30.6.1947 அன்று காஞ்சியில் சி.வி.எம்.அண்ணாமலைக்கு நடைபெற்ற 3வது திருமணத்தில் பங்கேற்றேன். அன்று இரவு அ.க.தங்கவேலர் தலைமையில் நடந்த தி.க.கூட்டத்தில் நானும் பேசினேன்.

பின்னர், 1964இல் தந்தை பெரியாருடன் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கண்டனக் கூட்டத்தில் காஞ்சியில் பேசினேன்.

அது முதல், எப்போது தந்தை பெரியாரைப் பார்க்க திருச்சிக்கு சி.பி.இராசமாணிக்கமும், அரங்க.சானகிராமனும் வந்தாலும், தவறாமல் என்னுடைய தனிப் பயிற்சிக் கல்லூரிக்கு வந்து, அளவளாவிச் செல்வர். 1971க்குள் எங்கள் நட்பு நெருக்கம் ஆனது. 1971இல் பொதுத் தேர்தலில் போட்டியிட, தந்தை பெரியாரை அணுகினார். என் போன்றோர் அதைத் தடுத்தோம். அமைதியானார்.

தந்தை பெரியார், 24.12.1973இல் மறைந்த பிறகும், அரங்க. சானகிராமன் காஞ்சிநகர திராவிர் கழக செயலாளராகவும், தி.க.மத்திய திராவிடர் கழகச் செயற்குழு உறுப்பினராகவும் விளங்கினார்.

நான் 16.11.1975இல் தி.க.விலிருந்து வெளியேற்றப்பட்டேன். என் கருத்தை ஏற்றுக் கொண்ட தோழர்கள் ஒன்றுகூடி, 8.8.1976இல் தனிக்கட்சியை அமைத்தோம். அதன் செயல்பாடுகளுக்கு காஞ்சி தி.க.தோழர்கள் ஆதரவு அளித்தனர்.

எதிர்பாராதவிதமாக, 23.3.1979இல், புதுதில்லியில், தந்தை பெரியார் நூற்றாண்டுத் தொடக்க விழாவை ஒட்டி, மா.பெ.பொ.க. ஏற்பாட்டால் நடத்தப்பெற்ற பேரணியை, வேளாண் சிக்கலுக்காக, புதுதில்லிக்கு வந்திருந்த அரங்க.சானகிராமன் நேரில் கண்டார்; கவர்ச்சியுற்றார்.

காஞ்சியில் மா.பெ.பொ.க. செயல்பாடுகளுக்கு கே.எம்.பெருமாள், சி.நடராசன், மு.ஜெயப்பிரகாஷ், ஆ.சோதி, நாராயணமூர்த்தி, தீ.கோபாலகிருஷ்ணன், தையல் கடை கோதண்டபாணி கீழம்பி முத்து ஆகியோரை வழிநடத்தும் மா.பெ.பொ.க. படைத்தலைவராக, 2017 நவம்பர் 27 வரை விளங்கினார், சானகிராமன்.

1988 முதல் மா.பெ.பொ.க. வேளாண் அணி மாநிலச் செயலராகச் சிறப்புறப் பணியாற்றினார்.

கடந்த 15 ஆண்டுகளாக, தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீடு, மற்றும் மாநாடுகள் நடைபெற்றாலும் காஞ்சிபுரம் மாவட்டம் எல்லா வடிவங்களிலும், முதலாது பங்களிப்பைச் செய்தது. அதற்கு அடித்தளம் அவர்.

அரங்க.சானகிராமன், வேளாண்மையில் நாட்டம் கொண்டவர்; வேளாண் மக்கள், நெல் அரைவை ஆலை அதிபர்கள், கூட்டுறவு பட்டு நெசவுத் சங்கங்கள், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர விகிதாசார இடஒதுக்கீடு அமைப்புகள் இவற்றில் நீங்காப்பற்றுடையவர்.

காஞ்சியில், பள்ளிகள் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பைச் செய்தவர்.

காங்சி அரிமா சங்கத்தில் பொறுப்பேற்று அதன்வழி காஞ்சிக்கு நலம்பல சேர்த்தவர்.

சி.வி.எம்.அண்ணாமலை குடும்பத்தாரின் நலனில் நீங்காப் பற்றுக் கொண்டவர்.

காஞ்சி மருத்துவர் விமுனாமூர்த்தி, கா.கோதண்டன், புஞ்சை கோதண்டன், பார்ப்பனரல்லாத வழக்குரைஞர்கள், மருத்துவர்கள் இவர்களின் பெருமையைப் பேணுபவர்.

அத்தகு பெருமைகளுக்குரிய எங்கள் கட்சியின் மூத்த தலைவர் காஞ்சி அரங்க.சானகிராமன் அவர்கள், 27.11.2017 திங்கள் இரவு 10.35 மணிக்கு மறைவுற்றார் என்கிற செய்தி அறிந்து மனம் உடைந்தேன்.

எங்கள் இயக்க முன்னோடியை, இழந்து துயருறும் மா.பெ.பொ.க. தோழர்கள் அனைவருக்கும், மறைந்த சானகிராமன் மகன்கள் கவுதமன், அன்பழகன் மேற்கண்ட இருவரின் துணைவியர்கள், மகள்கள் வி.அன்புமணி, மனோரஞ்சிதம், என். அருமைக்கண்ணு பெயரக் குழந்தைகள், சானகிராமனின் தமக்கை யசோதாவின் குடும்பத்தினர், சி.வி.எம்.அண்ணாமலை குடும்பத்தினர் ஆகிய அனைவர்க்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் உரித்தாக்குகிறேன்.

வாழ்க காஞ்சி அரங்க. சானகிராமன் புகழ்!

**- வே.ஆனைமுத்து**

# ஜம்மு-காஷ்மீரின் உரிமைக்குக் குரல் கொடுப்போம் தேசிய இனங்களின் விடுதலையை வென்றெடுப்போம்

க. முகிலன்

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகக் கொந்தளிப்பான சூழல் நிலவி வருகிறது. இதன் தொடக்கப் புள்ளியாக 2016 சூலை 8 அன்று ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்கத்தின் தளபதி 22 அகவையினரான புர்கான்வானி ஆயுதப்படையினரால் கொல்லப்பட்ட நிகழ்வு அமைந்தது. புர்கான்வானியின் இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கில் காஷ்மீரிகள் கலந்துகொண்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் இளைஞர்கள் அரசின் அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். காவல்துறையினர், மத்திய ரிசர்வ் படையினர்மீது கற்களை எறிந்து தாக்கினர். ஆயுதப் படையினர் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் மாண்டனர். துப்பாக்கியால் சுடுவதால் சாவு எண்ணிக்கை அதிகமாவதைத் தடுப்பதற்காகப் பெல்லட்டுகளை (Pellets) ஆயுதப் படையினர் பயன்படுத்தியதாக அரசின் தரப்பில் கூறப்பட்டது. பெல்லட்டுகள் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்டதும் சிறிய நுண்துகள்கள் சிதறி உடல் முழுவதும் துளைத்துச் செல்லும். 2016 சூலை 8-க்குப்பிறகு, பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட பெல்லட்டுகள் பயன்படுத்தப்பட்டன. பெல்லட்டுத் துகள் கண்ணுக்குள் பாய்ந்ததால் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ பார்வையிழந்துள்ளனர்.

2016 சூலை 8 முதற்கொண்டு 16 நாள்களில் ஜம்மு-காஷ்மீரில் நிகழ்ந்த கலவரங்களில் 2,228 மாநிலக் காவல் படையினர், 1,100 மத்திய ரிசர்வ் படையினர், 2,259 குடி மக்கள் காயமடைந்ததாக நடுவண் அரசின் உள்துறை அமைச்சர் இராஜ்நாத்சிங் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதைக் கொண்டே காஷ்மீரில் நிலைமை எந்த அளவுக்குக் கொந்தளிப்பாக இருந்தது என்பதைப் புரிந்து



*2016 சூலை 28 அன்று ஸ்ரீநகரில் அரசின் அடக்குமுறைக்கு எதிராக இளைஞர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்*

கொள்ளலாம்.

செய்தித்தாள்கள் அய்ந்து நாள்களுக்கு முடக்கப்பட்டன. ‘‘காஷ்மீர் ரீடர்’’ என்கிற நாளேடு 2016 அக்டோபர் 2 முதல் திசம்பர் 27 வரை தடைசெய்யப்பட்டது. கைப்பேசிகள், இணைய தள இணைப்பு முதலானவை செயலிழக்கச் செய்யப்பட்டன. 16,000 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பெரும் பகுதியினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காகத் தளைப் படுத்தப்பட்டதாக அரசு கூறியது. போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவர்களின் நெல் வயல்களை ஆயுதப் படையினர் எரித்தனர்; பழத் தோட்டங்களை அழித்தனர். 1989இல் நடந்த கலவரத்துக்குப்பின், 2016இல்தான் பெரிய அளவில் கலவரம் நடந்ததாக ஊடகங்கள் கூறுகின்றன.

இந்தக் கலவரம் குறித்து ஒரு மாதம் வரை வாய்திறக்காமல் இருந்த தலைமை அமைச்சர் மோடி, 2016 ஆகத்து 9 அன்று மத்தியப்பிரதேசத்தில் காஷ்மீர் கலவரம் குறித்து திருவாய் மலர்ந்தார். அப்போதுகூட, காஷ்மீர் மக்கள் தங்க



*2016 சூலை 10 அன்று ஸ்ரீநகரில் ஆயுதப்படையினருக்கும் இளைஞர்களுக்கும் இடையிலான மோதல்*

ளுடைய தன்னாட்சி உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள் என்கிற உண்மையை நரேந்திர மோடி ஏற்க முன்வரவில்லை. மாறாக, "தவறாக வழிநடத்தப்படும் இளைஞர்கள் சிலர் போராட்டம் நடத்துகின்றனர்; ஒவ்வொரு இந்தியனுக்கும் இருக்கும் சுதந்தரம் காஷ்மீரிக்கும் இருக்கிறது; காஷ்மீர் வளர்ச்சியில் புதிய உயர்நிலையை அடைவதற்காக அரசு பாடுபடுகிறது" என்று எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவது போல் பேசினார்.

1988 முதல் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பகை நாட்டின ரால் முற்றுகையிடப்பட்டதுபோல் ஆயுதப் படையின் கண் காணிப்பின்கீழ் இருக்கிறது. குடிமக்கள் ஆறுபேருக்கு ஒரு ஆயுதப்படை வீரர் இருக்கிறார் என்கிற உண்மை இதைப் புலப்படுத்தும். கடந்த முப்பது ஆண்டுகளில் பிறந்த இளைஞர் களிடையே "ஆசாத்" எனும் விடுதலை முழக்கம் ஓங்கி ஒலிக்கிறது. 1947க்குப் பின்னர் பெற்ற தன்னாட்சி உரிமைகளை ஜம்மு-காஷ்மீர் மக்கள் 1964க்குப்பின் படிப்படியாக இழந்தனர். அவற்றை மீட்பதற்காகவே மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

நேரு காலம் முதல் மோடி காலம் வரையில் நடுவண் அரசின் ஆட்சியாளர்கள் காஷ்மீர் மக்களின் உரிமைகளை நசுக்குவதிலேயே முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். பாக்கித்தானைக் காட்டி மிரட்டிப் பணிய வைக்க முயல்கின்றனர். காஷ்மீர் மக்களின் தன்னாட்சி உரிமையைச் சட்டம்-ஒழுங்குப் பிரச்சனையாகச் சுருக்கி. படை வலிமை மூலம் ஒடுக்கிட நினைக்கின்றனர். இதற்குக் காஷ்மீரின் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பதவி ஆசைக்காகத் துணைபோகும் துரோக மும் தொடர்கிறது.

இந்திராகாந்தி தலைமை அமைச்சராக இருந்த போது, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மாநிலங்களுக்கு வழங்கப் பட்டிருந்த உரிமைகளைப் பறிக்கத் தொடங்கினார். அவர் காலத்தில்தான் மாநில அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வி, பொது அதிகாரப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன் விளைவாக உயர்கல்வி தொடர்பான அதிகாரம் முழு மையாக நடுவண் அரசிடம் சென்றது. மருத்துவப் படிப்புக் கான நுழைவுத் தேர்வு என்கிற நச்சு வலையிலிருந்து நம்மால் விடுபட முடியவில்லை. தற்போதுள்ள மோடி ஆட்சியில் மாநில உரிமைகள் பல வகையிலும் நசுக்கப்பட்டு வருகின்றன. ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே பண்பாடு, ஒரே வரி என்று கூறி நாட்டின் பன்முகத் தன்மையையும், மாநில உரிமைகளையும், தேசிய இனங்களின் எழுச்சியையும் ஒடுக்கிட மோடி ஆட்சி தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிற நிலையில், காஷ்மீர் சிக்கலின் வரலாற்றைத் தெளிவாக அறிந்து கொள்வது, மாநிலங்களின் தன்னாட்சிக் கான - உண்மையான கூட்டாட்சிக்கான நகர்வுகளை முன் னெடுக்க உதவும்.

2200 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது காஷ்மீர். கி.மு.3ஆம் நூற்றாண்டில் அசோகர் ஸ்ரீநகர் எனும் நகரத்தை உருவாக்கினார். 1586இல் அக்பர் படையெடுப்பின் மூலம் ஜம்மு-காஷ்மீரைக் கைப்பற்றினார். அப்போது யூசுப்-ஷா-சாக் என்கிற மன்னர் ஆட்சியில் இருந்தார். அதனால் இன்றும் காஷ்மீர் மக்கள் அக்பரைப் போற்றுவதில்லை. 1752இல் ஆப்கானிஸ்தானின் அரசர் அகமத் ஷா அப்தாலி காஷ்மீரைக் கைப்பற்றினார். 1819இல் மகாராசா இரஞ்சித் சிங் ஜம்முவின் தோக்ரா படையின் உதவியுடன் ஆப்கானி யரை விரட்டினார். 1846இல் மகாராசா குலாப்சிங் ஆண்டிற்கு ரூ.75 இலட்சம் தொகையைக் கிழக்கிந்திய கம்பெனிக்குச் செலுத்துவது என்கிற ஒப்பந்தத்தின் பேரில் ஜம்மு-காஷ்மீரின் மன்னரானார்.


*சல்லடைக் கண்கள் போல் காஷ்மீரியின் முதுகைத் துளைத்துள்ள பெல்லட்டுகள்*

பிரித்தானிய ஆட்சியில் இந்தியத் துணைக் கண்டத்தில் மூன்றில் ஒரு பங்கு பகுதி 500-க்கு மேற்பட்ட சிற்றரசர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. பாதுகாப்பு, அயலுறவு, தகவல் தொடர்பு, நாணயம் ஆகியவை தவிர்த்த மற்ற அதிகாரங்கள் சிற்றரசர்களிடமே இருந்தன. ஜம்மு-காஷ்மீரும் இதுபோன்ற தொரு சிற்றரசாக இருந்தது. இந்தியாவுக்கான சுதந்தரம், இந்தியா, பாக்கித்தான் என்கிற நாட்டுப் பிரிவினையுடன் வந்தது. அப்போது, எந்த நாட்டுடன் இணைவது அல்லது தனிநாடாக இருப்பது என்று முடிவு செய்யும் உரிமையைப் பிரித்தானிய அரசு சிற்றரசுகளுக்கு வழங்கியது.

1947 ஆகத்து 15க்கு முன்பாக நிஜாம் ஆட்சியின்கீழ் இருந்த அய்தராபாத்தும், இராஜஸ்தானில் பாக்கித்தான் எல்லையை ஒட்டியிருந்த ஒரு சிற்றரசான ஜுனாகர் தவிர மற்ற சிற்றரசுகள் இந்தியாவுடன் இணைந்துவிட்டன. ஆனால் ஜம்மு-காஷ்மீர் மன்னர் அரிசிங் எந்த முடிவும் எடுக்காமல் இருந்தார். ஜம்மு பகுதியில் இருந்த இந்துக்கள் ஜம்மு-காஷ்மீர் தனி இந்து நாடாக இருக்க வேண்டும் என்று விரும்பினர். ஜம்மு-காஷ்மீரின் முசுலீம் லீக்கும் தனிநாடாக இருப்பதை ஆதரித்தது. ஆனால் ஷேக் அப்துல்லா தலைமை யிலான தேசிய மாநாட்டுக் கட்சி ஜம்மு-காஷ்மீர் இந்தியாவுடன் தன்னாட்சி உரிமைகளைக் கொண்டதாக இணைய வேண்டும் என்று கூறியது. 1944இல் மன்னராட்சிக்கு எதிராகக் "காஷ்மீரை விட்டு வெளியேறு" இயக்கத்தை நடத்திய ஷேக் அப்துல்லாவை மன்னராட்சி சிறையில் அடைத்தது.



*1947 சூன் 7 அன்று மவுண்ட் பேட்டன் “பிரிவினைத் திட்டத்தை” வெளியிட்டார். அவருடன் நேரு, ஜின்னா, வைசுராய் ஆலோசகர் உள்ளனர்.*

1947 சூலை மாதம் காஷ்மீருக்குச் சென்ற இந்தியாவின் கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் மன்னர் அரிசிங்கிடம் 1947 ஆகத்து 15க்குள் இந்தியாவுடன் இணைவதா, பாக்கித் தானுடன் இணைவதா என்பதை முடிவு செய்யுமாறு வலியுறுத்தினார். ஆனால் மன்னர் அரிசிங் எந்த முடிவும் எடுக்கவில்லை. அதனால் 1947 ஆகத்து 15க்குப்பின் பாக்கித் தான் எல்லைப் பகுதியில் இருந்த முரட்டுப் பழங்குடியினர் பாக்கித்தான் படையின் உதவியுடன் ஜம்மு-காஷ்மீருக்குள் ஊடுருவிப் பல பகுதிகளைக் கைப்பற்றினர். வேறு வழியில் லாமல் மன்னர் அரிசிங் 1947 அக்டோபர் 26 அன்று இந்தியா வுடன் இணைவதாக மவுண்ட்பேட்டனுக்கு மடல் அனுப்பி னார். 1947 அக்டோபர் 27 அன்று இணைப்பு குறித்த ஒப்பந்தம் மவுண்ட்பேட்டனுக்கும் அரிசிங்கிற்கும் இடையே கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் ஜம்மு-காஷ்மீர் இந்தியாவுடன் இணைதல் என்பது மக்களின் ஒப்புதல் பெற்ற பிறகே இறுதியாகும் என்று கூறப்பட்டிருந்தது. மேலும் அயலுறவு, பாதுகாப்பு, தகவல் தொடர்பு தவிர்த்து மற்ற அதிகாரங்கள் ஜம்மு-காஷ்மீருக்கே உண்டு என்றும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. 1947 செப்டம்பர் 29 அன்று சிறையி லிருந்து விடுதலை செய்யப்பட்ட ஷேக் அப்துல்லாவை மன்னர் அரிசிங் அக்டோபர் 27 அன்று ஜம்மு-காஷ்மீரின் அவசரகால தலைமை நிருவாகியாக (Emergency Administrator for the State) நியமித்தார்.


1947 அக்டோபர் 27 அன்றே இந்தியப் படைகள் ஸ்ரீநகரில் இறக்கப்பட்டன. இந்தியப் படைகள் பாக்கித்தானி லிருந்து ஊடுருவியவர்களுக்கு எதிராகத் தாக்குதல்களைத் தொடுத்தன. 1947 நவம்பர் 1-ஆம் நாள் இந்தியா, பாக்கித்தான் கவர்னர் ஜெனரல்கள் கூடிப் பேசினர். ஜம்மு-காஷ்மீர் மக்களின் பொதுக் கருத்தை அறிந்த பின் முடிவு செய்யலாம் என்று மவுண்ட்பேட்டன் கூறினார். இந்தியப் படைகளை ஜம்மு-காஷ்மீர் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்ற தால், பொது கருத்துக் கணிப்பில் பாக்கித்தானுக்குத் தோல்வி ஏற்படும் என்ற அச்சத்தால் ஜின்னா அக்கருத்தை ஏற்க வில்லை.

இருதரப்புப் பேச்சு வார்த்தை தோல்வியடைந்ததால், ஜம்மு-காஷ்மீர் சிக்கலை இந்தியா ஐ.நா. மன்றத்துக்கு 1948 சனவரி 1 அன்று கொண்டு சென்றது. ஐ.நா. பாதுகாப்பு அவை இதற்காக ஒரு ஆணையத்தை அமைத்தது. அந்த ஆணையத்தின் பரிந்துரையையும் பாக்கித்தான் ஏற்க மறுத்தது. அதனால் இந்தியப் படைகள் தங்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தின. அதன்பிறகுதான் 1949 சனவரி 1 அன்று இந்தியா-பாக்கித்தான் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆயினும் ஜம்மு-காஷ்மீரின் ஒருபகுதி பாக்கித்தானிடமே இருந்தது. இது பாக்கித்தான் வசம் உள்ள காஷ்மீர் எனப் படுகிறது. ஐ.நா. மன்றத்துக்குக் கொண்டு சென்றதால், இன்றளவும் காஷ்மீர் ஐ.நா.வில் விவாதிக்கப்படும் பொருளாக இருக்கிறது.

ஜம்மு-காஷ்மீரில் மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அரசு அமைக்கப்பட வேண்டும்; மக்களுக்கான அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. எனவே மன்னர் அரிசிங் ஷேக் அப்துல்லாவை 1948 மார்ச்சு 1 முதல் பிரதமராக நியமித்தார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பணி 1946 திசம்பரில் தொடங்கியது. காங்கிரசுக் கட்சியும் காந்தி யாரும், சுதந்தரம் பெற்றபின் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை அளித்து, அவர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட அவையால் இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் என்று பல ஆண்டு களாக மக்களிடம் கூறிவந்தனர். ஆனால் வெறும் 14 விழுக் காடு வாக்குரிமைப் பெற்றவர்களால் 1946 தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட அவையே அரசமைப்புச் சட்ட அவையாகச் செயல்பட்டது. பெரியார் இதை வன்மை யாகக் கண்டித்தார். இது ஒரு அரசியல் மோசடி என்றார்.

1949 நவம்பர் மாதத்திற்குள் அரசமைப்புச் சட்ட அவையால் இந்திய அரசமைப்புச் சட்டம் இறுதி செய்யப்பட வேண்டியிருந்தது. அந்நிலையில், ஜம்மு-காஷ்மீரில் மன்ன ராட்சியில் திவானாக இருந்தவரும், இந்திய அரசமைப்புச் சட்ட வரைவுக்குழுவின் உறுப்பினராக இருந்தவருமான கோபால் சாமி அய்யங்கார் 1949 அக்டோபர் 6 அன்று அரசமைப்புச் சட்ட அவையில் ஒரு விவரத்தை முன்வைத்தார். ஜம்மு-காஷ்மீர் தவிர, மற்ற சிற்றரசுகள் இந்தியாவுடன் எந்த நிபந்தனையும் இல்லாமல் இணைந்ததால், இந்திய அரசமைப்புச் சட்டம் அவற்றுக்கு முழுமையாகப் பொருந்தும். பாதுகாப்பு, அயலுறவு, தொலைத்தொடர்பு தவிர்த்த மற்ற செய்திகள் குறித்து சட்டம் இயற்றும் அதிகாரம் ஜம்மு-காஷ்மீருக்கு உண்டு என்று இணைப்பு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே, ஜம்மு-காஷ்மீருக்குச் சிறப்புச் சலுகை அளித்திட இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்பதே கோபால்சாமி அய்யங்கார் முன்வைத்த வாதமாகும். இதன் அடிப்படையில்



*11 ஆண்டுகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் 1953 ஆகத்து 8 அன்று ஷேக் அப்துல்லா தன் மகன் பாரூக், மனைவி, மகளுடன்*

தான் ஜம்மு-காஷ்மீருக்குச் சிறப்பு அதிகாரம் வழங்கும் 370ஆவது உறுப்பு அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது.

அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 370இன்படி, இந்திய நாடாளுமன்றம் பாதுகாப்பு, அயலுறவு, தகவல் தொடர்பு தவிர்த்த நடுவண் அரசின் பட்டியலில் உள்ள மற்ற அதிகாரங்கள், பொதுப் பட்டியலில் உள்ள அதிகாரங்கள், எஞ்சிய அதிகாரங்கள் குறித்து இயற்றும் சட்டங்கள் ஜம்மு-காஷ்மீருக்குப் பொருந்தாது. எனவே நேரு நடுவண் அரசின் அதிகார வரம்பை ஜம்மு-காஷ்மீருக்கு விரிவுபடுத்த விரும்பினார். ஜம்மு-காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லாவுடன் பேசினார். அதன் அடிப்படையில் 1952 சூலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இது தில்லி ஒப்பந்தம் எனப்படுகிறது.

தில்லி ஒப்பந்தத்தின் முதன்மையான கூறுகள் :

1. ஜம்மு-காஷ்மீரில் வாழும் குடிமக்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 5ஆவது பிரிவின்படி இந்தியக் குடிமக்களாவர். அதேசமயம் ஜம்மு-காஷ்மீர் குடிமக்களுக்குக் காஷ்மீர் அரசு தனித்தன்மையான உரிமைகளையும், சலுகைகளையும் சட்டமன்றத்தின் மூலம் வழங்கிக் கொள்ளலாம்.
2. இந்திய தேசியக் கொடி முதல்நிலையைப் பெறும். ஜம்மு-காஷ்மீருக்கென்று தனிக்கொடி வைத்துக் கொள்ளலாம்.
3. ஜம்மு-காஷ்மீர் மாநில அரசின் தலைவர் சதார்-அய்-ரியாசட் (ஆளுநர் பதவி போன்றது) என்று அழைக்கப்படுவார். இவர் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார். இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறவேண்டும்.
4. எஞ்சிய அதிகாரங்கள் ஜம்மு-காஷ்மீர் அரசிடம் இருக்கும்.
5. உச்சநீதிமன்றத்தின் அதிகார எல்லை ஜம்மு-காஷ்மீருக்கும் பொருந்தும். ஆனால் அது மாநிலங்களுக்கு இடையேயான சிக்கல்கள், நடுவண் அரசுக்கும் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கும் இடையிலான சிக்கல்களுக்கு மட்டுமே பொருந்தும்.
6. இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகார வரம்பு குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களைப் பொருத்த அளவில் மட்டும் ஜம்மு-காஷ்மீருக்குப் பொருந்தும். சட்டமன்றத் தேர்தல் தொடர்பான முழு அதிகாரமும் ஜம்மு-காஷ்மீர் மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் இருக்கும்.

தில்லி ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. இதுதொடர்பாக 1954இல் குடியரசுத் தலைவர் ஆணை வெளியிட்டார். அந்த ஆணையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதி 34ஏ-வின்படி ஜம்மு-காஷ்மீர் தன் குடிமக்களுக்குச் சிறப்பு உரிமைகளையும் சிறப்புச் சலுகைகளையும் அளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. குடிமக்கள் (State subjects) என்ற சொல்லுக்குப் பதிலாக நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் (Permanent Residents) என்று மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

### ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம்

அரசின் தலைவர் என்ற முறையில் இளவரசர் கரண்சிங் 1951 மே 1 அன்று அரசமைப்புச் சட்ட அவை அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டார். 21 அகவை நிரம்பிய அனைவரும் வாக்காளர்களாகப் பட்டியலிடப்பட்டிருந்தனர். 1951 ஆகத்து மாதம் சட்டமன்றத்துக்குத் தேர்தல் நடந்தது. அக்டோபர் மாதம் சட்டமன்றம் கூடியது. இதுவே அரசமைப்புச் சட்ட அவையாகச் செயல்பட்டது. 1956 நவம்பர் 17 அன்று ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம் நிறைவேறியது. 1957 சனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த அரசமைப்புச் சட்டத்தின் மூலம் மன்னர் வாரிசு உரிமை ஒழிக்கப்பட்டது. அரசின் தலைவர் சதார்-அய்-ரியாசத் (Sadar-i-Riyasat) என்று அழைக்கப்படுவார். இவர் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார். அரசமைப்புக்கு முரணாக அவர் செயல்பட்டால், சட்டமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடன் அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

இந்த அரசமைப்புச் சட்டத்தின் முகவுரை, ''ஜம்மு-காஷ்மீர் மக்களாகிய நாங்கள் மனமார்ந்த உறுதிப்பாட்டுடன் எழுதிக்கொண்ட அரசமைப்புச் சட்டம்'' என்று தொடங்குகிறது. ''1947 அக்டோபர் 26 அன்று இந்தியாவுடன் இணைந்த நாங்கள், இந்திய ஒன்றியத்துடனான ஜம்மு-காஷ்மீரின் உறவுகளை இந்த அரசமைப்புச் சட்டத்தின்மூலம் வரையறுத்துள்ளோம்'' என்று முகவுரையில் கூறப்பட்டுள்ளது.

### நிரந்தரக் குடிமக்கள் (Permanent Residents)

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதி 35-ஏ, ஜம்மு-காஷ்மீரின் நிலையான குடிமக்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்து சட்டம் இயற்றிக் கொள்ளும் அதிகாரத்தை ஜம்மு-காஷ்மீருக்கு வழங்குகிறது. அதன்படி ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்தில் நிரந்தரக் குடிமக்கள் குறித்தும் அவர்களின் சிறப்பு உரிமைகள் குறித்தும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மறைந்த அரசர் குலாப் சிங் சாகிப் பகதூர் ஆட்சி தொடங்கிய காலம் (1848) முதல் பிறந்து இங்கேயே குடியிருப்பவர்கள், 1942இல் சம்வத் ஆண்டு தொடங்குவதற்குமுன் இங்கே குடியமர்ந்து தொடர்ந்து நிலையாக வாழ்பவர்கள் மற்றும் 1954 மே 14க்குமுன் சட்டப்படி அசையா சொத்து வாங்கி, பத்து ஆண்டுகளுக்குமேல் குடியிருப்பவர்கள் ஜம்மு-காஷ்மீரின் நிரந்தரக் குடிமக்கள் ஆவர் என்று அம்மாநில அரசமைப்புச் சட்டம் வகுத்துள்ளது.

நீண்டகாலமாக ஜம்மு-காஷ்மீரை மற்ற மாநிலத்தவர்கள் குறிப்பாகப் பஞ்சாபியர்கள் சுரண்டி வருவதைத் தடுப்பது நிரந்தரக் குடிமக்கள் சட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். வேலை வாய்ப்பு, கல்வி உதவித் தொகை. அரசின் பிற சலுகைகள் காஷ்மீர் மக்களுக்கே கிடைக்க வேண்டும் என்பது இதன் முதன்மையான நோக்கமாகும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதி 15(1)இன்படி, பிறந்த இடம் காரணமாகப் பாகுபாடு காட்டக் கூடாது; விதி 16(1)இன்படி வேலையில் சம வாய்ப்பு; விதி 19(1)(f)இல் எந்த இடத்திலும் சொத்து வாங்க, வைத்திருக்க, விற்க உரிமை உண்டு; 19(1)(e)இல் எந்தப் பகுதியிலும் நிலையாக வாழும் உரிமை உண்டு. ஆனால் 35-ஏ-இன்படி, ஜம்மு-காஷ்மீரில் இவை இந்தியாவின் பிற பகுதிகளில் வாழும் குடிமக்களுக்குப் இது பொருந்தாது.

ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப் படுவதற்கு முன்பே அம்மாநில அரசியலில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. நேருவுக்கும் ஜம்மு-காஷ்மீரில் பிரதமராக இருந்த ஷேக் அப்துல்லாவுக்கும் கருத்து முரண்பாடு முற்றியது. 1953 ஆகத்து 8 அன்று ஷேக் அப்துல்லா பதவியிலிருந்து நீக்கப்பட்டார்; அடுத்த நாள் கைது செய்யப்பட்டார். தேசிய மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்த பக்ஷிகுலாம் முகமது நேரு வால் பிரதமராக்கப்பட்டார். அதுமுதல் ஜம்மு-காஷ்மீரில் நடுவண் அரசின் ஆதிக்கம் வளரத் தொடங்கியது. 1954இல் ஜம்மு-காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்ததற்கான மக்களின் ஒப்புதல் சட்டமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டது. ஷேக் அப்துல்லா 11 ஆண்டுகள் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்யுமாறு மக்கள் தொடர்ந்து குரல்கொடுத்து வந்தனர்.

நேருவின் திட்டப்படி ஷேக் அப்துல்லா 1954 ஏப்பிரல் 6 அன்று விடுதலை செய்யப்பட்டார். காஷ்மீர் சிக்கலுக்குத் தீர்வு காண பாக்கித்தான் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஷேக்கைப் பாக்கித்தானுக்கு அனுப்பினார் நேரு. ஷேக் பாக்கித்தானில் இருந்தபோதே நேரு 1964 மே 27 அன்று இறந்தார். லால்பகதூர் சாஸ்திரி இந்தியாவின் பிரதமரானார். அதன்பின் நடுவண் அரசின் அதிகாரங்கள் ஜம்மு-காஷ் மீருக்கு வேகமாக விரிவுபடுத்தப்பட்டன. இந்திய அரசமைப்புச் சட்ட விதிகள் 356, 357 ஆகியவை ஜம்மு-காஷ்மீர் சட்ட மன்றத்தால் ஏற்கச் செய்யப்பட்டது. இவற்றின்படி, நடுவண் அரசு ஜம்மு-காஷ்மீர் ஆட்சி அதிகாரத்தையும், சட்டமன்ற அதிகாரத்தையும் எடுத்துக் கொள்ளலாம். ஜம்மு-காஷ்மீர் அரசின் தலைவர் பெயர் சதார்-ஐ-ரியாசட் என்பது ஆளுநர்




*பத்திரிகைச் சுதந்தரம் பறிக்கப்படுவதைக் கண்டித்து 2016 சூலை 16 அன்று ஊடகவியலாளர் கண்டன ஆர்பாட்டங்கள்*

என்றும், பிரதமர் என்ற பெயர் முதலமைச்சர் என்றும் மாற்றப்பட்டது. ஆளுநர் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப் படும் நிலை ஒழிக்கப்பட்டு, குடியரசுத் தலைவரால் நியமிக் கப்படும் நிலை ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு தன்னாட்சி உரிமைகளும், அடையாளங்களும் அழிக்கப்படுவதைக் காஷ்மீர் மக்கள் கடுமையாக எதிர்த்தனர்.

1974 நவம்பர் 13 அன்று பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கும் ஷேக் அப்துல்லாவுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி ஷேக் அப்துல்லா முதலமைச்சரானார். ஆனால் காங்கிரசுக் கட்சியின் சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் ஷேக் முதலமைச்சரானதை இளைஞர்கள் எதிர்த்தனர். 1977, 1983 தேர்தல்களில் ஷேக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி அறுதிப் பெரும்பான் மையுடன் ஆட்சி அமைத்தது. இதற்கிடையில் ஷேக் அப்துல்லாவின் மறைவுக்குப்பின் அவருடைய மகன் பாரூக் அப்துல்லா முதலமைச்சரானார். காஷ்மீர் தனிநாடாக வேண்டும் என்று இளைஞர்கள் போராடிக் கொண்டிருந்த போதிலும் பத்து ஆண்டுகளில் பெரிய அளவில் வன்முறை நிகழவில்லை.

இந்நிலையில் 1984 சூலை 2 அன்று இந்திராகாந்தி, பாரூக் அப்துல்லா கட்சியின் 12 சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி ஆட்சியைக் கவிழ்த்தார். இத்திட்டத்துக்கு ஆளுநர் பி.கே. நேரு ஒத்துழைக்க மறுத்ததால், அவரைக் குசராத்துக்கு மாற்றிவிட்டு, நெருக்கடி நிலைக் காலத்தில் தில்லியில் துணை நிலை ஆளுநராக இருந்தபோது அடாவடித்தனமாகச் செயல்பட்ட ஜக்மோகனை ஜம்மு-காஷ்மீர் ஆளுநராக நியமித்தார். பாரூக்கிற்குப்பின் ஜி.எம். ஷா முதல்வராக்கப்பட்டார். பாரூக்கை முதல்வர் பதவியி லிருந்து நீக்கியதையும், நடுவண் அரசின் அத்துமீறல்களையும் கண்டித்து காஷ்மீர் மக்கள் போராடினர். ஆளுநர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஜக்மோகன் காஷ்மீரி தேசிய இன உணர்வை ஒடுக்கும் நடவடிக்கைகளை எடுத்தார்.


பாரூக் அப்துல்லாவின் பதவி ஆசை காரணமாக 1986 நவம்பர் 7 அன்று காங்கிரசு - தேசிய மாநாட்டுக் கட்சியின் கூட்டணி ஆட்சி ஏற்பட்டது. பாரூக் முதலமைச்சரானார். பாரூக்கின் சந்தர்ப்பவாத அரசியலை மக்கள் எதிர்த்தனர். இளைஞர்கள் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி என்ற

பெயரில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாக்கித்தான் அரசு தன் எல்லையில் முகாம்கள் அமைத்து காஷ்மீர் இளைஞர்களுக்குப் பயிற்சியும் ஆயுதமும் அளித்து இந்தியா வுக்குள் அனுப்பிக் கொண்டே இருக்கிறது. 1988 முதல் கடந்த முப்பது ஆண்டுகளாக இந்திய அரசின் ஆயுதப் படையினருக்கும் ஆயுதமேந்திய இளைஞர்களுக்கும் இடையே மோதல்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. ஜம்மு-காஷ்மீர் மக்கள் தங்கள் சுயமரியாதையும், அடையாளங்களும் காக்கப்படும் வகையிலான தன்னாட்சி உரிமைகள் மீட்டெடுக் கப்பட வேண்டும் என்பதில் முனைப்புடன் இருக்கின்றனர்.

1954 முதல் 1994 வரையிலான காலத்தில் இந்திய அரசின் ஏகாதிபத்திய மனப்போக்கின் காரணமாக, குடியரசுத் தலைவரின் 47 ஆணைகள் மூலம் காஷ்மீரின் தன்னாட்சி உரிமைகள் பறிக்கப்பட்டன. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 395 உறுப்புகளில் 260 உறுப்புகள் ஜம்மு-காஷ்மீருக்கு நீட்டிக்கப்பட்டன. நடுவண் அரசின் அதிகாரப் பட்டியலில் உள்ள 97 விதிகளில் 94 விதிகளும், பொதுப் பட்டியலில் உள்ள 47 விதிகளில் 26 விதிகளும் ஜம்மு-காஷ்மீருக்கு நீட்டிக்கப்பட்டன. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 370க்கு இவை முற்றிலும் எதிரானவை ஆகும். இந்திய அரசின் இந்த உரிமைப் பறிப்பு நடவடிக்கைகளே ஜம்மு-காஷ்மீரின் கொந்தளிப்புக்குக் காரணமாகும்.

1996இல் பாரூக் அப்துல்லா மீண்டும் முதலமைச்சரான போது ஆகத்து 11 அன்று மாநில சுயாட்சி குறித்து ஆராய ஒரு குழுவை அமைத்தார். அக்குழுவின் அறிக்கை 2000 சூன் 26 அன்று சட்டமன்றத்தால் ஒருமனதாக ஏற்கப்பட்டது. 1953இல் ஷேக் அப்துல்லா பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு முன் ஜம்மு-காஷ்மீருக்கு என்னென்ன உரிமைகள் இருந் தனவோ அவை மீண்டும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை கூறியது. 2000 ஆகத்து 4 அன்று இந்த அறிக்கையை ஆய்வு செய்த வாஜ்பாய் அமைச்சரவை இதை ஏற்க மறுத்தது. கடிகாரத்தின் முள்ளைப் பின்னோக்கி நகர்த்துவது போன்றது; இயற்கை நியதிக்கு முரணானது; இந்தியாவுடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்கிற ஜம்மு-காஷ்மீர் மக்களின் விருப்பத்துக்கு எதிரானது என்று அடா வடித்தனமாக வாஜ்பாய் கருத்துரைத்தார்.

2010ஆம் ஆண்டில் ஜம்மு-காஷ்மீரில் பெருங்கலவரம் ஏற்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் 130 பேர் இறந்தனர். அப்போது மன்மோகன் சிங் தலைமையில் இருந்த நடுவண் அரசு ஒரு தூதுக்குழுவை அமைத்தது. அக்குழு 2011இல் அதனுடைய அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையில், 1952க்குப்பிறகு ஜம்மு-காஷ்மீருக்கு விரிவாக்கம் செய்யப் பட்ட நடுவண் அரசின் சட்டங்களை மறுஆய்வு செய்ய வேண்டும்; அரசமைப்புச் சட்டத்தில் விதி 370 தற்காலிக மானது என்று இருப்பதைச் சிறப்பு ஏற்பாடு என்று மாற்ற வேண்டும்; சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் கடுமை யான குற்றச்சாட்டு இல்லாதவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆனால் நடுவண் அரசு இந்த அறிக்கை மீதும் எந்தவொரு நடவடிக் கையும் எடுக்கவில்லை. வழக்கம்போல் காஷ்மீர் மக்களுக் குத் துரோகம் இழைக்கப் பட்டது. தோற்கடிக்கப்பட்ட - உரிமைகள் பறிக்கப் பட்ட மக்களாக இருப்ப தை ஏற்கமறுத்தே காஷ் மீர் மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.



*மோடி அரசால் காஷ்மீர் போராளிகளுடன் பேச்சுவார்த்தைக்கு அனுப்பப்பட்ட தினேசுவர சர்மா*

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஜம்மு-காஷ்மீரில் இருந்துவரும் கொந்தளிப்பான நிலைமை யையொட்டி, நடுவண் அர சும் நடவடிக்கை எடுப்பது போல் காட்டிக் கொள்வ தற்காக, புலனாய்வுத் துறையின் முன்னாள் இயக்குநரான தினேசுவர் சர்மா என்பவரைச் சிறப்புத் தூதுவராக 23.10.2017 அன்று அமர்த்தியுள்ளது. இவர் காஷ்மீரில் சிலருடன் பேசிக் கொண்டிருக்கிறார்.

இந்த நவம்பர் மாதம், கால்பந்தாட்ட வீரராக இருந்து பிறகு லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தில் சேர்ந்த மஜித்கான் என்பவர், இணையதளத்தில் தன் தாயின் வேண்டுகோளை ஏற்று, சரணடைந்தார். இதையொட்டி இந்திய அரசு புதிய சரணடையும் திட்டத்தை அறிவித்துள்ளது. ஜம்மு-காஷ்மீர் சிக்கல் அரசியல் உரிமை சார்ந்தது என்பதைத் திசைதிருப்பும் நாடகமே இத்திட்டம்.

மேற்கு பாக்கித்தான் அகதிகளின் அமைப்பான “குடி மக்களாகிய நாங்கள்” அமைப்பும், காஷ்மீர் பார்ப்பனர் களான பண்டிட் சமூகத்தைச் சேர்ந்த சாரு வாலி கன்னா என்பவரும் அரசமைப்புச் சட்டத்தின் விதிகள் 35ஏ, 370 ஆகியவற்றை நீக்குமானறு கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. நடுவண் அரசு நீண்டகாலமாகத் தன்னுடைய கொள்கைகளை உச்சநீதிமன்றத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது. உச்சநீதிமன்றமும் ஆளும் வர்க்கத்தின் குறிப்பறிந்து தீர்ப்புகளை வழங்கி வருகிறது. அதனால் காஷ்மீரின் உரிமைகளைப் பாதுகாக்கும் 35-ஏ, 370 ஆகிய விதிகளுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பார்ப்பனர்கள் உள்ளிட்ட மேல்சாதியினர், பணக்காரர்கள், முதலாளிகளைக் கொண்ட இந்திய ஆளும் வர்க்கம் தன் பொருளியல் சுரண்டலுக்கும், சமூக ஆதிக்கத்திற்கும் ஏற்ற தன்மையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தை இயற்றிக் கொண்டது. இதன்மூலம் தேசிய இனங்களின் உரிமைகளை நசுக்கியது. இந்தியாவில் உள்ள மொழிவழித் தேசிய இனங்கள், காஷ்மீரின் உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதன் மூலமே தங்களின் தன்னாட்சிக்கு வழிகாண முடியும். தேசிய இனங்களின் தன்னாட்சியே உண்மையான மக்களாட்சி யாகும். ஒற்றை அதிகார மய்யப்படுத்தப்பட்ட ஆட்சி முறை யைத் தகர்த்து, தன்னாட்சி கொண்ட தேசிய இனங்களின் உண்மையான கூட்டாட்சியை அமைப்போம். ❖

# சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2018
# வெளியீட்டு விழா

நாள் : **07-01-2018, ஞாயிறு** ★ நேரம் : காலை 10 மணிமுதல் 1.00 மணிவரை
இடம் : **சந்திரசேகர் திருமண மண்டபம்** மேற்கு மாம்பலம், சென்னை-33.
**அரங்க சானகிராமன் அரங்கம்**

வரவேற்புரை :

தாம்பரம் **மா. சுப்பிரமணி,** காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர்

முன்னிலை :

**பா.வை. அருண்மொழி,** செ.மா. துணைச் செயலாளர்
வரகூர் **மா. நாராயணசாமி,** பெரம்பலூர் மா. செயலாளர்
வேலூர் **மு. சாமிநாதன்**
**இரா. கலியபெருமாள்,** திருச்சி மா. செயலாளர்

தலைமை :

**வாலாசா வல்லவன்,** சென்னை மாவட்டச் செயலாளர்

***மலரை வெளியிட்டுச் சிறப்புரை :***

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி **து. அரிபரந்தாமன்**

***மலர் படிகள் பெறுவோர் :***

மாம்பலம் **ஆ. சந்திரசேகர்**
இலக்கிய ஆர்வலர்

**பொ. சுப்பிரமணியன்**
திருவண்ணாமலை மா. செயலாளர்

**ஆ.கு. ஆறுமுகம்**
விழுப்புரம் மா. செயலாளர்

**மு. ஜெயப்பிரகாசு**
காஞ்சி நகரச் செயலாளர்

**செ. ஆனையப்பன்**
சேலம் மா. செயலாளர்

**கோ.மு. கருப்பையா**
பெங்களூர் நகர அமைப்பாளர்

**முத்து அன்பழகன்**
நாகை மா. செயலாளர்

**நா. மதனகவி**
வாணியம்பாடி நகரச் செயலாளர்

***கருத்துரை :***

புலவர் **கி.த. பச்சையப்பன்**
ஒருங்கிணைப்பாளர், தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

கவிஞர் **தமிழேந்தி** (பா வீச்சு)
செயலாளர், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்

**ந. கருணாகரன்**
புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், திருச்சி மாவட்டச் செயலாளர்

**கோ. கோதண்டராமன்**
வேளாண் அணி துணைச் செயலாளர்

# தமிழகத்திலிருக்கிற நாம் :
# இந்திய அரசின் 1961 முடிவை மாற்றிட, நாமே எல்லாம் செய்தோம்!
# தமிழக அரசின் 1979 முடிவை மாற்றிட, நாமே காரணர் ஆனோம்!

# இப்போது கூட்டாட்சி காண வாருங்கள்!

இந்திய மக்கள் தொகையில் சரிபாதிக்கு மேற்பட்டோர் சமுதாயத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப் பட்டவர்கள்; 20 விழுக்காடு மக்கள் தீண்டப்படாதோர்; 8 விழுக்காடு மக்கள் பழங்குடிகள். இவர்களின் கூட்டுத் தொகை, மொத்த மக்கள் தொகையில் 83 விழுக் காட்டுக்கு மேல் ஆகும்.

இந்தப் பெருங்கூட்டத்தினரின் சமூக - அரசியல் - பொருளாதார விடுதலைக்காக அல்லும் பகலும் உழைத்தனர் தந்தை பெரியாரும், மாமேதை டாக்டர் அம்பேத்கரும்.

**இது உண்மை வரலாறு. இதை நாம் உணர வேண்டும்.**

மாமேதை அம்பேத்கர் - சூத்திரர், ஆதிசூத்திரரின் சமூக விடுதலைக்கான இந்துச் சட்டத் திருத்த மசோதாவை, 1947இல் இந்திய நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார். அதை இந்திய அரசு 1955இல் அடியோடு புறக்கணித்தது.

தந்தை பெரியார் நால்வருண ஒழிப்புக்காக, 1957 நவம்பரில் அரசியல் அமைப்பு விதிகளை எரித்தார்; 19.12.1973 வரை அதற்காகவே குரல் கொடுத்தார்.

இவை இன்னும் நிறைவேறவில்லை.

மாமேதை அம்பேத்கர் 1950இல், அரசமைப்புச் சட்ட விதி 16(4)இல்-1) பிற்படுத்தப்பட்டோர், 2) தீண்டப் படாதோர், 3) பழங்குடிகள் ஆகிய மூன்று வகுப்பாருக்கும் மத்திய அரசு, மாநில அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு அளித்தார்.

தந்தை பெரியார் 1950இல் போராடி - அரசியல் சட்டத்தில் கல்வியில் மேலே கண்ட மூன்று வகுப்பாருக்கும் 2.6.1951இல், விதி 15(4)இன்மூலம் இடஒதுக் கீடு பெற்றுத் தந்தார்.

ஆனால், டாக்டர் அம்பேத்கர் விதி 340இல் வழி செய்தபடி, பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வியிலும் அரசு வேலையிலும் என்னென்ன செய்ய வேண்டும் என்று, **1955இல் பரிந்துரைத்த காகா கலேல்கர் குழு அறிக்கையை, 1961 மே மாதம் இந்திய அமைச்சரவையைக் கூட்டி,**

**1) கலேல்கர் பரிந்துரைத்த பிற்படுத்தப்பட்டோர் சாதிப் பட்டியலை இந்திய அரசு ஏற்பது இல்லையென்றும்,**




**2) இந்திய அரசு வேலையில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு தருவதில்லை என்றும் முடிவு செய்தார், பிரதமர் நேரு!**

**1961இல் பிரதமர் நேரு செய்த அந்த அநீதியான முடிவை மாற்றிட வேண்டும் என்று, முதன்முதல் 8.5.1978இல், இந்திய அரசிடம் நேரில் கோரிக்கை வைத்தது மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி! இது வரலாறு!**

1978இல், செப்டம்பர் முதல், இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று இக்கோரிக்கைக்கு வலிமை சேர்த்தது, மா.பெ.பொ.க.

அதன் விளைவாகவே, 1.1.1979இல் மண்டல் குழு அமைந்தது; 1982இல் ஏப்ரலில் மண்டல் பரிந்துரை நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டது.

06.08.1990 அன்று, வி.பி. சிங் அரசு மத்திய அரசு வேலையில் இந்தியப் பிற்படுத்தப்பட்டோருக்கு முதன்முதலாக தனி இடஒதுக்கீடு வழங்கியது.

**இது, மா.பெ.பொ.க. இந்திய அளவில் செய்த அரிய சாதனை! இதுதான் உண்மை வரலாறு.**

தமிழகத்தில், 67.5 விழுக்காடு உள்ள பிற்படுத்தப் பட்டோருக்கு 60 விழுக்காடு இடஒதுக்கீடு தரவேண்டு மென்று, 19.8.1979இல், முதன்முதல், தமிழக அரசிடம் கோரியது நாம்! நாம் கோரியது 60 விழுக்காடு இடஒதுக்கீடு; தமிழ்நாட்டு அ.தி.மு.க. அரசு 1-2-1980 இல் அளித்தது 50 விழுக்காடு இடஒதுக்கீடு!

**இது தமிழக அளவில் நாம் செய்த மிகப்பெரிய சாதனை!**

தில்லியில் கூட்டாட்சி மாநாட்டில், 19.10.1991இல் நாம் கோரியது, இந்தியா - ஒரே ஒற்றை ஆட்சி (Unitary State) என்பதை மாற்றி - இந்தியாவை, பல்வேறு மொழி மாநிலங்களும் இணைந்த உண்மை யான கூட்டாட்சியாக (Federal India) மாற்றி அமைக்க வேண்டும் என்பது.

இது முழுத் தன்னாட்சி கொண்ட-மொழி மாநிலங் கள் எல்லாம் ஒன்றிணைந்த உண்மையான கூட் டாட்சியாக - அதாவது :

1. பணத்தாள் அச்சடிப்பு
2. பாதுகாப்பு
3. செய்தித் தொடர்பு

ஆகிய மூன்று துறை அதிகாரங்கள் மட்டும் இந்திய அரசிடமும்; மற்றெல்லா அதிகாரங்களும் அந்தந்த மாநிலங்களிடமும் உள்ளதாக உண்மையான இந்தியக் கூட்டாட்சியாக அமைக்கப்பட வேண்டும் என்பது, நம் இறுதி அரசியல் குறிக்கோள்!

கொள்கை விதைப்பு முதல் வேலை.

அதற்காகவே, வரும் 7.1.2018 ஞாயிறு அன்று, சென்னையில் நடைபெறும் கூட்டாட்சி மாநாட்டுக்கு, தமிழகத்திலுள்ள தமிழ்த் தேசிய - திராவிடத் தேசிய - உணர்வாளர்கள் அனைவரும் வாருங்கள்! வாருங்கள் என, மனமார வரவேற்கிறோம்.

**- வே. ஆனைமுத்து**

❖

## "சிந்தனையாளன்"

**பொங்கல் மலர் விளம்பரங்கள், கடிதங்கள், கட்டணம் புதுப்பித்தல், முகவரி மாற்றம் தொடர்பான கடிதங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைத்திட வேண்டுகிறோம்.**

**— வாலாசா வல்லவன் —**

எண்.2/12, சி.என்.கே.சந்து,
சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொடர்புக்கு : 7299214554, 9444321902
மின்னஞ்சல் : vallavankuil@gmail.com

- சிந்னையாளன் ஆசிரியர் குழு

## டி.ஏ.ஜி. பர்வதம்மாள் இயற்கை எய்தினார்



பெரியார் பெருந்தொண்டர் சுயமரியாதைச் சுடரொளி மானமிகு. மிசா. டி.ஏ.கோபாலன் அவர்களின் துணைவியர் பர்வதம்மாள் தனது 85 ஆம் அகவையில் 23.11.17 வியாழக்கிழமை மாலை 4:30 மணியளவில் இயற்கை எய்தினார். அன்னாரது இறுதி நிகழ்வு 24.11.17 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் சடங்குகள் ஏதும் இல்லாமல் காஞ்சிபுரம் வெள்ளை குளம் சுடுகாட்டில் நிறைவுற்றது. இறுதி ஊர்வலத்தில் அனைத்து அரசியல் கட்சி, முற்போக்கு இயக்க



தோழர்களும் இரங்கல் உரையில் கலந்து கொண்டனர். திமுக முதன்மை செயலாளர் துரைமுருகன் இரங்கல் உரையாற்றினார், திராவிடர் கழகத் துணை தலைவர் மானமிகு கவிஞர் கலிபூங்குன்றன், முற்போக்கு சமூகநீதிப் பேரவை நிறுவனர்: டாக்டர் விமுனா மூர்த்தி, மா.பெ.பொ.க. தோழர். சி.நடராசன், பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்கம் தோழர். காஞ்சி அமுதன், மானமிகு சி.வி.எம்.பி. எழிலரசன், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர், க.சுந்தர், காங்கிரஸ், திமுக, அ.இ.அ.தி.மு.க, ம.தி.மு.க, வி.சி.க, சி.பி.எம், சி.பி.ஐ, முற்போக்கு சமூக நீதிப் பேரவை, மக்கள் மன்றம், தே.மு.தி.க, உள்ளிட்ட அரசியல் கட்சித் தோழர்களும் இரங்கல் உரை யாற்றினர்.

டி.ஏ.ஜி.அசோகன், திராவிடர் கழக காஞ்சி மாவட்டத் தலைவர் நன்றியுரை ஆற்றினார்.



# பெரியாரியலாளர், தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர் மா. நன்னன் மறைவுற்றார்

பேராசிரியர் மா. நன்னன் 30.07.1924இல் விருத்தா சலம் வட்டத்தில், சாத்துக் கூடல் என்ற ஊரில் பிறந்தவர்.

அவர் தமிழ்ப்புலவர்; பல பட்டங்களைப் பெற்றவர். அன்னாரை 1948இல் பெரம்பலூர் வட்டம், ஒகளூர் என்ற ஊரில் பொதுக்கூட்டத்தில் முதன்முதலாகச் சந்தித்தேன். நானும் அவரும் அங்கே பேசுவதற்கு ஒகளூர் எம்.எஸ். வரதன் என்பவர் ஏற்பாடு செய்து இருந்தார். மா. நன்னன் தலைசிறந்த பேச்சாளர். அவர், 70 நூல்கள் எழுதியுள்ளார்.

அவருடைய நூல்களுள் 'பெரியார் கணினி' என்ற வரிசை மிகவும் புதுமையானது. அவ்வரிசை நூல்கள் என்னைக் கவர்ந்தன. நான், அவற்றை நன்கு பயன்படுத்தினேன்.

'எண்ணும் எழுத்தும்' என்ற தலைப் பில் சென்னை தொலைக்காட்சியில், ஏழை எளிய மக்களுக்காக அவர் தமிழைக் கற்பித்த விதம் தமிழகத் தமிழரையும் உலகத் தமிழரையும் மிகவும் கவர்ந்தது. இந்தப் பணியை, அவர் 17 ஆண்டுகள் செய்தார்.

பேராசிரியர் மா.நன்னன் தமிழகக் கல்வித் துறையில் உயர்நிலைப் பள்ளி, ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, அரசு கலைக் கல்லூரி, மாநிலக் கல்லூரி முதலான வற்றில் பேராசிரியராகப் பணியாற்றி னார். 1980 முதல் 1983 வரை தமிழ் வளர்ச்சித் துறை இயக்குந ராகப் பணியாற்றியுள்ளார்.

இளமையில், 'வெள்ளையனே வெளியேறு' போராட் டத்தில் பங்கேற்றார். பின்னர், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றார். 1952 முதல் 1954 வரை யில் தந்தை பெரியார் நடத்திய இந்தி பெயர்ப்பலகை அழிப்புப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார்.

தமிழ்மொழிக்காக இவர் செய்துள்ள அயராத சேவை யைப் போற்றும் வகையில், 'தினத்தந்தி' நாளிதழ் கடந்த 2006ஆம் ஆண்டு மூத்த தமிழறிஞர் விருதை இவருக்கு வழங்கியது. பெரியார் விருது, தமிழ்ச்செம் மல் திரு.வி.க. விருது உட்பட மேலும் ஏராளமான விருது களையும் இவர் பெற்றுள்ளார்.

பேராசிரியர் மா.நன்னன் அவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் சி.என். அண்ணாதுரை, கலைஞர் மு. கருணாநிதி, பேராசிரியர் க. அன்பழகன், நாவலர் இரா. நெடுஞ்செழியன், ஈ.வெ.கி. சம்பத், டார்பிடோ, எம்.பி. ஜனார்த்தனம், வே. ஆனைமுத்து, திருவாரூர் கே. தங்கராசு, தி.க. தலைவர் கி. வீரமணி ஆகிய திராவிட இயக்கத் தலைவர்களோடு நன்கு பழகியவர்.

அவர் அண்மையில், நோய்வாய்ப்பட்டு, சைதாப் பேட்டையிலுள்ள தம் இல்லத்தில் படுக்கையாக வீட் டோடு இருந்தார். மா. நன்னன் அவர்கள் 07.11.2017, செவ்வாய்க்கிழமை காலையில், தம் 94ஆம் அகவை யில் மறைவுற்றார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

செய்தியறிந்தவுடன், 07.11.2017 பகல் 12.00 மணிக்கு மா. நன்னன் அவர்களின் இல்லம் சென்று, மா.பெ.பொ.க. சார்பில் வே. ஆனைமுத்து, தாம்பரம் மா.சுப்பிரமணி, ப.வடிவேலு, கலச.இராமலிங்கம், கு. கிருட்டிணமூர்த்தி, இரா. பச்சமலை, 'தாம்பரம் எழில்' ஆசிரியர் பூவைமணி ஆகிய தோழர்கள் நன்னன் உடலுக்கு மலர்மாலை சூட்டி இறுதி அஞ்சலி செலுத்தினோம்.



மா. நன்னன் அவர்களின் துணைவியார், பார்வதி அம்மையார் அவர்களுக்கும் மூத்த மகள் வேண்மாள் -அவருடைய கணவர் செம்மலுக்கும், இளைய மகள் அவ்வை-அவருடைய கணவருக்கும் மற்றும் உறவினர் களுக்கும் ஆறுதல் கூறி விடைபெற்றோம்.

வாழ்க, வளர்க, மா. நன்னன் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# உலகத்தில் வாழ உரிமையற்றவர்களா - மியான்மர், ரோஹிங்யா முஸ்லீம்கள்?

மியான்மர் நாடு, பழைய பர்மா ஆகும். அது 1937 வரை இந்தியாவோடு இருந்தது.

அங்கு ராகைன் மாநிலத்தில் ரோஹிங்யா இஸ்லாமியர்கள் வாழ்கிறார்கள். அங்கு பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது.

**மியான்மரில் பெரும்பாலோர் பர்மிய இனத்தவர்; அவர்களில் பெரும்பாலோர் பவுத்தர்கள்.**

இரண்டாண்டுகளுக்கு முன்வரையில் அங்கு இராணுவம் ஆண்டது. திருமதி. சூயி கி (Suukyi) வீட்டுச் சிறையில் பல ஆண்டுகள் வைக்கப்பட்டார். அவர் உலக அமைதிக்காக நோபல் பரிசு பெற்றவர். இராணுவ ஆட்சியை எதிர்த்து 2 ஆண்டுகளுக்குமுன் மியான்மார் தேர்தலில் போட்டியிட்டார்; அவருடைய கட்சி வெற்றி பெற்றது. ஆனால், அவர் அந்நியரைத் திருமணம் செய்து கொண்டதால் மியான்மரின் உயரிய பதவிக்கு வர உரிமை இல்லை. அதனால் ஆட்சிக்கு ஆலோசகராக (Councillor) இருக்கிறார்.

கடந்த 3 மாதங்களாக, மியான்மர் பவுத்தர்கள், ரோஹிங்கா முஸ்லீம்களை அடித்து உதைத்து வெளியேற்றுகிறார்கள். 5 இலட்சம் ரோஹிங்கி முஸ்லீம்கள் தப்பிப் பிழைத்திட அண்டையிலுள்ள பங்களாதேஷுக்கு ஓடி வருகிறார்கள்; இந்திய எல்லைக்கும் வருகிறார்கள்.

**அதைப் பார்வையிட, அண்மையில் ராகைன் மாகாணத்துக்கு சூயி கி சென்றார். ஆனால் ரோஹிங்கியர்களுக்குப் பாதுகாப்பு எதுவும் அவருடைய கட்சி அரசு கொடுக்கவில்லை.**

**ஏன்? தேர்தல் மூலம் சிவில் ஆட்சி மியான்மரில் நடைபெற்றாலும், இராணுவத்துக்கு அங்கு இன்னமும் அதிகாரம் இருக்கிறது.**

இராணுவம் ரோஹிங்கியர்கள் பர்மிய குடி உரிமை இல்லாதவர்கள்; எனவே அவர்கள் இங்கு வாழக்கூடாது என்று தடுக்கிறது.

இதனால், அமெரிக்கா, மியான்மர் இராணுவத்துக்கு உதவி செய்வதை நிறுத்திவிடலாமா என்று ஆலோசிப்பதாக, 3.11.2017 வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் அரசும், இந்திய அரசும் ரோஹிங்கியர்களை அகதிகளாக ஏற்க மறுக்கின்றன.

மியான்மர் அரசும் கொடுமை செய்து ரோஹிங்கிய முஸ்லீம்களை வெளியேற்றுகிறது.

**ரோஹிங்கிய முஸ்லீம்கள் திக்கற்றவர்களாக இருக்க வேண்டியதுதானா?**

**அல்லது அவர்கள் செத்துத் தொலைய வேண்டுமா?**

எல்லோரும் சிந்தியுங்கள்.

**- வே. ஆனைமுத்து**

---

## “சிந்தனையாளன்” இதழை வாழ வைத்திட,

# பொங்கல் சிறப்பு மலரை

## வெற்றியாக வெளியிடுவோம்!

“**சிந்தனையாளன்**” இதழ் 41ஆம் ஆண்டில் வெற்றியாக வெளிவருகிறது!

“**சிந்தனையாளன்**” பொங்கல் சிறப்பு மலர்தான் தமிழர் தம் வாழ்வியலில் சிறந்த பொங்கலின் தனித்தன்மையைப் பறைசாற்றுகிறது!

“**சிந்தனையாளன்**” மார்க்சிய – பெரியாரியத்தின் விளக்க ஏடாக வெளிவருகிறது!

சிந்தனையாளன் சூத்திர, – ஆதிசூத்திர மக்களின் சமூக – அரசியல் – பொருளாதார விடுதலையின் போர்வாளாகத் திகழ்கிறது!

சிந்தனையாளன் இதழ் தொடர்ந்து வெளிவந்திட ஒரே ஆதாரமாக – நீராக – எருவாக “**பொங்கல் மலர்**” மட்டுமே பயன்படுகிறது!

நாம் ஒவ்வொருவரும், **07-01-2018இல் பொங்கல் மலர்** சிறப்புற வெளிவந்திட, நம்மை நாம் வருத்திக் கொண்டு உழைப்போம்! வெற்றி குவிப்போம்!

**- வே. ஆனைமுத்து**
நிறுவனர் - ஆசிரியர்

# சீரழிகிறதா இந்திய ஆட்சியியல்?

- குட்டுவன்

உலகமயமாதல் கொள்கை 1991இல் நடைமுறைக்கு வந்த பிறகு, பன்னாட்டு முதலாளித்துவ பயங்கரத் தாக்குதல் தலைத்தூக்கத் தொடங்கியது. சாதாரண மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. இதை உலக அளவில் உள்ள பல அறிஞர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஐக்கிய நாடுகள் அமைப்பின் 1999ஆம் ஆண்டு மானுட மேம்பாட்டு (Human Development Report) அறிக்கை உலக நாடுகள் சந்தித்து வரும் குற்றஇயல் நடவடிக்கைகளைப் பறைசாற்றியது. குற்றவாளிகள்தான் பொருளாதார பயன்களைப் பெருமளவில் பெற்று வருகின்றனர் என்றும் இவ்வறிக்கை சுட்டியது. கட்டுப்படுத்தப்படாத மூலதனச் சந்தையின் வழியாகவும் வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத்தாலும் கறுப்புப் பணம் போதைப் பொருள் வணிகம், பெண்கள் பாலியல் தொழில், ஆயுதம் கடத்தல் ஆகிய சமூக விரோத-நாட்டு விரோத செயல்கள் பெருகி வருகின்றன என்று, 2003இல் கூடிய ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியது. சில நாடுகளைத் தவிர இந்தியா உட்பட பல நாடுகள் இதைக் கருத்தில் எடுத்துக் கொண்டு செயல்படவில்லை. பனாமா பாரடைஸ் ஆவணங்களும் வெளி வந்த பிறகும் அதில் இடம் பெற்ற பொருளாதாரக் குற்றவாளிகளின் எண்ணிக்கையை அறிந்தும் இந்திய அரசு அமைதி காக்கிறது. பெரும் பணக்காரர்களை ஊக்குவிக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் தொடர்கின்றன. அறமற்ற அரசியல் உள்நாட்டில் பேராதிக்கம் செலுத்தி வருகிறது.

இந்திய ஆட்சியிலின் சக்தி வாய்ந்த மூன்று அமைப்புகளான அரசு நிர்வாகம், சட்டமன்ற நடவடிக்கைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் அண்மைக்காலமாகச் செல்வாக்குமிக்க தனிநபர்களைக் காக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனவா? என்ற ஐயம் பல ஆய்வாளர்களுக்கு எழுந்துள்ளது. இந்தத் தீய சக்திகள் அனைத்து மாநிலங்களின் அதிகாரங்களையும் தில்லியில் குவித்து விட்டால் எளிதாக இந்த அமைப்புகளில் இயங்கும் நபர்களைப் பெரும் விலைக்கு வாங்கிவிடலாம் என்றும் நம்புகின்றனர். இது கடும் குற்றச்சாட்டுப் போலத் தோன்றினாலும் நமக்குக் கிடைக்கும் புள்ளிவிவரங்கள் இந்திய ஆட்சியியல் சிதைந்து வருவதைச் சுட்டிக்காட்டுகின்றன.

இந்திய ஆட்சியியலில் இயங்கி வருகிற தன்மைகளை அறிந்து கொள்வதற்கு மூன்று காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல்கட்டமான 1947 தொடங்கி 1966 வரை; இக்காலக்கட்டத்தில் ஒன்றிய அரசின் பிரதமர்களாக நேருவும் லால் பகதூர் சாஸ்திரியும் பணியாற்றினர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் இவர்கள் செய்த தியாகம் விடுதலைக்குப் பிறகு இவர்கள் நிர்வாகத்தில் அர்ப்பணிப்போடு செயலாற்றிய பாங்கினையும் மீறி ஊழல்கள், அத்துமீறல்கள், மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாநில அளவில் பெரும் போராட்டங்கள் வெடித்த போதெல்லாம் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் குறைகளைச் சுட்டிய போது ஆட்சியியலில் ஏற்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு இந்த இரு பிரதமர்களும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

சான்றாக நேரு காலத்தில் இடஒதுக்கீடு கொள்கை சென்னை மாகாணத்தில் நீதிமன்றத்தாலும் ஆதிக்கச்சக்திகளின் சதியாலும் முறியடிக்கப்பட்ட போது தந்தை பெரியார் தலைமையில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நடத்திய பெரும் போராட்டத்தின் கோரிக்கைகளுக்கு நேரு மதிப்பளித்தார். 1951இல் வந்த முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தமே இதற்குச் சான்றாகும். மேலும் தென்னக மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலம் நிர்வாக மொழியாக நீடிக்கும் என்ற வாக்குறுதியையும் நிறைவேற்றினார். காஷ்மீர் பிரச்சினையிலும் நேரு இந்திய அரசோடு காஷ்மீர் இணைந்த போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற முற்பட்டார். பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி காலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற போது மாணவர்களின் எழுச்சியைக் கண்டு இந்தியைத் திணிக்கமாட்டோம் என்ற உறுதியை அளித்தார்.

2017 அக்டோபர் 2ஆம் நாள் லால் பகதூர் சாஸ்திரி மறைவு தினத்தையொட்டி,, ஆங்கில இந்து நாளேட்டில் அவரது மகனான சுனில் சாஸ்திரி தனது தந்தையின் நினைவுகளைப் போற்றி ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அதில் ஒரு முதன்மையான கருத்துச் சுட்டப்பட்டுள்ளது. இந்திய நிர்வாகம் மக்களின் தேவைக்கேற்பவும் வளர்ச்சிக்கு ஏற்பவும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று தனது தந்தை உறுதியாக நம்பினார். அவர் காலத்தில்தான் முதன்முதல் நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் (Administrative Reforms Commission) அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்தின் தலைவராக 1966இல் மொரார்ஜி தேசாய் பொறுப்பேற்றார். ஒன்றிய-மாநில உறவுகளைத் தீவிரமான முறையில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இதன் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. மேம்படுத்தப்பட்ட திறமையான நேர்மையான அரசு சேவையையும் அரசு நிர்வாகத்தையும் உருவாக்கி அரசின் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை மக்கள் நலன் சார்ந்து சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட

வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. ஒன்றிய மாநில அரசுகள் இணைந்து செயல்பட மாநிலங்களுக்கிடையேயான மன்றத்தைக் (Inter-State Council) கூட்டி ஒன்றிய-மாநிலங்கள் இடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று இவ்வறிக்கை வலியுறுத்தியது. இந்த நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளை உரிய நேரத்தில் தக்க முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்றைக்கு இந்தியாவில் மாநிலங்களைச் சார்ந்து எழும் பல சமுதாய பொருளாதார நிதி பிரச்சினைகளைச் சரியான முறையில் தீர்த்திருக்க முடியும். ஆனால் லால் பகதூர் சாஸ்திரிக்குப் பிறகு வந்த பிரதமர்கள் அனைவரும் ஒன்றிய அரசில் அதிகாரக் குவிப்பை மேம்படுத்துவதிலேயே பெரும் அக்கறை காட்டினார்கள். நோய் முற்றியப் பிறகு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நேரத்தில் மருந்து மாத்திரைகள் வழியாகத் தீர்வு காண்பது போல, முதல் நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகள் ஒன்றிய அரசிற்குச் சார்பாகவே பின்பற்றப்பட்டன.

2005இல் இரண்டாம் நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையம் வீரப்ப மொய்லி தலைமையில் அமைக்கப்பட்டது. தமிழகத்தினுடைய மாநில உரிமை தொடர்பான கருத்துக்களை அறிய அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை ஆணையத்தின் தலைவர் வீரப்ப மொய்லி நேரில் சந்தித்தார். இக்கட்டுரையாசிரியர்தான் புதுதில்லியில் இருநாட்கள் தங்கி இந்த ஆணையத்தின் தலைவர் வீரப்ப மொய்லியுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். குறிப்பாக பொடா என்னும் அடக்குமுறைச் சட்டம் நீக்குதல், 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தல் ஆகியன குறித்தும் தமிழக அரசின் சார்பில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இந்த ஆணையத்தின் ஒரே ஒரு வெற்றி 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை நிறைவேற்றியதுதான்.

**பொடா சட்டத்தைப் பெயரளவிற்கு நீக்கினாலும் அதைவிட மோசமான பல சட்டங்கள் இன்றைக்கு நடைமுறையில் இருக்கின்றன என்பதையும் இக்கட்டுரையாசிரியர் வீரப்ப மொய்லியிடம் சுட்டிக்காட்டினார். சோனியா காந்தியின் வழிகாட்டுதலில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் அன்றைய அரசு தமிழ்நாடு அரசின் சில கோரிக்கைகளை ஏற்றது. அவற்றில் உள்ளாட்சித் துறையை மாநிலப் பட்டியலில் இருந்து மாற்றிப் பொதுப்பட்டியலுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று மணிசங்கர் அய்யர் செய்த சதியும் முயற்சியும் முறியடிக்கப்பட்டன. அதே போன்று சரக்கு சேவை வரி விதிப்பினால் மாநிலங்கள் அதிகாரம் பறிக்கப்படும் என்ற கருத்தும் அப்போது ஏற்கப்பட்டது. இதில் ஒரு வியப்பு என்னவென்றால் அன்றைய முதல்வர் கலைஞர் ஒன்றிய அரசிற்கு மாநில உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு அனுப்பிய கடிதம் மற்ற மாநில முதல்வர்களுக்கும் அனுப்பப்பட்டது. அன்றைய குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, தமிழ்நாடு எழுப்பிய இந்த இரு கருத்துக்களையும் ஏற்று ஒன்றிய அரசிற்கு எதிராகக் கடிதம் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் நிர்வாக ரீதியாக லால் பகதூர் சாஸ்திரி நினைத்தது போன்று ஒரு நேர்மையான நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றால், தில்லியில் குவிந்துள்ள அதிகாரக் குவிப்பைத் தகர்க்க வேண்டும் என்பதை அண்மைக்கால அரசியல் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.**

**மாநில உரிமைகளைப் பறிக்கும் தொடர் செயல்கள் இரண்டாம் காலகட்டமான 1966-2016இல் இந்திய ஆட்சியியலில் வலிமை பெற்று வருவதை நாம் கண்கூடாகப் பார்க்க முடியும். நிர்வாகம் நேர்மையாகவும் தரம் மேம்பட்டதாகவும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் அமையாத காரணத்தினால்தான் ஒன்றிய அரசின் சட்டங்களை, நிர்வாக முடிவுகளை எதிர்த்துப் பல பொதுநல வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் குவிந்தன. சான்றாக தமிழ்நாடு அரசே காவிரி நீர் மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்றும், கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்தது சட்டப்படிச் செல்லாது என்றும் வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளன. குறிப்பாக காவிரி நதிநீர் பங்கீட்டில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதித்து கர்நாடகா அரசு தமிழகத்திற்குத் தர வேண்டிய உரிய நீரை வழங்கவில்லை. ஒன்றிய அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நடுநிலையோடு காவிரி மேலாண்மை ஆணையத்தை அமைக்கும்படி உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியும் ஒன்றிய அரசு நடுநிலையோடு செயல்படவில்லை. இது ஆட்சியியலில் ஏற்பட்ட மாபெரும் சறுக்கலாகும்.**

இந்திய அரசமைப்புச் சட்டம் முழுமையாகக் கூட்டாட்சியியலை எதிரொலிக்கவில்லை என்றாலும் ஒன்றியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் என்று அதிகார வரையறைகள் செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கான கடமைகளை மாநிலங்கள் நிறைவேற்றுவதற்கான சட்டமியற்றும் அதிகாரம் மாநிலச் சட்டமன்றங்களுக்கு உரிமை இருப்பினும் இதை ஒன்றிய அரசு மதிப்பதே இல்லை. சான்றாக 2006ஆம் ஆண்டு மருத்துவப் படிப்பிற்கான சேர்க்கையை மாநில அரசே முடிவு செய்து கொள்ளும் என்ற சட்டத்திருத்தத்தை நிறைவேற்றி அந்தச் சட்டத்தைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி ஒப்புதலும் பெற்ற பின்னர் 2017ஆம் ஆண்டில் நீட் தேர்வு நடைபெற்றது. மேலும் இனிமேல் மாநிலங்கள் தங்கள்

மாநிலத்திற்குள் நடத்தும் மாணவர் சேர்க்கைத் தேர்வுகளை ஒன்றுபடுத்தி ஒன்றிய அரசே நடத்தும் என்று அண்மையில் அறிவித்திருப்பதும் அப்பட்டமான மக்கள் விரோத-சட்டவிரோத செயல்களாகும். இதுபோன்று எண்ணற்ற முரண்பாடுகளை ஆட்சியியலில் ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு மேம்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு அடித்தளமாகும். இந்த அடித்தளத்தைத் தகர்க்கும் வகையில் பண உயர்மதிப்பு நீக்கலும் சரக்கு சேவை வரிகளை உயர் வீதங்களில் அறிவித்து தற்போது குஜராத் தேர்தலுக்காக 177 பொருட்களின் மீதான வரி வீதங்களைக் குறைத்ததும் சான்று பகர்கின்றது. குறிப்பாக பல அரசமைப்புச் சட்ட வல்லுநர்கள் அரசமைப்புச் சட்டப்படி மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகார எல்லைக்குள் புகுந்து ஒன்றிய அரசின் நிதியமைச்சரும் மாநில அரசின் நிதியமைச்சர்களும் ஒன்று கூடி முடிவுகளை எடுப்பது இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று குறிப்பிடுகின்றனர்.

ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்பும் ஒவ்வொரு மாநில அரசும் தனதும் வரி வருவாயை உறுதி செய்த பிறகுதான் நலத்திட்டங்களுக்கான செலவுகளை முடிவு செய்ய முடியும். இது பொது நிதியியலின் முதன்மையான அறமாகும். இந்த அறநெறியைச் சரக்கு, சேவை வரிக் குழு (GST Council) அறவே நசுக்கிவிட்டது. பா.ஜ.க.வின் வெற்றிக்காக 29 மாநிலங்களின் கோரிக்கைகளை உரிய முறையில் ஆராயாமல் அரசியல் அழுத்தத்தின் காரணமாக செய்யப்பட்ட இந்த வரி மாற்றங்கள் கூட்டாட்சியியலுக்கும் மக்களாட்சிக்கும் செய்த பெரும் துரோகங்களாகும்.

**திறன் மிக்க அரசியல் தலைவர்கள் ஒன்றிய-மாநில அரசுகளில் இடம் பெறாததால் இன்றைக்கு இந்திய ஜனநாயகம் திறனற்ற எதேச்சதிகார அதிகார வர்க்கத்தின் (Bureaucratic and Autocratic system) பிடியில் சிக்கிக்கொண்டது. இதன் காரணமாகத்தான் பல நேரங்களில் நீதிமன்றங்களில் மாநில, ஒன்றிய அரசுகள் இயற்றும் சட்டங்கள் செல்லாதவை என்று அறிவிக்கப்படுகின்றன. நீதித் துறையிலும் மேலாதிக்க சக்திகள் கோலோச்சுவதாலும் முன்னுக்குப்பின் முரணாக தீர்ப்புகள் அடிக்கடி வழங்கப்படுவதாலும் பெரும்பான்மையான ஏழை மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன.**

2017 நவம்பர் 20ம் நாள் ஊழலும் இத்துறையில் உட்புகுந்து விட்டது. ‘‘அவுட்லுக்’’ என்ற ஆங்கில ஏடு ‘‘ஒரு கோடி ரூபாயைக் கொடு; உன்னை நீதிபதியாக ஆக்குகிறேன்’’ என்ற கொட்டை எழுத்தோடு ஏட்டின் முன்அட்டையிலேயே தலைப்பு வெளியிட்டுள்ளது. அரியானா மாநிலத்தில் நீதிபதி தேர்வில் ஏற்பட்ட முறைகேடுகள், ஊழல்கள் ஆதாரத்துடன் வெளியிடப்பட்டுள்ளன. இதற்குத் தீர்வாக அகில இந்திய அளவில் நீட் தேர்வு போன்ற ஒன்று நீதித்துறைக்கும் நடத்தப்பட வேண்டும் என்று மூத்த வழக்கறிஞர் சோலி சோரப்ஜி கருத்துத் தெரிவித்துள்ளார். நீதிநாயகம் சந்துரு மாநில உரிமை, சமூக நீதி கூட்டாட்சியியல் ஆகியவை இத்தேர்வால் பாதிக்கப்படலாம் என்று இதே ஏட்டில் கருத்துத் தெரிவித்துள்ளார். ‘‘ஆளுக்கொரு நீதி; சாதிக்கொரு நீதி; ஊழலுக்கும் ஒரு நீதி என்ற அடிப்படையில் நீதித்துறை இயங்குகிறதோ என்ற அச்சத்தைப் பல மூத்த வழக்கறிஞர்களும் பொதுநல ஆர்வலர்களும் தெரிவித்து வருகின்றனர்.

அண்மையில் ஒன்றியப் புலனாய்வுத் துறை ஒரிசா மாநிலத்தில் பிரசாத் அறக்கட்டளை நடத்தும் மருத்துவக் கல்லூரியில் மருத்துவத் தேர்வில் பெருமளவிற்கு ஊழல் நடந்திருப்பதாக ஒரு வழக்கைப் பதிவு செய்தது. செப்டம்பர் 19 2017இல் ஒன்றியப் புலனாய்வுத் துறை ஒரிசா உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி குடிசி மீதும், பிரசாத் அறக்கட்டளை நிர்வாகிகள் மீதும் முதல் தகவல் அறிக்கையை அளித்தது. இந்த வழக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்றது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி செலமேசுவர் வழக்கை விசாரிப்பதற்கு ஓர் அமர்வை நியமித்தார். இதில் கோபமுற்ற தலைமை நீதிபதி மிஸ்ரா, ஒரு நீதிபதிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கையைப் போட முடியுமா? இது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்று உரத்தக் குரலில் கருத்துத் தெரிவித்தார். அமர்வை அமைக்கும் அதிகாரம் சட்டப்படித் தனக்கே உள்ளது என்று அறிவித்து, நீதிபதி செலமேசுவரர் அமைத்த அமர்வை நீக்கியுள்ளார். ஆனால் பல சட்ட ஆய்வாளர்களும் அறிஞர்களும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கருத்திற்கு எதிராகத் தங்களின் கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

மேற்கூறிய கூற்றுகளில் இருந்து பணமும் ஊழலும் நீதித் துறையின் படிகட்டுகளில் ஏறத் தொடங்கியுள்ளன என்பதை யார் மறுக்க முடியும்? தமிழில் ஒரு முதுமொழி உண்டு. நான் பள்ளி மாணவனாக இருந்த போது, எனது ஆசிரியர் தமிழில் சிறிய பிழை செய்தால்கூட அந்த முதுமொழியைக் கூறிக் கடுமையான முறையில் சாடுவார். இரண்டு பேர் வகுப்பில் பேசினால் உடனே அழைத்து ஒருவர் காதை இன்னொருவர் பிடித்துக் கொண்டு ‘‘உன்னால்’’ நான் கெட்டேன். ‘‘என்னால் நீ கெட்டாய்’’ எனக் கூறிக்கொண்டே தோப்புக்கரணம் போடச் சொல்வார். நிர்வாகத்துறையால் சட்டமன்றத் துறை கெட்டதா? சட்டமன்றத் துறையாலும் நிர்வாகத் துறையாலும் நீதித்துறை கெட்டுப் போய்விட்டதா? தோப்புக்கரணம் போடும் நிலைக்கு இந்திய ஆட்சியியல் சீரழிகிறதா? ❖

# "நீட்" ஏன் வேண்டும்?

- இராமியா

சூத்திரர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது; கல்வி முழுவதையும் பார்ப்பனர்களே கவர்ந்து வைத்துக் கொண்டு இருந்தார்கள் என்று பொத்தாம் பொதுவாக நாம் அனைவரும் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இது உண்மை தான். ஆனால் முழுமை அல்ல.

பார்ப்பனர்கள் ஆட்சி அதிகாரக் கல்வியை மட்டுமே மற்றவர்கள் பெற்று விடக் கூடாது என்று எச்சரிக்கை யுடனும், பிடிவாதத்துடனும் இருந்தனர். இப்போதும் அதற்காகவே போராடிக் கொண்டு இருக்கின்றனர்.

சத்திரியர்களுக்குப் போர்க் கல்வியையும், சூத்திரர் களுக்குப் பொருட்களை உற்பத்தி செய்யத் தேவைப்படும் கல்வியையும், வைசியர்களுக்கு உழைக்கும் வர்க்கத்தினர், அதாவது சூத்திரர்கள் உற்பத்தி செய்த பொருட்களை, அவாளுடைய அதிகாரப்படி மக்களிடையே விநி யோகம் செய்யத் தேவைப் படும் கல்வியையும் திணித்து இருந்தனர்.

இந்நிலையில் சூத்திரர்கள் பொருட்களை உற்பத்தி செய்யத் தேவைப்படும் அறிவியலை-அதாவது உண்மையான அறிவியலை - தங்களிடையே வளர்த்துக் கொண்டு இருந்தனர். என்னென்ன விதைகள் எந்தெந்தப் பருவத்தில் விளையும்? மழை பொய்த்துப் போனால் நிலைமையை எப்படிச் சமாளிக்க வேண்டும்? ஏரி குளங்களை எப்படிப் பராமரிக்க வேண்டும்? கால்நடைகளுக்கு நோய் வந்தால் அவற்றிற்கு மருத்துவம் பார்ப்பது எப்படி? இன்னும் இவை போல் மனித இன இயக்கத் திற்கு அவசியமான பல கல்விகளை எல்லாம் சூத்திரர்கள் கற்றே தீர வேண்டிய கட்டாயம் இருந்தது. அவர்களும் இக்கல்விகளில் கற்றுத் தேர்ந்த அறிஞர்களாக இருந் தார்கள்.

விவசாயம் மட்டும் அல்லாமல், நெய்தல், வீடு கட்டுதல், தச்சுப் பட்டறை, கொல்லன் பட்டறை வேலைகள், மருத்துவம் போன்ற மனித குல வளர்ச்சிக்கும் சீரான இயக்கத்திற்கும் தேவைப்படும் அனைத்துத் தொழில்களும், அத்தொழில்களைச் சார்ந்த அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வியும் சூத்திரர்களின் வசமே இருந்தன. இத்தொழில்களில் அவர்கள் வல்லுநர்களாக இருப்பதால் ஒருவனுக்கு மற்ற மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் வசதியோ வலிமையோ கிடைக்கவில்லை.

தொழிற் புரட்சி காரணமாக, தொழில்கள் எல்லாம் இயந்திர மயமாக்கப்பட்ட பின், இத்தொழில்களில் நிபுணத்துவம் பெறுவதும், மேலாண்மை செய்யும் நிலையைப் பெறுவதும் சக மனிதர்களைக் கட்டி ஆளும் வசதியையும், வலிமையையும் அளித்தது. இதுவரைக்கும் இத்தொழில்களைப் பற்றி நினைப்பதே தீட்டு என்றும் பாவம் என்றும் இருந்த பார்ப்பனர்கள் இயந்திர ஆளுகையைப் பற்றிக் கற்க முனைந்தார்கள். அப்படிக் கற்கத் தொடங்கியவர்கள், சூத்திரர்கள் இந்த நவீனக் கல்வியில் நுழைந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாகவும் இருந்தார்கள்.

இப்படியாக, ஆங்கிலக் கல்வியைக் கற்கத் தொடங்கி, இது வரைக்கும் பொருள் உற்பத்திக் கல்வியில் அக்கறையே கொள்ளாத பார்ப்பனர்கள், நவீனமயமாக்கப்பட்ட உற்பத்தி முறையில் அக்கறை காட்டத் தொடங்கினர். ஆனால் அதிலும் நாட்டாமை செய்யும் பகுதியை மட்டும் தங்கள் வசம் வைத்துக் கொண்டு உழைக்கும் பகுதியை ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களிடமே இருக்குமாறு விட்டு விட்டனர்.

இந்த வகையில் தான் பார்ப்பனர்கள் மருத்துவத் துறையில் நுழைந்தனர். புராதன மருத்துவக் கல்வியில் புலமை அடை வதால் அதிகாரப் பிடிப்பு எதுவும் கிடைப்பது இல்லை. ஆகவே அத்தொழில் பெரும்பாலும் சூத்திரர்களிடமே, அதிலும் முக்கியமாக மருத்துவ (முடி திருத்துவோர்) வகுப்பினரிடையே வழங்கிக் கொண்டு இருந்தது. ஆனால் தொழிற் புரட்சிக்குப் பின், இந்தியாவில் அறிமுகமான ஆங்கில மருத்துவக் கல்வி மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் வகையில் பொருள் வசதி யையும், அதிகார வலிமையையும் தரும் தன்மையதாக இருந்தது. இதைக் கண்ட பார்ப்பனர்கள் ஆங்கில மருத்துவக் கல்வி யைக் கற்கத் தொடங்கினர். ஏற்கனவே மருத்துவர்களாக இருந்த மருத்துவ வகுப்பினர் இதில் நுழைந்து விடா வண்ணமும் கவனமாகப் பார்த்துக் கொண்டனர்.

காலப் போக்கில் ஆங்கில மருத்துவக் கல்வியை மற்ற வகுப்பினர் யாரும் பெற்று விடாமல் தடுக்கும் நோக்கத் துடன், மருத்துவக் கல்வியைப் பெறுவதற்கு சமஸ்கிருதம் தெரிந்து இருக்க வேண்டும் என்ற விதியை வலிந்து திணித்தனர்.

ஆனால் 1920களில் நீதிக் கட்சியின் சார்பில் சென்னை இராஜதானியின் முதல்வராக இருந்த பனகல் அரசர் பார்ப் பனர்களின் கடுமையான எதிர்ப்புகளைத் தன் அறிவாற்றலால் தவிடு பொடி ஆக்கி இவ்விதியை நீக்கினார். அதன் விளைவாகப் பார்ப்பனர் அல்லாதோர் பலர் நவீன மருத்துவக் கல்வியைக் கற்க முடிந்தது. இது பூ.பழனியப்பன், வடமலையான், ஏ.ஏ.ஆசீர்வாதம், கே.என்.வாசுதேவன் போன்ற இன்னும் பல மருத்துவ மாமேதைகளை நாட்டிற்கு அளித்தது.

ஆங்கிலேயர்கள் வெளியேறிய பிறகு, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், பெருந்தலைவர் காமராசர் ஆகியோரின் தலைமையில் செயல்படுத்தப்பட்ட இட ஒதுக்கீட்டுக் கொள்கையினால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் பலர் மருத்துவக் கல்வி கற்கும் வாய்ப்புப் பெற்றனர். பெரும் எண்ணிக்கையில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் மருத்துவர்களாக உருவாயினர்.

**இந்த நிகழ்வு, அதாவது ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் மருத்துவர்களாக உருவாவது வட மாநிலங்களில் நடக்கவில்லை. அங்கு இட ஒதுக்கீடு முறை ஒழுங்காகச் செயல்படுத்தப்படா ததால், உயர்சாதிக் கும்பலினருக்கே மருத்துவர்களாகும் வாய்ப்பு கிடைத்தது.**

எந்த ஒரு வகுப்பிலும் அனைவரும் திறமைசாலிகளாக இருப்பதோ அல்லது அனைவரும் திறமைக் குறைவானவர் களாக இருப்பதோ இயற்கை நியதிக்கு முற்றிலும் எதிரானது ஆகும். அனைத்து வகுப்பிலும் அனைத்து நிலைத் திறமை உடையவர்கள் இருப்பது என்பது தவிர்க்க முடியாத / மாற்ற

முடியாத இயற்கை நியதி. ஆகவே ஒரு வகுப்பில் இருந்து மட்டுமே ஆட்களைத் தேர்வு செய்தால் திறமைக் குறைவானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தவிர்க்க முடியாமல் போகிறது. இது தான் வட மாநிலங்களில் நடந்து உள்ளது.

**அனைத்து வகுப்பில் இருந்தும் ஆட்களைத் தேர்ந்தெடுத் தால், அந்தந்த வகுப்பில் உள்ள திறமை சாலிகள் தேர்ந்தெடுக் கப்படுவது எளிதாகிவிடுகிறது; திறமைக் குறைவானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது. இதுதான் தமிழ் நாட்டில் நடந்து உள்ளது.**

இதன் வெளிப்பாடாக, மருத்துவச் சேவை / மருத்துவத் தொழில் தமிழ்நாட்டில் சிறந்து விளங்குகிறது. இந்தியா வின் பிற பாகங்களில் இருந்து மட்டும் அல்லாமல் உலக கெங்கிலும் இருந்தும் மருத்துவச் சிகிச்சை பெற மக்கள் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். உயர்சாதிக் கும்பலினரே மருத்துவர்களாக நிரம்பி உள்ள வட மாநிலங்களில் இந்த நிகழ்வு நடைபெறவில்லை.

**இதைக் கண்ணுறும் யாருமே என்ன முடிவுக்கு வர வேண்டும்? "பொதுப் போட்டி முறையால் திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை; இட ஒதுக்கீட்டினால் மட்டுமே திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்க முடிகிறது." என்ற முடிவுக்கு வந்து இருக்க வேண்டும் அல்லவா? அதன் தொடர்ச்சியாக இட ஒதுக்கீடு முறையை இன்னும் விரிவுபடுத்தி விகிதாச்சாரப் பங்கீடு முறையைக் கொண்டு வர வேண்டும் என்ற முடிவுக்கும் வந்து இருக்க வேண்டும் அல்லவா? இவ்விதமாக யோசிப்ப தற்குச் சராசரி அறிவுக்கும் குறைவான அறிவே போதுமே?**

ஆனால் என்ன நடந்தது / நடக்கிறது? இட ஒதுக்கீடு முறையினால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்கள் அவாளைவிடத் திறமைசாலிகள் என்று பட்டவர்த்தனமாக வெளிப்படுவதைக் கண்ட உயர்சாதிக் கும்பலினர் அரண்டு போய் விட்டனர். அவாளைப் பொறுத்தமட்டில் திறமைசாலிகள் உயர் நிலைகளில் இருக்க வேண்டும் என்பதைவிட, உயர்சாதிக் கும்பலினரே உயர்நிலைகளில் இருக்க வேண்டும். அதனால் நிர்வாகம் நாசமானாலும், மனித உயிர்கள் காவு வாங்கப்பட்டாலும் கவலை இல்லை. ஆகவே திறமைசாலிகள் வாய்ப்புப் பெறுவதைத் தடுக்கப் பல நடவடிக்கைகளை எடுத்தனர். அதில் ஒன்று கல்வியை வணிகமயம் ஆக்கியது. அப்படி ஆக்கிவிட்டு அதற்கு எதிராக அவாளே கூப்பாடு போடவும் செய்தனர் / செய்து கொண்டும் இருக்கின்றனர். கல்வி வணிகமயம் ஆகி விட்டதால் தங்களால் படிக்க முடியாமல் போய்விட்டது என்று அழுது புலம்பி கண்ணீர் விட்டும் காட்டு கின்றனர். அவாளது நடிப்பைக் கண்ட ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களில் சில அதிமேதாவிகளும் அவாள் மீது இரக்கம் காட்டுகின்றனர். "அரசதிகாரம் அனைத்தும் அவாளிடம் தானே உள்ளது? கல்வி வணிகமயம் ஆவதைத் தடுக்கலாமே?" என்றோ "இந்த வணிகமயமாக்கலினால் கல்வியில் அவாளது எண்ணிக்கை அதிகரித்துத்தானே இருக்கிறது? குறைய வில்லையே? என்றோ" கேட்க வேண்டும் என்று எந்த அதிமேதா விக்கும் தோன்றவில்லை. வணிகமயமாக்கம் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களைத்தான் பாதித்து இருக்கிறது என்பதையும் உணர வில்லை.

நமது மவுடீகமான அமைதியைக் கண்ட உயர்சாதிக் கும்பலினர் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து உள்ளனர். அது தான் தேசியத் தகுதி நுழைவுத் தேர்வின் திணிப்பு. இதற்குக் காரணமாக அவாளும் அவாளுடைய அடிமைகளும் கூறுவது, மருத்துவத் தொழில் என்பது மக்களின் உயிர்காக்கும் தொழில் என்றும், இதில் திறமையின்மைக்கு இம்மியும் இடம் கொடுத்து விடலாகாது என்றும் தான். ஆனால் தகுதி நுழைவுத் தேர்வில் திறமையைச் சோதிப்பதற்கான / கண்டு பிடிப்பதற்கான ஒரு கூறும் இல்லை என்பது மட்டும் அல்ல; பகுப்பாயும் திறனுக்கு முற்றிலும் எதிரான குருட்டு மனப்பாடம் செய்யும் ஆற்றல் உடைய வர்களுக்கு வழி விடும் கூறுகள் மட்டுமே உள்ளன. ஆகவே மருத்துவச் சேவைக்குத் தேவைப்படும் அறிவுத் திறன் உடைய வர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை விட, இயந்திரத்தனமான அறிவு உடையவர்களே இத்தேர்வில் வெற்றி பெற முடியும்.

அப்படி என்றால் அரசு இம்முறையை ஏன் வலிந்து திணிக் கிறது? இந்திய அரசு பார்ப்பன ஆதிக்க அரசு. பார்ப்பனர்களைப் பொறுத்த மட்டில், திறமை இருக்கிறதோ இல்லையோ பார்ப்பனர்கள் உயர்நிலைகளில் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்கள். அதனால் சமூக நலன் கெடுவதைப் பற்றிச் சிறிதும் அக்கறை கொள்ளாதவர்கள். அது மட்டும் அல்ல; தங்கள் ஆதிக்கம் தளராமல் இருப்பதற்காக, தங்களுடைய சில பொருளா தார, உடல் நல சவுகரியங்களையும் தியாகம் செய்யவும் தயங்காதவர்கள். ஆகவே தான் தகுதி நுழைவுத் தேர்வு வேண்டும் என்று அடம் பிடிக்கிறார்கள்.

இதற்குத் தான் "நீட்" தேவைப்படுகிறது.

இதை முன்னிட்டே உயர் கல்வி நிலையங்களில் சேர் வதற்கு நுழைவுத் தேர்வு என்ற முறையைப் புகுத்தி னார்கள். பெரியார், அம்பேத்கர் இயக்கங்களால் எழுச்சி பெற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் நுழைவுத் தேர்வின் நுணுக்கங்களைப் புரிந்து கொண்டு, அதில் வெற்றி பெறத் தொடங்கிய உடன், நுழைவுத் தேர்வின் மூலம் ஒருவனுடைய திறமையைக் கண்டறிய முடியாது என்று குரல் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். இதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று கூறி சென்னை, இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் 21.9.2008 அன்று ஒரு குழுவை அமைத்தனர். ஆனால் நுழைவுத் தேர்வு முறை பயனற்றது என்று கருத்து வெளிப்படும் அதே காலத்தில் (26.9.2008 அன்று) உச்ச நீதிமன்றம் பழங்குடி மக்களுக்கு நுழைவுத் தேர்வு எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று அரசுக்குக் கூறியது.

அதாவது ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் முயன்று பெற்ற திறமைகளைக் காலாவதி ஆக்க வேண்டும் என்பதும், காலாவதிஆகிப் போன வழிமுறைகளைப் பின்பற்ற வைத்து, அவாளே வெற்றி வாய்ப்பைப் பெற வேண்டும் என்பதுமே அவாளுடைய திட்டமாக இருக்கிறது.

இன்றும் தகுதி நுழைவுத் தேர்வை எதிர்ப்பதை விட்டு விட்டு அதற்குப் பழகிக் கொள்ளுங்கள் என்று அவாளும், அவாளுடைய அடிமைகளும் நமக்கு அறிவுரை கூறுகிறார்கள். அவர்களின் அறிவுரையைப் பின் பற்றி, பயிற்சி பெற்று, வெற்றி பெறும்

நிலைக்கு முதிர்ச்சி அடையும் பொழுது, நுழைவுத் தேர்வு திறமையைக் கண்டறியும் முறை அல்ல என்று கூறி, அவாளால் மட்டுமே வெற்றி பெற முடியக் கூடிய வேறொரு முறையைப் புகுத்துவார்கள். அந்த முறையில் நாம் முதிர்ச்சி அடைந் தால் வேறொரு முறையைப் புகுத்துவார்கள். இப்படியே நமக்கு உரிய பங்கு நிரந்தரமாகவே கிடைக்காதபடியான வழிமுறைகளைக் கடைப்பிடித்துக் கொண்டே இருப்பார்கள்.

**ஆகவே நம் முன் உள் கடமை என்ன? அனைத்து நிலை அறிவுத் திறனும் அனைத்து வகுப்பு மக்களுக்கும் உள்ளது என்ற இயற்கை நியதியை மக்களிடையே உணர்த்தி விழிப் புணர்வையும், பொதுக் கருத்தையும் உருவாக்க வேண்டும்.**

**ஒடுக்கப்பட்ட வகுப்பு மருத்துவர்கள் நிறைந்து உள்ள தமிழ் நாடு மருத்துவத் துறையில் முன்னணியில் இருப்பதையும், உயர்சாதிக் கும்பலினரே மருத்துவர் களாக உள்ள வட மாநிலங்கள் சிறப்பாக இல்லாததையும் எடுத்துக்காட்டி, அனைத்து வகுப்பு மக்களும் அனைத்து நிலை வேலைகளிலும் வாய்ப்புப் பெற வேண்டும் என்ற விழிப்புணர்வையும், பொதுக் கருத்தையும் உருவாக்க வேண்டும்.**

**அதைச் செயல்படுத்தும் கொள்கையான விகிதாச் சாரப் பங்கீடு முறையை வென்றெடுக்க மக்களிடையே விழிப்புணர் வையும், பொதுக் கருத்தையும் ஏற்படுத்த வேண்டும்.** ❖

## கடலூர் கோ. பாண்டுரங்கனின் பேத்தி திருமண வரவேற்பு விழா

கடலூர் பெரியார் பெருந்தொண்டர் கோ. பாண்டு ரங்கன் - ருக்குமணியின் இரண்டாவது மகனும், கடலூர் நகர ம.தி.மு.க. செயலாளருமான கோ.பா. இராமசாமி - வசந்தகுமாரி இணையரின் மகள் சிந்து பாரதி; கடலூர் சீ. தட்சிணாமூர்த்தி-கௌரி இணை யரின் மகன் ஸ்ரீதர் ஆகியோரின் திருமண விழா, கடலூரில் 1.11.2017 புதன்கிழமை சிறப்புற நடை பெற்றது. அதையொட்டி, மணமக்கள் ஸ்ரீதர்-சிந்து பாரதி வரவேற்பு விழா, 5.11.2017 ஞாயிறு மாலை 6 மணிக்கு, கடலூர் இம்பீரியல் ரோடு ஸ்ரீவள்ளி விலாஸ் V.C. செல்வ மகாலில் நடைபெற்றது.

விழாவுக்கு வருகை தந்தோரை மணமகளின் பெரியப்பா கோ.பா. அழகிரிசாமி வரவேற்றார்.

மணமக்களை வாழ்த்தி ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்கள் மல்லை சி.இ. சத்யா, ஏ.கே. மணி, ம.தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆ. வந்தியத் தேவன், கடலூர் மாவட்டப் பொறுப்பாளர் ஏ.என். குணசேகரன் மற்றும் பலர் உரையாற்றினர்.

விருந்துக்குப் பின்னர், மணமகளின் சிற்றப்பா கோ.பா. குருசாமி நன்றி கூறலுடன் விழா இனிதே முடிவுற்றது.

## ஆளுநரின் அத்துமீறிய செயல்

இப்போது உள்ள உலக நாடுகளில், அமெரிக் காவில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், அதிபராக (President) நிர்வாகப் பதவியை வகிக்கிறார்.

இந்தியாவிலுள்ள அரசு அமைப்பு முறை, இங்கிலாந் தைப் பின்பற்றுவது. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களும், மாநிலங்களவை உறுப்பினர் களும், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களும் தலைவராக முதன்மை அமைச்சரைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள 50 மாகாணங்களுக்கும் 50 ஆளுநர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள்.

ஆனால், இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களுக்கும், ஏழு ஒன்றியப் பகுதிகளுக்கும் முறையே ஆளுநர்களும் துணை நிலை ஆளுநர்களும் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டு, இந்தியக் குடிஅரசுத் தலைவரால் அமர்த்தப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டு ஆளுநராக, பன்வாரிலால் புரோகித் அண்மை யில் அமர்த்தப்பட்டார்.

ஏற்கெனவே 2016இல் தேர்ந்தெடுக்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை, செயலலிதா மறைவுக்குப் பிறகு, ஒ.பன்னீர்செல்வம் தலைமையில் அவசர கதியில் அமைந்தது. இப்போது ஒரு பிரிவின் தலைவராக இருக்கிற எடப்பாடி கே. பழநிசாமி தலைமையில் அமைச்சர வை அமைந்துள்ளது. இந்த அமைச்சரவை போதிய பெரும் பான்மை இன்றித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, பாரதிய சனதாக் கட்சி அரசு தமிழகத்தில் குடிஅரசுத் தலைவர் ஆட்சியை அறி வித்திட முயற்சிக்கிறது.

அதன் விளைவாகத்தான், தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்கள், நேரிடையாகத் தமிழ்நாட்டு மாவட்டங் களின் நிர்வாக நிலைமை பற்றி அறிந்திடத் திட்டமிட்டு, 14-11-2017இல் கோவை மாவட்ட ஆட்சியர், கோவை மாவட்டக் காவல் துறைத் தலைவர், கோவை மாநகராட்சி ஆணையர் அடங்கிய மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தை, தமிழக முதல மைச்சருடைய ஒப்புதல் இல்லாமல் அவரே நேரடியாக நடத்தியிருக்கிறார்.

**இது தமிழக ஆளுநரின் அத்துமீறிய செயலாகும். எந்த மாநிலத்திலும், 1952க்குப்பிறகு உள்ள 65 ஆண்டுக் காலத் தில் எப்போதும் இப்படிப்பட்ட அத்துமீறல் நடந்தது இல்லை.**

எப்படியாவது, திராவிடப் பண்பாட்டு அடையாளங் களுடன் விளங்கும் தமிழகத்தில், விரைவில் குடிஅரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தி, இப்போதுள்ள ஆளுநரைக் கையாளாக வைத்துக் கொண்டு, பாரதிய சனதாக் கட்சி தமிழகத்தில் காலூன்றிட எல்லாம் செய்கிறது, மோடி அரசு.

**தமிழின உணர்வும், திராவிடப் பண்பாட்டுக் காப்பு உணர் வும் உள்ள எல்லாக் கட்சியினரும் இந்தச் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு, மோடியின் மோசடித் திட்டத்தை அம்பலப்படுத் துங்கள்.**

**- வே. ஆனைமுத்து**

# இந்தியக் கடலோரக் காவல் படையினர் தமிழக மீனவர்கள் மீது நிகழ்த்திய அட்டூழியம்

க. முகிலன்



தமிமீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஆயுதம் ஏந்திய ஈழப் போராளிக் குழுக்களுக்கும் சிறிலங்காவின் அரசுப் படைகளுக்கும் இடையே தாக்குதல்கள் தொடங்கிய பின் கடந்த 35 ஆண்டுகளில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களைச் சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டத்தில் 700க்கும் மேற்பட்ட மீனவர்கள் இறந்துள்ளனர். மேலும் எல்லைத் தாண்டி வந்து சிறிலங்கா கடற்பகுதியில் மீன்பிடித்ததாகக் கூறி மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் சிறிலங்கா கடற்படையினர் கைப்பற்றிச் சிறையில் அடைக்கும் கொடுமை தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது.

சிறிலங்காவில் சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று தமிழக அரசு நடுவண் அரசுக்கு மடல் எழுதுவது, இந்திய அரசு சிறிலங்கா அரசுக்கு வேண்டுகோள் விடுப்பது என்கிற நாடகங்கள் தொடர்கின்றன. பல மாதங்கள் சிறிலங்கா சிறையில் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட பின் தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களின் படகுகளும் மீன்பிடி வலைகளும் திருப்பித் தரப்படுவதில்லை. இந்த மீனவர்கள் தமிழகம் திரும்பிய பின் மீண்டும் மீன் பிடித்தொழிலில் ஈடுபட முடியாமல் தத்தளிக்கின்றனர். இவர்களின் குடும்பங்கள் கொடிய வறுமையில் உழல்கின்றன.

இதுவரையில் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு வந்த தமிழக மீனவர்கள் இப்போது இந்தியக் கடலோரக் காவல் படையாலும் தாக்கப்படும் கொடுமை நிகழ்ந்துள்ளது. இராமேசுவரத்திலிருந்து 13.11.2017 அன்று 30 படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்றனர். நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இந்தியக் கடலோரக் காவல் படையின் இராணி அபாதா-77 என்கிற கப்பல் அப்பகுதிக்கு வந்தது. அக்கப்பலிலிருந்து ஏழு வீரர்கள் ஒரு இரப்பர் படகில் ஏறி வந்து அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுகளை விரட்டி வந்தனர். ஒரு படகை நோக்கிச் சுட்டனர். அந்தப் படகில் இருந்த பிச்சை ஆரோக்கியதாசு, ஜான்சன் ஆகிய மீனவர்கள் மீது துப்பாக்கிக் குண்டு உரசிச் சென்றதில் அவர்கள் காயம் அடைந்தனர். அந்தப் படகை விரட்டிப் பிடித்து அப்படகில் இருந்த நான்கு மீனவர்களைத் தாக்கினர். அப்போது தமிழில் பேசிய மீனவர்களை இந்தியில் பேசுமாறு அடித்தனர்.

14.11.2017 அன்று கரைக்குத் திரும்பிய இம்மீனவர்கள் இராமேசுவரம் மருத்துவமனையில் மருத்துவம் செய்து கொண்டனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பிச்சை ஆரோக்கியதாசு தமிழக அரசின் கடலோரப் பாதுகாப்புக் காவல் நிலையில் புகார் அளித்தார். காவல்துறை ஆய்வாளர் இராசராசன், "இராணிஅபாதா" கப்பலில் இருந்த இந்தியக் கடலோரக் காவல் படையினர் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 323, 307 ஆகிய விதிகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தார். படகிலிருந்த துப்பாக்கிக் குண்டைத் தடயவியல் ஆய்வுக்காக அனுப்பினார்.

இந்தியக் கடலோரக் காவல்படையால் இராமேசுவரம் மீனவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டதைத் தமிழக அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் கடுமையாகக் கண்டித்தன. இந்தியக் கடலோரக் காவல்படையினர் சார்பில் துப்பாக்கியால் சுடவில்லை என்றும், மிகக்குறைந்த திறன் கொண்ட துப்பாக்கியால்தான் (Very-low calibre gun) சுடப்பட்டது என்றும் முரண்பட்ட கருத்துகள் வெளியிடப்பட்டன. இராமேசுவரத்தில் இந்தியக் கடலோரக் காவல்படையினர் மீனவர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து வருத்தம் தெரிவித்தனர்.

அந்நிலையில் சென்னைக்கு வந்த இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் பேசியபோது, "இராமேசுவரத்தில் தமிழக மீனவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கைப்பற்றப்பட்ட தோட்டா தங்களது கிடையாது என இந்தியக் கடலோரக் காவல்படை மறுத்துள்ளது. மீனவர்களைத் தாக்கிய குண்டு எங்கிருந்து வந்தது எனத் தெரியவில்லை. இந்த நிகழ்ச்சி குறித்து விசாரணைக்கு ஆணையிடப்பட்டுள்ளது. விசாரணையின் முடிவில் யார் தவறு செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார். தமிழகர்களிடம் நிலவிய கொந்தளிப்பான மனநிலையைத் தணிப்பதற்காக நிர்மலா சீதாராமன் இவ்வாறு கூறினார்.

நிர்மலா சீதாராமன் கூற்றை நம்பமுடியாது. மருத்து நுழைவுத் தேர்வில் 2017-18ஆம் ஆண்டிற்கு மட்டும் விலக்கு அளித்திட நடுவண் அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறினார். ஆனால் நடுவண் அரசு உச்சநீதிமன்றத்தில் இதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தது.

தமிழகம் 1,076 கி.மீ. நீளம் உள்ள கடற்கரையைக் கொண்டது. கடலோரப் பகுதியில் 608 மீனவக் குப்பங்கள் இருக்கின்றன. 9 இலட்சத்து 85 மீனவர்கள் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நடுக்கடலில் கடுங்குளிரிலும் மழையிலும் மீன் பிடிக்கும் இவர்களின் வாழ்க்கை வாய்க்கும் வயிற்றுக்குமான போராட்டமாக இருந்து வருகிறது. தடை செய்யப்பட்ட இரட்டை மடிவலை மீன்பிடி முறையில் மீன் பிடிப்பதாக மீனவர்கள் கடலோரக் காவல்படையால் பலவகையிலும் துன்புறுத்தப்படுகிறார்கள். காவல்நிலையங்களில் கைது செய்யப்பட்டவர்களைக் காவல்துறையினர் எவ்வாறெல்லாம் கொடுமைப்படுத்துகின்றனரோ, அதேபோன்று நடுக்கடலில் மீனவர்கள் கடலோரக் காவல் படையால் துன்புறுத்தப்படுகின்றனர்.

ஆழ்கடலில் மீன்பிடிக்க இந்திய அரசு பெருமுதலாளிய நிறுவனங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. தமிழக ஏழை மீனவர்கள் ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிக்க வராமல் தடுப்பதற்காகவும், மீன்பிடித் தொழிலிலிருந்தே முற்றாக அவர்களை விரட்டியடிக்கவும், கடலோரக் காவல் படையைக் கொண்டு தமிழக மீனவர்களைத் தாக்கும் வேலையில் இந்திய அரசு இறங்கியுள்ளது. தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்டிட தமிழகர்கள் ஒன்று திரண்டு குரல் கொடுக்கவேண்டும்.

**கட்டுரைத் தொடர்-55**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

தந்தை பெரியார் அவர்கள் இந்தி எதிர்ப்புப் படையின் வரவேற்பின்போது சென்னை கடற்கரையில் 11.9.1938இல் இரண்டு இலட்சம் மக்கள் முன்பு தமிழ்நாடு தமிழருக்கே என்று முழங்கினார்.

நீதிக்கட்சித் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சென்னையில் 29, 30, 31 திசம்பர் 1938இல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டின் தலைமையுரையில் (பெரியார் பெல்லாரி சிறையில் இருந்ததால் அவருடைய தலைமையுரையை ஏ.டி. பன்னீர்செல்வம் படித்தார்) இறுதியில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று கூறி இருந்தார்.

1939இல் அவர் சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஆந்திரர்களும், மலையாளிகளும் "நீங்கள் தமிழ்நாடு தமிழருக்கே என்றால், நாங்கள் எங்கே போவது" என்று கேள்வி எழுப்பினர். அப்போது மொழிவழி மாநிலம் பிரியவில்லை. காங்கிரசுக் கட்சியைப் போல மொழிவழி மாநில அமைப்பும் நீதிக்கட்சியில் இல்லை. நான்கு மாநில மொழி பேசும் மக்களுக்கு ஒரே அமைப்பாகத்தான் நீதிக்கட்சி செயல்பட்டு வந்தது.

எனவேதான், 'திராவிட நாடு திராவிடருக்கே' என முழக்கம் மாற்றி அமைக்கப்பட்டது.

பெரியார் நீதிக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நடைபெற்ற மிகப்பெரிய நிகழ்வு சென்னை மாகாண ஜஸ்டிஸ் கட்சியின் 15ஆவது மாநாடு ஆகும். இது ஆகத்து 24, 25, 1940இல் திருவாரூரில் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் திராவிட நாடு பிரிவினையைத் தீவிரப்படுத்தக் குழு அமைக்கப்பட்டு, அதுதொடர்பாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவாரூரில் நடைபெற்ற 15ஆம் ஜஸ்டிஸ் மாநாட்டில் பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் ஆற்றிய தலைமைப் பேருரை**

அன்பார்ந்த வரவேற்புத் தலைவர் அவர்களே! அருமைத் தோழர்களே!!

தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகிய ஜஸ்டிஸ் கட்சியின் 15ஆம் மகாநாட்டின் தலைமைப் பதவியை எனக்களித்து என்னைப் பெருமைப்படுத்தியதற்காக நான் எனது உளம் நிறைந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற வருட மகாநாட்டுக்கும் தலைமைப் பதவி வகிக்க என்னையே தேர்ந்தெடுத்தீர்கள். இவ்வருடமும் என்னைத் தேர்ந்தெடுத்தது என்னிடத்தில் தங்களுக்கிருக்கும் அன்பும் நம்பிக்கையுமே என்று கருதி நான் பெருமை அடைகிறேன்.



நம் கட்சி விஷயமாகவும் மற்றும் பல விஷயங்களைக் குறித்தும் சென்ற வருடத்திய மகாநாட்டின் போது எனது தலைமை உரையில் பல எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகையால் இவ்வருடம் அதற்குப் பின் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்தும் நமது முக்கியமான தேவைகளைக் குறித்தும் நமது முன்னணி வேலைகளைக் குறித்தும் இச்சமயத்தில் பேசுவது அவசியமெனக் கருதுகிறேன்.

**செல்வம்**

சென்ற வருடத்திய மகாநாட்டின் போது நான் நேரிலிருந்து தலைமை வகிக்க முடியாமல் ஆரியக் காங்கிரஸ் ஆட்சியின் அடக்குமுறையின் பயனாய் சிறையிலிருக்க வேண்டியதாகிவிட்டதால் எனக்குப் பதிலாக மகாநாட்டின் தலைமைப் பதவியிலிருந்து காரியாதிகளைச் சிறப்பாக நடத்தினவரும், நமது கட்சிக்கு ஆரம்பித்த காலமுதல் ஒரே கொள்கையுடனிருந்து அருந்தொண்டாற்றி வந்து முக்கிய தூண் போலிருந்தவருமான நமதருமைத் தோழர் ஸர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் எதிர்பாராத முடிவடைந்து இன்று நம்மத்தியில் இங்கில்லாதிருப்பது நமக்கு சகிக்க முடியாததும், பரிகரிக்க முடியாததுமான பெரும் துக்கமும், நஷ்டமுமான காரியமாகும் என்பதோடு அவரது குடும்பத்தாருக்கு எனது தனிப்பட்ட ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இந்தி எதிர்ப்புத் தொண்டர்கள்**

மற்ற விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு முன், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வரிந்து கட்டி முன்னணியில் நின்று காங்கிரஸ் அடக்குமுறை ஆட்சியில் பலியாகி சிறைப்பட்டு கஷ்ட நஷ்டமடைந்த தோழர்களுக்கும், தாய்மார்களுக்கும் மற்றும் உயிரை விட்ட வீரர்களுக்கும் நமது பாராட்டுதலும் நன்றியறிதலும் அனுதாபமும் உரியதாகும். உயிர் விட்ட வீரர்களின் மனைவி மக்களுக்கும், குடும்பத்தாருக்கும் என் தனிப்பட்ட அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**யுத்தம்**

அடுத்தாற்போல் நாம் மிகுதியும், கவலையும், பயமும் கொள்ளத்தக்கதான சம்பவம் ஒன்று ஏற்பட்டிருப்பதை இங்கு குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை. அது என்னவெனில் இப்போது ஐரோப்பாவிலும், மற்றும் சில இடங்களிலும் செர்மனியின் கொடுமையான முறைகளின்கீழ் நடத்திவரும் அகோர யுத்தமேயாகும்.

இந்த யுத்தம் செர்மனிக்கும் ஐரோப்பிய மற்ற நாடுகளுக்குமோ அல்லது செர்மனிக்கும், ஏதோ சில நாடுகளுக்கு மாத்திரமோ நடக்கும் யுத்தமாகக் கருதக்கூடியதல்ல. இது உலகச் சுதந்தரத்திற்கும் நாகரிகத்திற்கும் அழிவு ஏற்படக் கூடியதான ஒரு மாபெரும் கேடான காரியமென்றுதான் சொல்ல வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டாவது செர்மனி இந்த யுத்தத்தில் (வெற்றி பெறாது என்றாலும்) ஒரு சமயம் வெற்றி பெற்றுவிட்டால் மற்ற நாடுகள் ஐரோப்பிய நாடுகளுக்கு மாத்திரமல்லாமல் நம் நாட்டுக்கும் பெரியதொரு கேடாக முடியுமென்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. ஆகவே இன்று கிரேட் பிரிட்டனானது செர்மனியை எதிர்த்து போராடுவது பிரிட்டனுடைய நன்மைக்கு மாத்திரமல்லாது இந்தியாவின் பாதுகாப்பிற்கும் சுதந்தரத்திற்கும் போராடுகிறதென்பதை ஒவ்வொருவருடைய மனதிலிருத்த வேண்டியதும் அதற்காக வேண்டி நம்மாலான எல்லா உதவிகளையும் பிரிட்டனுக்குச் செய்ய வேண்டியதும் நம்முடைய கடமையாகும்.

**நம் கட்சி**

நம்முடைய கட்சியாகிய இந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கமானது 25 வருடத்திற்கு முன்பாகவே முக்கியமாய் தென்னாட்டுத் திராவிட மக்கள் அரசியல், சமுதாயம், கல்வி, பொருளாதாரம் முதலிய துறைகளில் தலையெடுக்க முடியாமல் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் நிலையிலிருந்து மீட்கப்படச் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. அதற்காகவே அக்கட்சியினுடைய முக்கியமான கொள்கைகள் எல்லாம் அரசியல் சமுதாய விடுதலையும். அரசியல் தனித்தொகுதிப் பிரதிநிதித்துவ உரிமையும், அரசாட்சி, உத்தியோகம், பதவி ஆகியவைகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் ஆகும். இவைகளுக்காக இந்த இருபத்தைந்து வருட காலமாய் நம் கட்சி ஸ்தாபனம் எவ்வளவோ உழைத்து வந்தும் எந்தக் குறிப்பிடத்தகுந்த அளவிற்கும் முன்னேற்றமடைந்ததாகவோ விடுதலை அடைந்ததாகவோ சொல்வதற்கில்லை.

மற்றும் நம் முக்கியக் கொள்கைகளில் தனித் தொகுதி தேர்தல் உரிமையை நாம் சரிவர வலியுறுத்தாமல் அலட்சியமாயிருந்து நழுவ விட்டுக் கொண்டே வந்துவிட்டோம் என்று வருத்தத்துடன் சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன். அந்தக் காரணமே நம்முடைய மக்கள் மேலும், மேலும் கட்டுக் குலைந்து போகவும், எதிரிகளுக்குக் கையாளாக இருந்து நமது சமுதாயத்தைக் காட்டிக் கொடுக்கவும் ஏற்பட்டு விட்டது. மேலும் இந்தத் தனித்தொகுதி முறையை நம் மற்றெல்லாக் கொள்கைகளையும் விட முக்கியமானதெனக் கருதி நாம் சரியானபடி வலியுறுத்தாமல் விட்டுவிட்டதானது நம் கட்சியில் நிகழ்ந்த ஒரு தப்பிதமாகவும் கருதக்கூடியதாகி விட்டது.

**தனித்தொகுதி**

ஏனெனில், நம் நாட்டைப் போல் உள்ள அதாவது கொள்கைகளிலும் இலட்சியங்களிலும் சமுதாயத் துறையிலும் பல மாறுதல்கள் கொண்ட மக்களையுடைய ஒரு நாட்டில்


சென்னை மாகாண
ஜஸ்டிஸ் கட்சி
15-வது மாநாடு
24, 25-8-40ல்
திருவாரூர் "செல்வம் நகரில்" அமைக்கப்பட்ட
ஜின்னா மண்டபத்தில்
நடைபெறும்

மாநாட்டின் தலைவர்
பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள்

மாநாட்டின் திறப்பாளர்
செட்டிநாட்டு குமாரராஜா
ஸர். ஏ. முத்தையா செட்டியார் பி. ஏ.,
எம். எல். ஏ. அவர்கள்

மாநாட்டில் கொடியேற்றுபவர்
தோழர் பி. ராமச்சந்திரரெட்டியார் அவர்கள்

கொச்சி திவான்
ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களும்

[illegible]

இங்ஙனம்,
என். ஆர். சாமியப்பா,
வரவேற்புக்கழகத்தலைவர்.

தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதி ஒவ்வொருவரும், அந்தந்த கொள்கைக்கும் இலட்சியங்களுக்கும் ஏற்ற வகுப்பு வர்க்க மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்கள் அத்தேர்தல்களில் பிரவேசிக்க இடம் இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் உண்மையான பிரதிநிதிகள் வரமுடியும். சட்டசபையில் இருக்கும் போதும் பதவி பெறும் போதும் தனது வகுப்பு மக்களால் தெரிந்தெடுத்தனுப்பப்பட்ட பிரதிநிதி என்பதும் ஞாபகத்திலிருக்க வேண்டும். எப்படியெனில் வியாபார வகுப்புக்கு வியாபாரப் பிரதிநிதியும், கற்றோருக்கு கற்றோர் பிரதிநிதியும் ஐரோப்பியருக்கு ஐரோப்பிய பிரதிநிதியும், முசுலீமுக்கு முசுலீம் பிரதிநிதியும், கிறித்தவர்களுக்கு கிறித்தவ பிரதிநிதியும், ஆதிதிராவிடருக்கு ஆதிதிராவிட பிரதிநிதியும் இருக்க வேண்டும். அதுபோலவே ஆரியருக்கும் இருப்பதை நாம் ஆட்சேபிப்பதில்லை. இந்த இருவருக்கும் சமய சமுதாயக் கொள்கையில் பேதமில்லையா - முசுலீமுக்கும் கிறித்தவருக்கும் என்ன பேதமோ அதைவிடக் குறைவாகவோ ஆதிதிராவிடருக்கும் மற்ற ஆரியர், திராவிடர் ஆகியோருக்கும் என்ன பேதமோ அதைவிடக் குறைவாகவோ இருக்கிறதா?

எப்பொழுது பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், ஆதிதிராவிடர், கிறித்தவர், முசுலீம்கள், ஐரோப்பியர் முதலிய வகுப்பு, வர்க்கம், சமயம் ஆகியவைகளாக இந்நாட்டு மக்கள் பிரிக்கப்பட்டு உத்தியோகப் பதவி எண்ணிக்கையும் பிரிக்கப்பட்டு விட்டதோ சில வகுப்பார்களுக்குத் தனித்தொகுதித் தேர்தல் முறையும் கொடுக்கப்பட்டு விட்டதோ அப்போதே பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் தேர்தல் தொகுதியும் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படித் தொகுதி பிரிக்கப்படவில்லையானால், பிரதிநிதித்துவம் கொடுத்தது என்பது எப்படி பூரணமானதாகும்.

இந்நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் சிக்கலுக்கே முக்கிய காரணம் புலி போலவும், ஆடு போலவும் உள்ள பல வகுப்பு மக்களையும் ஒரு பட்டியில் சேர்த்து கையில் வலுத்த எந்த வகுப்புக்காரரையும் விட்டு வேட்டை ஆடச்செய்துவிட்ட கொடுமையே ஆகும். அதனாலேயே பலமற்ற ஒவ்வொரு வகுப்பு மக்களும் அவர்கள் எவ்வளவு பெரும்பான்மையோராக இருந்தும் பொதுப்பட்டியில் இருந்து தப்பித்து ஓடி தனி பாதுகாப்புத் தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று. எதிரிகளிடம் அடைக்கலம் புக வேண்டியதாயும் ஆயிற்று. ஆதலால் இப்படிப்பட்ட வகுப்புக் கூட்டங்களில் இருந்து சிறுபான்மை, பெரும்பான்மை பார்ப்பது என்பது விஷயமறியாத காரியமேயாகும்.

கையெழுத்துக் கூடப் போடத் தெரியாத பதினாயிரம் பேர்களுக்கும் கையெழுத்து தெரிந்தும் கற்றறிந்தவராயும் உள்ள பத்துப் பேருக்கும் கல்வி போட்டி ஏற்பாட்டால் யார் வெற்றி பெறுவார்கள்? ஆகையால், திராவிட நாட்டில் உள்ள பழம்பெரும் குடிகள் நூற்றுக்குத் தொண்ணூற்று மூன்று பேர்கள் தற்குறி. இது அரசியல் புள்ளிவிபரமாகும். மற்றும் அவர்கள் சமுதாயத்துறையில் பல உயர்வு தாழ்வுகளாகப் பிரிக்கப்பட்டு பலவகையிலும், ஒற்றுமையற்று பிரிந்து தங்களிலே வேற்றுமையும் பொறாமையும் கொண்டு பேதப்பட்டு நிற்பவர்களாகும். இப்படிப்பட்ட இவர்களோடு நூற்றுக்கு நூறு பேர் படித்தவர்களும் சமுதாயத் துறையில் எவ்வித பேதம் இல்லாதவர்களும் இமயம் முதல் குமரி வரையிலும் மிகவும் கட்டுப்பாடாகவும், சூழ்ச்சித்திறனாகவும் உள்ள மக்களை விட்டு அரசியல் போட்டியில் கலக்கினால் யார் வெற்றி பெறுவார்கள் என்பது நான் எடுத்துச் சொல்ல வேண்டுமா? இதனாலேயே திராவிடர்களாகிய நாம் (பார்ப்பனரல்லாதார்கள்) வெகுகாலமாக நஷ்டப்பட்டு வந்திருக்கிறோம். அதிலும், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்தாம் வருஷத்துச் சீர்திருத்தம் வந்த பிறகு நசுக்கப்பட்டே போய் விட வேண்டியவர்களாக ஆகிவிட்டோம். ஏனெனில், அச்சீர்திருத்தத்தில் நமக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் போய்விட்டதுடன் முன் இருந்த சிறிது பாதுகாப்பும் எடுக்கப் பட்டுவிட்டது. ஆதலால் இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் பார்ப்பனரல்லாதாருக்குத் தனித்தொகுதி கொடுக்காத எந்த சீர்திருத்தத்தையும் நமது கட்சியார் பூரணமாய் நிராகரித்து விடத் துணியாத வரை இனி வரப்போகும் சீர்திருத்தங்கள் என்பவற்றில் நமக்கு விடுதலை ஏற்படப்போவதே இல்லை.


ஈ. வெ. ரா. வேண்டுகோள்

ஈ. வெ. ராமசாமி

தோழர்களே!

நமது (ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லப்படும்) தென் இந்திய நலவுரிமைச் சங்கத்தின் 15-வது மாநாடு இம் மாதம் 24, 25-ந் தேதிகளில் திருவாரூரில் நமது தலைவர் என். ஆர். சாமியப்ப முதலியார் அவர்களது வரவேற்பில் மிக்க சிறப்பாய் நடைபெற ஏற்பாடாகி அதுபற்றிய எல்லாக் காரியங்களும் வெகு தீவிரமாக நடந்து வருகின்றன.

நம் மக்கள் சமய சமுதாயத்தின் பேரால் பிரிக்கப்பட்டு போதுமான ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லாமல் இருப்பதோடு எதிரிகளது சூழ்ச்சியால் நமக்குள் பலவித அபிப்பிராய பேதங்கள் இருக்க நேரிட்டிருப்பதோடு நாமில் பலர் எதிரிகளுக்கு கையாளாகவும் இருந்துவரத்தக்க கீழான நிலையில் இருக்கிறோம்.

இவற்றிற்குப் பரிகாரம் தேடி நாம் உரிய நிலையை அடைய நமக்கு இன்று ஜஸ்டிஸ் கட்சி என்னும் இத் தென்னிந்திய நலஉரிமைச்சங்கம் சரியான வழிகாட்டி பாதுகாப்பும் விடுதலையும் அளிக்கக்கூடியதாயும் இருக்கத்தக்க ஸ்தாபனமாய் இருந்துவருகிறது. ஆதலால் இச் சங்கத்தை நமக்குவேண்டிய நன்மை எல்லாம் தர வல்லமையுடையதாக ஆக்கவும் மக்களும் அரசாங்கமும் மதிக்கத்தக்கதாக ஆக்கவும் திராவிட மக்கள் எல்லோரும் திரள்திரளாக திருவாரூர் வந்து சமூகமளித்து வெற்றிபெற நடத்தித்தர வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஈரோடு
13-8-40

ஈ. வெ. ராமசாமி
தென் இந்திய நல உரிமைச்சங்க தலைவர்.

இதற்கு மாறுபாடான அபிப்பிராயம் கொண்டவர்கள் “ஒரு நாட்டு மக்கள் இப்படி பிரிக்கப்படுவதால் நாட்டின் பொது வாழ்வும் ஒற்றுமையும் கெட்டுவிடும்” என்று சொல்ல வரலாம். அப்படிச் சொல்லுவது வாதத்திற்கு நிற்காது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். ஒரு நாட்டின் பொது வாழ்வும் ஒற்றுமையும் அந்நாட்டு மக்களின் ஒவ்வொரு வகுப்பின் முன்னேற்றத்திலும் திருப்தியிலும் இருக்கிறதே ஒழிய, ஏதோ ஒரு வகுப்பு எல்லாத் துறையிலும் மேம்பட்டு சுகவாழ்வு வாழவும் மற்ற எல்லா வகுப்புகளும் கீழ்துறையில் இழிமக்களாகக் கருதப்பட்டு அடிமை வாழ்வு வாழவும் இருக்கும் நிலைமையிலும் இருப்பதைக் கொண்டல்ல.

உதாரணமாக இந்நாட்டுக்குச் சுமார் அரை நூற்றாண்டுக்குள் பல அரசியல் சீர்திருத்தங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டிருக்கின்றன என்றாலும், அச்சீர்திருத்தங்களில் 1910ஆம் வருடத்திலேயே தனித்தொகுதி உரிமை வழங்கப் பெற்ற முசுலீம்களும் கிறித்தவர்களும் ஒற்றுமையாகவும் கட்டுப்பாடாகவும் இருக்க நேர்ந்ததோடு அவர்களுக்கு உண்மையான பிரதிநிதிகளும் வரமுடிந்தது. அரசியல் பதவி, உத்தியோகம் முதலானவைகளில் அவர்களுடைய பங்கும் கிடைத்து அதை அனுபவிக்கத் தகுந்த யோக்கியதையும்

பெறமுடிந்தது. கண்விழிப்போடுஇருந்து மற்ற வகுப்பார் தங்களைச் சூறையாட முடியாமல் பாதுகாத்துக் கொள்ளவும் தக்கபடி முன்னேற்றமடையவும் முடிகிறது. அவர்கள்போல் இந்நாட்டுப் பழம்பெருங்குடி மக்களாகிய நாமும் அக்காலத்தில் கிளர்ச்சி செய்து தனித்தொகுதி உரிமை பெற்றிருந்திருப்போமேயானால் நமது நிலைமை இன்று உலகிலேயே மதிக்கத் தகுந்த ஒரு முக்கியமான சமுதாயமாக இருந்திருப்போம் என்றாலும் 1920ஆம் வருடச் சீர்திருத்தத்தின் போதாவது நம் தலைவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு நம் சமுதாயத்தைப் பார்ப்பனரிலிருந்து வேறாகப் பிரித்துத் தனிப்பட்ட சமுதாயமாகச் செய்து அதை அரசாங்கத்தாரும் மற்ற மக்களும் ஒப்புக்கொள்ளச் செய்து ஆதாரங்களில் பதிய வைத்தார்கள். இதற்காக நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பின் உள்ள தலைவர்கள் சிலர் தங்கள் தங்கள் நிலைமையைப் பார்த்து சமுதாயத்தைக் கணித்தார்களே ஒழிய எதிரிகளின் கட்டுப்பாட்டையும் சூழ்ச்சித்திறத்தையும் சரியானபடி கணித்துக் கொள்ளவில்லை. அதனாலேயே 1935ஆம் வருடத்து சீர்திருத்தத்தில் நம் சமூகத்திற்கு எவ்வித பாதுகாப்பும் செய்து கொள்ளத் தவறிவிட நேர்ந்தது.

ஆதலால், இனிவரும் சீர்திருத்தத்தில் நமது அரசியல் கோரிக்கையானது முதலாவதாக முசுலீம்கள், கிறித்தவர்கள் ஆகியவர்களைப் போலவே மற்ற திராவிடச் சமுதாயத்திற்கும் (பார்ப்பனரல்லாதாருக்கு) தனித்தொகுதி தேர்தல் முறை இருந்தாக வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். அதில்லாத சீர்திருத்தம் எப்படிப்பட்டதாயினும் அதை அடியோடு விலக்கம் செய்து தீரவேண்டும் என்று நாம் முடிவு செய்து கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்லாமல், இம்முடிவை காரியத்தில் கொண்டுவர நாம் எல்லாவித கஷ்ட நஷ்டங்களை ஏற்கவும் கடைசிவரை போராடவும் நாம் உறுதி கொள்ள வேண்டும். இதிலே தான் நமது பிற்கால வாழ்வின் நிலை இருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதுபோலவே எனது ஆதிதிராவிட வகுப்பாரும் நம் எல்லோருடைய கூட்டுறவு முயற்சியாலும் அடைந்த தனித்தொகுதி உரிமையைப் பூனா ஒப்பந்தத்தின் பேரால் இழந்துவிட்டு முன்னிருந்த நிலையை விட மிக மோசமான நிலைமைக்குப் போக நேர்ந்த தவறுதலை உணர்ந்து இனி மேலாவது கட்டுப்பாடாய் எச்சரிக்கையாய் இருந்து பூரண பரிசுத்த தனித்தொகுதி முறையை வலியுறுத்தி வெற்றி பெற வேண்டும் என்றும் அதற்கு ஆக நாமும் நம்மாலான எல்லாவித ஒத்துழைப்பும் அளிக்கத் தயாராய் இருக்கிறோமென்றும் தெரிவித்துக் கொள்ளுவதோடு நமது முயற்சிக்கு அவர்களது ஒத்துழைப்பும் இருக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

- **'குடிஅரசு' 25.08.1940**

❖

**(தொடரும்)**


# தமிழ்க் குடியரசுப் பதிப்பகத்தின் நூல்கள்

**07.01.2018 ஞாயிறு** அன்று

**சென்னையில்** நடைபெறும் மாநாட்டில்

**50 விழுக்காடு தள்ளுபடி விலையில் கிடைக்கும்**




**மா.பெ.பொ.க. தோழர்களும், மற்றெல்லோரும் வாங்கிப் பயன்பெறுங்கள்!**

**- வாலாசா வல்லவன்**

பேசி : 7299214554

# வே. ஆனைமுத்து-சுசீலா சம்பந்தியின் மகன்
# க. முருகானந்தம்
# நேர்ச்சிக்குள்ளாகி மறைந்தார்



திட்டக்குடி வட்டம், ம.புடையூர் த. கரும்பாயிரம்-துளசி இணையரின் மூத்த பிள்ளை முருகானந்தம். அவருடைய துணைவியாரின் பெயர் செல்வி. அவர்களுக்கு மூன்று ஆண் பிள்ளைகள். கணவன் மனைவி இருவரும் 08.11.2017 புதன்கிழமை அன்று இருசக்கர வாகனத்தில் தொழுதூரில் பெட்ரோல் வங்கியில் எண்ணெய் போட்டுக் கொண்டு சாலையை நோக்கி வந்தனர். எதிர்பாராத விதமாக, ஒரு மகிழுந்து எண்ணெய் போட பெட்ரோல் வங்கி உள்ளே வந்தது. இரண்டு வண்டிகளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

மகிழுந்தின் இரண்டு சக்கரங்களும் வெடித்தன. வண்டியை ஓட்டிய முருகானந்தம், செல்வி இரண்டு பேரும் தூக்கி எறியப்பட்டனர். முருகானந்தம் வலதுக் கால் ஒடிந்துவிட்டது. மண்டையின் பின் பகுதியில் பலத்த அடிபட்டுக் கீழே விழுந்துவிட்டார். அவருடைய மனைவி செல்விக்கு மண்டையில் அடி. மகிழுந்து உரிமையாளரே காவல்துறை மற்றும் எல்லோருக்கும் இச்செய்தியைத் தெரிவித்தார்.

உடனே, திருச்சியில் தனியார் காவிரி மருத்துவ மனையில் சேர்த்தனர். உயிருக்கு ஆபத்து இருந்தது.

வே.ஆனைமுத்து-சுசீலா இணையரின் மகன் வீரமணி. அவர் த. கரும்பாயிரம்-துளசி இணையரின் ஒரே மகள் மலர்க்கொடியை 13.9.1998இல் மணந்தார். ஆனை. வீரமணி, முருகானந்தத்தின் மைத்துனர். அவர் உடனே திருச்சி மருத்துவமனைக்குச் சென்றார்; எனக்கும் என் குடும்பத்தினர் எல்லோருக்கும் முருகானந்தம் நிலையைப் பற்றிச் சொன்னார்.

திருச்சி மருத்துவமனை வைத்தியம் கைகொடுக்கவில்லை. எல்லோரும் கவலை கொண்டார்கள். வைத்தியம் பயன்படாமல், முருகானந்தம், தம் 47ஆம் அகவையில், திருச்சி காவிரி மருத்துவமனையில் 13.11.2017 திங்கட்கிழமை அன்று பிற்பகல் 3.20 மணிக்கு மறைந்தார். முருகானந்தத்தின் இறுதி நிகழ்வு 14.11.2017 செவ்வாய்கிழமை ம.புடையூரில் நடை பெற்றது.

வே. ஆனைமுத்து-சுசீலா குடும்பத்தின் சார்பில் மூத்த மகன் ஆனை. பன்னீர்செல்வம் - செ. போதாம்மாள் இணையர், புதுவையில் இருந்து, சீனு. அரிமாப் பாண்டியன்-தமிழ்ச்செல்வி இணையர், ஆனை. வெற்றி-விசயலட்சுமி இணையரும், ஆனை. வீரமணி -மலர்க்கொடி இணையரும், ஆனை. அருள்மொழி யின் கணவர் க. இராமச்சந்திரன் ஆகியோரும், முருக்கன்குடியிலிருந்து வே.ஆனைமுத்துவின் தம்பி வே.இளங்கோ குடும்பத்தினரும், வீ.பாலுசாமி குடும்பத்தினரும் 14.11.17 இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஒரே மகனை இழந்து துயருறும் பெற்றோர் த.கரும்பாயிரம்-துளசி ஆகியோருக்கும், முருகானந்தம் துணைவியார் செல்வி அம்மையாருக்கும், அவர்களின் மூன்று மகன்களுக்கும், உடன்பிறந்த ஒரே தங்கை க. மலர்க்கொடி - வீரமணி இணையருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் வே. ஆனைமுத்து ஆகிய என் சார்பிலும், என் துணைவியார் சுசீலா அம்மையார் சார்பிலும் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் உரித்தாக்கு கிறேன்.

**வாழ்க க. முருகானந்தம் புகழ்!**

**- வே.ஆனைமுத்து**

### குசராத் சட்டமன்றத் தேர்தல் 2017 திசம்பர் 9, 14 தேதிகளில் நடைபெற உள்ளது

அங்கு வாக்குச்சாவடிக்கு வாக்காளர்களை அழைத்து வர முழுநேரச் சம்பளக்காரர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் கூடுதலாக வாக்காளர் பட்டியலில் ஒரு பக்கத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிற 25 அல்லது 30 வாக்காளர்களை அழைத்துக் கொண்டு போக, ஒரு பக்கத்துக்கு ஒரு பிரமுகர் அமர்த்தப்பட்டிருக்கிறார்.


("The Hindu", 22.11.2017, பக்கம் 15).

முதலாளித்துவத்தைக் காப்பாற்றிட பாரதிய சனதாவும், மோடி அரசும் குசராத்தில் பணத்தைத் தண்ணீராகப் பாய்ச்சி வருகிறது. இவர்கள் பேசும் ஊழலற்ற ஆட்சிமுறை இதுதான்.

**- வே. ஆனைமுத்து**

### தந்தை பெரியார் திராவிடர் கழகம் வெளியிடும்

# பெரியார் - அம்பேத்கர் நூல்கள் முன் பதிவுத் திட்டம்





## பெரியார் - அம்பேத்கர்

### இந்துமதத்தை சுட்டெரிக்கும் சூரியன்கள்

இந்துமதம், புராணங்கள், இதிகாசங்கள், வேதங்கள், பகவத்கீதை, கடவுள்கள், சடங்குகள், ஜாதிய சமூக அமைப்பு, இந்து சமூக உறவுகள், காந்தியம் குறித்தும் தாங்கள் விரும்பும் சமூகம் பற்றியும் ஒரே நேர்கோட்டில் அமைந்த தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் ஆகியோரின் எழுத்தும் பேச்சும் அடங்கிய நூல்கள்.

மூன்று தொகுதிகள் – 1250 பக்கங்கள்




## கேரளாவில் பெரியார்

கேரளாவில் பெரியாரின் போராட்டம் என்றால் வைக்கம் போராட்டம் மட்டுமே நினைவுக்கு வரும். ஆனால், வைக்கம் தவிர, கேரளாவில் நிலவிய ஜாதிக் கொடுமைக்கு பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராகவும் அங்கிருந்த சமூக, அரசியல் நிகழ்வுகளில் பெரியாரின் பங்களிப்பை விவரிக்கும் நூல்.

250 பக்கங்கள்

**மொத்தம் : 1500 பக்கங்கள்**

**விலை : ரூ. 1500/**

2017 டிசம்பர் 24 ஆம் தேதியன்று நூல்கள் வெளியிடப்படும்.

●

**1500 ரூபாய் மதிப்புள்ள இந்நூல்கள்**
**முன் பதிவு செய்பவர்களுக்கு 1000/ ரூபாய் மட்டுமே.**

●



முன் பதிவு செய்ய கடைசித் தேதி : 20.12.2017

தொடர்புக்கு : 97883 24474

வெளியீடு : தந்தை பெரியார் திராவிடர் கழகம்

# புரட்சியாளர் அம்பேத்கர்

- மரு.க.சோமாஸ் கந்தன்

அந்த நாளில், சமூக வாழ்வில், மனுநீதியையே வாழ்வியல் அறமாகக் கொண்டிருந்தனர்- ஆட்சியாளரும், மக்களும். அந்த வாழ்க்கை முறையில் நால்வருணம் வலியுறுத்தப்பட்டுப் பின்பற்றப் பட்டக் காரணத்தால். கல்வி, ஆட்சி அதிகாரம் அனைத்திலும் பிராமணர்களே தலைமை வகிப்பவர்களானார்கள்.. மற்றவகுப்பினர் அவர்களுக்கு அடங்கித் தொண்டு புரியும் அடிமைகளாயினர்; கல்வி கற்கும் உரிமையை முற்றிலும் இழந்திருந்தனர். அந்த நாளில் சதாரா மன்னரே படிக்க ஆசைப்பட்டு இரவில் இரகசியமாகக் கல்வி கற்றார் எனில் மற்றக் குடிமக்களின் நிலை என்ன?



இத்தகைய சமூக அமைப்பில் மகர் என்ற தீண்டப்பபடாத வகுப்பில் விடிவெள்ளியெனத் தோன்றித், தீண்டப்படாத வகுப்பினரின் அடிமைத்தளையை அகற்றிடத் தன் வாழ்நாள் முழுதையும் அர்ப்பணித்த சமூகப்போராளி யார்? அவர் வரலாறைக் காண்போம்!

அம்பேத்கர், பிரித்தானிய இந்தியாவில் இராணுவமுகாம் அமைந்திருந்த மாவ் எனுமிடத்தில் 1891 ஏப்ரல் 14 அன்று ராம்ஜி மாலோஜி சக்பால்-பீமாபாய் இணையருக்கு 14-வது மகனாகப் பிறந்தார். அம்பேத்கார் தீண்டப்படாத மஹர் என்ற தாழ்ந்த சாதியில் பிறந்தவர். எல்லா சாதியக் கொடுமைகளுக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கும் ஆட்படுத்தப்பட்டார். அம்பேத்கரின் முன்னோர்கள் நீண்டகாலமாக பிரிட்டிஷ் கிழக்கு இந்தியக் கம்பனியின் இராணுவத்தில் பணியாற்றியவர்கள். அம்பேத்கரின் தந்தை பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தில் சுபேதாராக பணிபுரிந்தவர். ராம்ஜி மாலோஜி சக்பால் 1894 ஆம் ஆண்டு இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இரண்டு ஆண்டுகள் கழித்து குடும்பத்துடன் சதாரா என்ற ஊருக்குச் சென்றார். சிறிது காலத்திற்குப்பின் அம்பேத்கர் அன்னை மரணம் அடைந்துவிட்டார். மூன்று ஆண் மக்களையும் -பல்ராம், ஆனந்த்ராவ், பீம்ராம் இரண்டு பெண் மக்களையும்-மஞ்சுளா, துல்சா ஆகியோரையும் அவர்களது அத்தை மிகுந்த கஷ்டங்களுக்கிடையேயும் அன்புடன் வளர்த்துவந்தார். இவர்களில் அம்பேத்கர் மட்டுமே உயர் கல்வி பயிலச் சென்றார். இரத்னகிரி மாவட்டத்திலுள்ள அம்பாவடே என்பது அவர்களது சொந்தக்கிராமம். அதனால் அம்பாவடேகர் என்பது அவர்களது குடும்பப் பெயராயிற்று. அதுவே பின் நாளில் அம்பேத்கர் என்று மருவியது.

**இளமையில்**

சதாராவில் தொடக்கப் பள்ளியில் அம்பேத்கர் கல்வி பயின்றார். அந்தப் பள்ளியில் (அம்பேத்கர்) தீண்டத்தகாத மாணவர்கள், மற்ற மாணவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப் பட்டனர். ஆசிரியர்களும் அவர்களது கல்வி வளர்ச்சியைப் பற்றிக் கண்டுகொள்வதில்லை. பள்ளியின் உள்ளே அவர்களை அமர வைப்பதில்லை. அவர்கள் தண்ணீர் அருந்த வேண்டும் என்றால் மேல் சாதி மாணவன் மேலிலிருந்து நீரை ஊற்ற, கையேந்தி அருந்தவேண்டும். கீழ்சாதி மாணவர் தண்ணீரையும் பாத்திரத்தையும் தீண்டக்கூடாது. தீண்டினால் நீரும் பாத்திர மும் தீட்டாகிவிடும். அம்பேத்கருக்குக் குடிக்க நீர் ஊற்றுபவர் பள்ளிச் சேவகர். சேவகர் பள்ளியில் இல்லையெனில் அம்பேத்கருக்கு அன்று குடிக்க தண்ணீர் கிடையாது. அம்பேத்கர் வீட்டிலிருந்து கோணிப்பை கொண்டுவந்து அதில் அமர்ந்து தான் கல்வி. கற்கவேண்டும். வீட்டிற்குச் செல்லும்போது கோணிப்பையை எடுத்துச்செல்லவேண்டும்.

அம்பேத்கர் குடும்பத்தினர் 1897 ஆம் ஆண்டுமுதல் பம்பாயில் வசிக்கத் தலைப்பட்டனர். ஆங்கே எல்பின்ஸ்டன் உயர் நிலைப்பள்ளியில் கல்வியைத் தொடர்ந்தார் அம்பேத்கர். அந்தப் பள்ளியில் அவர் ஒருவர்மட்டுமே தாழ்த்தப்பட்ட மாணவர். அந்தப் பள்ளியிலும் தீண்டப்படாத மக்கள் மீதான கொடுமைகள் தொடர்ந்தன. ஒரு நாள் ஆசிரியர் அவரைக் கரும்பலகையில் ஒரு கணக்கைப் போடப் பணித்தார். அவர் கரும்பலகை நோக்கிச் செல்லுமுன் சகஉயர்சாதி மாணவர்கள் கூக்குரலிட்டவண்ணம் ஓடிக் கரும்பலகைக்குப் பின் வைக்கப்பட்டிருந்த உணவுப் பாத்திரங்களை எடுத்துச் சென்றனர் - தங்கள் உணவு தீட்டா வதைத் தவிர்ப்பதற்காக. அந்நிகழ்வைக் கண்ட ஆசிரியர் ஒருவர், அம்பேத்கர் படிப்பதே வீண் என்றார். அம்பேத்கர் சமஸ்கிருதம் படித்திட விழைந்தார். ஆனால் பிராமணர் தவிர வேறெவரும் சமஸ்கிருதம் படிக்கத் தடை அந்த நாட்களில் இருந்ததால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. வேறு வழியின்றி பாரசீக மொழியினைப் பயின்றார். பிற்காலத்தில் அவர் தன் சொந்த முயற்சியில் சமஸ்கிருதம் பயின்று அம்மொழியில் புலமை பெற்றார்.

1906 ஆம் ஆண்டில் அம்பேத்கர் அகவை 15.. அந்தச் சிறுவயதிலேயே அவருக்கு 9 வயது நிரம்பிய சிறுமி ரமாபாயுடன் திருமணம் நடைபெற்றது. 1907 ஆம் ஆண்டில் மெட்ரிக்குலேசன் தேர்வில் வெற்றி பெற்றார். தாழ்த்தப்பட்டவகுப்பிலிருந்து மெட்ரிக் தேர்வில் வெற்றி பெற்ற முதல் மாணவன் அம்பேத்கர் என்பதால் மகர் சாதியினர் அதனை வெகு விமரிசையாக விழாவெடுத்துக் கொண்டாடினார்கள். விழா முடிவில் அம்பேத்கரின் குடும்ப நண்பர் கிருஷ்ணாஜி அர்ஜுன் கெலுஸ்கர், தான் எழுதிய, ''புத்தர்

வாழ்க்கை வரலாறு'' என்ற நூலினைப் பரிசாக நல்கி வாழ்த் துரை வழங்கினார்

### பம்பாய் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு

1908 ஆம் ஆண்டில் பம்பாய் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பெற்றிருந்த எல்பின்ஸ்டன் கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்தார். பரோடா மன்னர் கெய்க்வாட், கல்வி உதவி நிதியாக மாதம் 25 ரூபாய் கொடுத்து உதவினார். ஆனால் அந்தக் கல்லூரியில் உணவு விடுதி நடத்தி வந்த பிராமணர் அம்பேத்கருக்கு தேநீர், குடி நீர் கொடுக்க மறுத்து விட்டார். ஆனால் வெளி நாட்டவரான பேராசிரியர் முல்லர் அம்பேத்கரிடம் அன்பு கொண்டு, படிப்பதற்கு பல அறிவு நூல்களை வழங்கியதோடு உடுத்த நல்லாடைகளும் கொடுத்து அவரது படிப்பார்வத்தை ஊக்குவித்தார். அவரது தந்தையும் பொருள் நெருக்கடியிலும், புதல்வனின் அறிவுத் தாகத்தைப் போக்குவான் வேண்டி நிறைய நூல்கள் வாங்கித் தந்தார். பல நாள் பசித்திருந்தவன் முன் பானை ஆரக் கனத்திருந்த வெண் சோறு கண்டால் பெறும் இன்பத்தினைப் போல், அறிவுப்பசி கொண்ட அம்பேத்கர் தந்தை தரும் அறிவு நூல்களைப் பெற்றுப் படித்து அறிவினை வளர்த்துக் கொண்டார். அரசியல், பொருளியல் பாடங்களில் தேர்ச்சி பெற்று இளங்கலைப் பட்டம் 1912 இல் பெற்றார். அவர் பரோடா மன்னர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தார். பணியில் சேர்ந்த சிறிது காலத்தில் தந்தையின் உடல் நலம் குன்றியதால் பம்பாய்க்கு மீண்டும் வந்தார். 1913 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 ஆம் நாள் தந்தை மரணம் எய்தினார்.

### கொலம்பியா பல்கலைக் கழகத்தில்

பரோடா மன்னர் சாயாஜிராவ் கெய்க்வாட் அவர்களால், நியூயார்க் நகரில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கென்று கல்விஉதவிநிதி நிறுவப்பட்டது. இந்த நிதியைப் பெறும் மாணவர், படிப்பு முடிந்தவுடன் பரோடா அரசில் பத்தாண்டுகள் பணிபுரிதல் வேண்டும் என்பது நிபந்தனையாகும்.. அம்பேத்கர் அந்த நிபந்தனையை ஏற்றுக் கையெழுத்திட்டபின், 1913 இல் தனது 22ஆம் வயதில் அமெரிக்க அய்க்கிய நாடுகளுக்கு உயர் கல்வி பயின்றிடச் சென்றார். அவருக்கு கல்வி உதவிநிதி மாதம் 11.50 (ஸ்டர்லிங்) மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது..

அம்பேத்கர் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பயிலச் சென்ற அதே கால கட்டத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயணனும் அங்கே படிக்கச் சென்றார் அம்பேத்கர் நியூயார்க் சென்ற டைந்ததும் லிவிங்க்ஸ்டன் ஹாலில் ஒரு அறை எடுத்துத் தங்கினார். அவருடன் நேவல் பத்தானா என்ற பெயருடைய பார்சி இனமாணவரும் தங்கியிருந்தார். இவர் அம்பேத்கரின் வாழ் நாள் நண்பராய் விளங்கினார். அம்பேத்கர் 1915 இல் பொருளியலை முதன்மைப் பாடமாகவும், துணைப்பாடங்களாக சமூகவியல், வரலாறு, தத்துவம், மானுடவியல் ஆகிய பாடங் களையும் பயின்று முது நிலைப் பட்டம் பெற்றார் பண்டைய இந்திய வணிகம் என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப் பித்தார். ஜான் டேவி என்ற அறிஞர் மீதும், அவரின் மக்களாட்சித் தத்துவம் குறித்த ஆய்வுகளின் மீதும் அம்பேத்கர் ஈடுபாடு கொண்டிருந்தார்.

இந்தியாவின் தேசியப் பங்கு-ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வு என்ற இரண்டாவது ஆய்வுக் கட்டுரையை மற்றொரு முதுநிலைப் பட்டத்திற்காக (எம். ஏ) 1916 ஆம் ஆண்டு எழுதி வழங்கினார். இறுதியாக 1917 இல் அவர் மூன்றாவது ஆய்வுக்கட்டுரைக்காக பொருளாதாரத்தில் பிஎச்.டி பட்டத்தைப் பெற்றார். அலெக்சாண்டர் கேல்டன்வைய்சர் என்ற மானுடவியலாளர் 1916 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாளன்று நடத்திய கருத்தரங்கில் அம்பேத்கர், ''இந்தியாவில் சாதிகள்: அவற்றின் இயக்கம், தோற்றம், வளர்ச்சி'' என்ற தலைப்பில் ஆய்வுரை வழங்கினார். அக் கட்டுரையில் மனிதாபிமானமற்ற கொடுஞ்செயலுடன், மனு, சாதிப் பாகுபாடுகளைத் தொகுத்து விதிகளாக எழுதியிருந்ததை வெளிப்படுத்தினார்.அந்தச் சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது.

### இலண்டன் பொருளியல் பள்ளியில்

அம்பேத்கர் கிரேஸ் இன்னில் சட்டம் பயில 1916 அக்டோபர் மாதம் பதிவு செய்து கொண்ட அதே நேரத்தில் இலண்டன் பொருளாதாரப் பள்ளியிலும் முனைவர் ஆய்விற்காகப் பணி புரிந்து வந்துள்ளார். பரோடா மன்னரிடமிருந்து வந்த கல்வி உதவி நிதி நின்றுவிட்டதால், அம்பேத்கர் சூன் 1917 இல் இந்தியா விற்குத் திரும்பிவந்தார். இங்கிலாந்து பேராசிரியர் எட்வின் கன்னான் பரிந்துரையின் பேரில் நான்கு ஆண்டுகளுக்குள் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினைச் சமர்ப்பிக்க மீண்டும் லண்டன் வருவதற்கு அனுமதி பெற்று வந்திருந்தார். ஆதலால் 1921 இல் மீண்டும் லண்டன் சென்று ''ரூபாயின் பிரச்சினை: அதன் தேற்றமும் அதன் தீர்வும்'' என்ற அவரது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து முதுகலைப் பட்டம் பெற்றார். 1923 இல் பொருளாதரத்தில் டி.எஸ்சி பட்டமும் பெற்றார். அதே ஆண்டில் கிரேஸ் இன்னில் சட்டம் பயில அழைக்கப்பட்டார். பாரிஸ்டர் அட்-லா பட்டம் பெற்றார்.

### பரோடாவில்

அம்பேத்கர், பரோடா மன்னரின் கல்வி நிதிஉதவி பெற்றுக் கல்வி பயின்றமையால், அம்மன்னரின் அரசில் பணிபுரியக் கடமை பெற்றிருந்தார். ஆதலின் பரோடவிற்குச் சென்றார். பரோடாவில் தங்குவதற்கு பார்சி பயணியர் விடுதிக்குச் சென்றார். காரணம் பார்சி மதத்தில் தீண்டாமை ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை என்பதால். அவர் பார்சி பெயருடன் தங்கினார். பின் அரண்மனைக்குச் சென்று. இராணுவச் செயலாளராக மன்னர் கெய்க்வாட் அவர்களிடம் பணியில் சேர்ந்தார். பட்டம் பெற்ற உயரதிகாரியாக இருந்தபோதும், அவர் தீண்டத்தகாத மகர் இனத்தைச்சார்ந்தவர் என்பதாலேயே அவர் பதவிக்கு உரித்தான மதிப்பினை, மரியாதையை, அலுவலகத்தில் அவரின் கீழ்ப் பணியாற்றிய அலுவலர்கள் தரவில்லை. கடைநிலை ஊழியர் கூட, கோப்புகளை அவர் கையில் தராது மேசை மீது எறிந்து அவரை அவமதித்தனர். எனவே அவர் விரக்தியிலிருந்தார்.

இந்நிலையில் ஒரு நாள் அவர் தங்கியிருந்த விடுதிக்கு சில முரடர்கள் வந்தனர். அம்பேத்கர் தீண்டப்படாதவர் என அறிந்து

அவரை உடனே விடுதியிலிருந்து வெளியேறச் சொன்னார்கள். எங்கு தேடியும் தங்குவதற்கு இடம் கிடைக்காததால் மன்னரிடம் சொல்லி அவர் மூலம் திவானுக்குச் சொல்ல, திவான் தன்னால் முடியாது என்று தட்டிக் கழித்துவிட்டார். அலைந்து அலைந்து பசியால் சோர்ந்து போய் மரத்தடியில் அமர்ந்து அழுதார். இந்துக்களுக்கு, ஒருவன் தீண்டத்தகாதவன் என்றால் பார்சிகளுக்கும் முஸ்லீம்களுக்கும் அவன் தீண்டத்தகாதவன் தான் என்பதை அறிந்து மிகவும் சோர்வும் கோபமும் கொண்டார். ஆகவே உடன் அப்பணியிலிருந்து விலகி பம்பாய் சென்று விட்டார். அதன்பின் தன் குடும்பத்தின் வாழ்க்கைச் செலவினை ஈடு செய்ய, சிறிது காலம் இரண்டு மாணவர்க்குக் கல்வி போதிக்கும் ஆசிரியராக இருந்தார். ஒரு வணிகரிடம் கணக்க ராகப் பணியாற்றினார். ஒரு முதலீட்டு ஆலோசனை வணிக மையத்தினை நிறுவினார். நிறுவனர் தீண்டத்தகாதவர் என்ப தால் வாடிக்கையாளர்கள் அந்நிறுவனத்தைப் புறக்கணித்தனர்.

1918 ஆம் ஆண்டு பம்பாயில் சிடன்ஹாம் வணிகப் பொருளியல் கல்லூரியில் அரசியல் பொருளாதாரப் பேராசிரி யராகப் பணியில் சேர்ந்தார். மாணவர்கள் முதலில் அவரை அலட்சியப்படுத்தினர். ஆனால் அவரின் ஆழ்ந்த நூலறிவும், சிந்தனையைத் தூண்டும் உரைகளும் கற்பிக்கும் திறனும் மாணவர்களை மிகவும் கவர்ந்தன. காலப்போகில் அவரைச் சிறந்த ஆசிரியர் என்று போற்றினர். ஆனால் அவருடன் பணிபுரிந்த மற்ற பேராசிரியர்கள் அவரிடம் தீண்டாமை பாராட்டினர். தண்ணீர் குவளையைக் கூடப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை.

மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையின் படி, வாக்குரிமை வழங்குவது தொடர்பாகச் சவுத் பரோ குழு இந்தியாவில் பல்வேறு இயக்கங்களின் கருத்துகளைக் கேட்டறிய 1919 இல் வந்தது. இக்குழுவின்முன் சாட்சியம் அளிக்க அம்பேத்கர் அழைக்கப் பட்டார். தீண்டப்படாதோருக்குத் தனி வாக்குரிமையும், தீண்டப்படாத வகுப்பு மக்களின் தொகைக்கேற்ப இடஒதுக்கீடும் தேவை என்று அம்பேத்கர் கோரினார். மூக் நாயக் (ஊமைகளின் தலைவன்) என்ற வார இதழை பம்பாயில் கேல்ஹாப்பூர் மன்னர் சாகு அவர்களின் உதவியுடன் 1920 சனவரி 31 ஆம் நாள் தொடங்கினார். இந்தப் பத்திரிக்கை வெளியிடுவது குறித்து விளம்பரம் செய்யுமாறு கேசரி இதழைக் கேட்டுக் கொண்டபோது, அதை வெளியிட மறுத்துவிட்டனர்- அவ்விதழின் ஆசிரியர் குழுவினர். அப்பொழுது திலகர் உயிருடன் இருந்தார். அவர் இதனைக் கண்டுகொள்ளவில்லை.

1923 சூன் மாதம் அம்பேத்கர் உயர் நீதிமன்ற வழக்கறி ஞராக வாழ்க்கையைத் தொடங்கினார். அதன் பின்னர் அம்பேத்கர் தீண்டப்படாத மக்களின் கல்வி வளர்ச்சியிலும், அந்த மக்களின் சமூக முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை கொண்டார். 1924 ஜுன் மாதம் 20 ஆம் நாள் பகிஷ்கார ஒழிப்பு சபை தொடங்கப்பட்டது. தீண்டப்படாத, தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், ஒதுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்கும் பாடுபடுவது இச்சபையின் நோக்கங்களாகும். இச்சபையின் செயற்குழுத் தலைவராக அம்பேத்கர் செயல்பட்டார். 1925 சனவரி 4 ஆம் நாள் ஷோலாப்பூரில் உயர் நிலைப் பள்ளியில் கல்வி பயிலும் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதியை இச்சபை நிறுவியது.

1925 இல் பிராமணர்கள் இந்தியாவைப் பாழாக்கிவிட்டனர் என்று பழி சுமத்தி எழுதினார்கள் என்று, பிராமணரல்லாத தலைவர்களாகிய கே.பி. பக்டே, கேசவராவ் ஜெடே, தினகர் ராவ் ஜவால்கர் ஆகிய மூவர் மீதும் பூனாவில் வசித்த சில பிராமணர் களால் அவதூறு வழக்குத் தொடரப்பட்டது. அவ் வழக்கில் அம்பேத்கர் பிராமணரல்லாத தலைவர்கள் சார்பில் வழக்கறிஞராகத் தோன்றி வாதாடி 1926 அக்டோபரில் அந்த வழக்கில் மகத்தான வெற்றி பெற்றார். தீண்டப்படாத மக்களின் உரிமைகளைப் பேணுதற்கு அம்பேத்கார், மூக் நாயக், பகிஷ்கிரித் பாரத், ஜனதா ஆகிய இதழ்களை வெளியிட்டார்

1927 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பம்பாய் மாநில சட்டமன்ற உறுப்பினராக ஆளுநரால் நியமிக்கப்பட்டார். பத்திரிக்கை ஆசிரியர், தீண்டப்படாத மக்களின் விடுதலைக்கான போராட்டங்கள், கருத்தரங்குகளிலும் கூட்டங்களிலும் பங்கேற்க சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளுதல் எனப் பல் வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டகாரணத்தால் வழக்கறிஞர் பணியில் முழுமையாக ஈடுபட முடியவில்லை. ஆகவே வாழ்க்கைச் செலவிற்காக 1928 சூன் முதல் அம்பேத்கர் பம்பாய் அரசு சட்டக்கல்லூரியில் பேராசிரியர் பணியைத் தற்காலிகமாக ஏற்க நேரிட்டது. ஆசிரியராகச் சிறப்புடன் பணியாற்றினார். மாண வர்கள் உள்ளத்தில் அவர் பெரும் மதிப்பினைப் பெற்றிருந்தார். ஆயினும் 1929 மார்ச் மாதத்துடன் அவருடைய பேராசிரியர் பதவி முடிவுக்கு வந்தது.

### சைமன் கமிஷன்

ஆங்கிலேயர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருந்த சைமன் குழுவினருடன் பணியாற்ற 1928 ஆகஸ்டு 3 ஆம் நாள், அம்பேத்கர் பம்பாய் மாநிலக் குழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். சைமன் கமிஷன் முன் 18 தீண்டப்படாத வகுப்புச் சங்கங்கள் தங்கள் கோரிக்கைகளைக் குழுவிடம் சமர்ப்பித்தன. பகிஷ்கிரித் ஹித்த காரிணி சபையின் சார்பில், அம்பேத்கர் ஒரு கோரிக்கை அறிக்கையை இக்குழுவிடம் வழங்கினார். அதில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கெனத் தனியான இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதி ஏற்படுத்தப்படவேண்டும் என்று கோரியிருந்தார். மேலும் இந்திய நாட்டிற்காக எழுதப்படவுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குக் கல்வி வழங்குவதே மாநில வரவுசெலவு திட்டத்தில் முதன்மையான பணியாக இருக்க வேண்டும் என்றும், இராணுவம், கடற்படை, காவல்துறை ஆகியவற்றில் பணியில் சேருவதற்கான உரிமை அளித்திட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

### உரிமைப் போர்கள்

1927 ஆம் ஆண்டில், அம்பேத்கர் தீண்டாமைக்கு எதிராகத் தீவிர முடிவு செய்தார். பொதுக் குடிநீர் ஆதாரங்களைத் தீண்டப் படாத வகுப்பு மக்களின் பயன்பாட்டிற்காகத் திறப்பதற்கான இயக்கங்களை அவர் ஆரம்பித்தார். இந்துக் கேயில்களுக்குள்

நுழைவதற்கான உரிமைக்காகவும் அவர் பேராடினார். இத்தகைய போராட்டங்களை அம்பேத்கர் தொடங்கிட உந்து சக்தியாக அமைந்தது. 1924 இல் தந்தை பெரியார் கேரளாவில் வைக்கம் நகரில் நடத்திய தெருவில் நடக்கும் உரிமைக்கான போராட்டமும், 1926 இல் நடைபெற்ற கோயில் நுழைவுப் போராட்டமும் தான் . வைக்கம் போராட்ட வெற்றிக்குப் பின் சில மாதங்க ளுக்குப்பின் தம் ஏட்டில் அதைப்பற்றிப் பெருமைப்பட எழுதி மகத் போராட்டத்தை அம்பேத்கர் அறிவித்தார்.

மகத் நகரிலுள்ள பொதுக்குளத்தில் தீண்டத்தகாத மக்கள் தண்ணீர் எடுக்கும் உரிமைக்காக ஒரு சத்தியாக்கிரகத்தைத் தலைமை தாங்கி நடத்தினார்.

பம்பாய் மாநில சட்டசபைக்குத் தீண்டப் படாதார்கள் சார்பாக நியமிக்கப் பட்ட உறுப்பினர் திரு எஸ்.கே. போலே அவர்கள், தென் ஆப்பிரிக்க அரசின் நிறவெறிக் கொள்கையை எதிர்க்கும் நாம், முதலில் நம்மைநம திருத்திக் கொள்ளவேண்டும். எல்லா நீர்நிலைகளையும் தீண்டத்தகாதோர் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும்; பொதுப் பள்ளிக்கூடங்கள், நீதி மன்றங்கள், அலுவலகங்கள், மருத்துவமனைகள் என எல்லா இடங்களிலும் அவர்களை எந்தத் தடையுமின்றி அனுமதிக்க வேண்டும் என அவர் கொண்டுவந்த தீர்மானம் 4-8-1923 இல் நிறைவேற்றப்பட்டது. 11-9-1923இல் அரசு ஆணை வெளியிடப் பட்டது. எஸ்.கே.போலே இறுதிவரை டாக்டர் அம்பேத்கரின் நண்பராகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் நல உரிமைக்காவல ராகவும் வாழ்ந்து மறைந்தவர். 1923 இல் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானம் 1926இல் சிறுமாற்றங்களுடன் உறுதிப் படுத்தப்பட்டது. இத் தீர்மானத்தின் அடிப்படையில் 1924 ஆம் ஆண்டிலேயே மகத் நகராட்சி சௌதார் குளத்தைத் தீண்டப் படாதவர்கள் பயன்படுத்த அனுமதித்தது. ஆனால் நகராட்சியின் ஆணை செயல்வடிவம் பெறவில்லை. உயர் சாதி இந்துக்கள் இந்த ஆணையைக் கடுமையாக எதிர்த்து வந்தனர். எனவே தீண்டப்படாத மக்கள் இந்தக் குளத்தைப் பயன்படுத்த இயல வில்லை.

எனவே மகத்தில் தீண்டப்படாதவர்கள் மாநாடு 1927 மார்ச் 19, 20 தேதிகளில் அம்பேத்கரால் நடத்தப்பட்டது. மாநாட்டுப் பந்தலில் 10,000 மக்கள் கூடியிருந்தனர். டாக்டர் அம்பேத்கர் தன் தலைமை உரையில் போர்ப்படைப் பிரிவுகளில் மகர் சாதியினருக்கு வேலை தராத ஆங்கில அரசின் செயலை மிக வன்மையாகக் கண்டித்தார். போலே தீர்மானம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரினார். மறு நாள் கூட்டத்தினர் அனைவரும் சௌதார் குளத்திற்கு ஊர்வலமாகச் சென்று, நீரை அள்ளிப் பருகினர். பின்னர் மக்கள் அமைதியாக மாநாட்டுப் பந்தலை நோக்கிச் சென்றனர்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட சாதி இந்துக்கள், தீண்டப் படாத மக்கள் வீரேஸ்வரர் கோயிலில் நுழைந்திடவும் திட்டமிட்டுள்ளனர் என்று வதந்தியைப் பரப்பினர். இந்து மதத்திற்கு ஆபத்து; கோயிலின் புனிதம் கெடப்போகிறது, கடவுளைக் களங்கப் படுத்தப் போகிறார்கள் எனக் கூச்சலிட்டு, சாதிக் கலவரத்தைத் தூண்டி விட்டு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். அடிபட்ட மக்கள் பழிக்குப் பழி வாங்கத் துடித்தனர். அம்பேத்கர் அவர்களை அமைதிப் படுத்தி ஊர் திரும்பச் செய்தார். பின்னர்,21-3-1927 அன்று உயர் சாதி இந்து மக்கள், குளத்திற்குத் தீட்டுக் கழித்தனர். 108 குடங்களில் மாட்டுச் சாணம், சிறுநீர்,பால், தயிர், நெய் கலந்து குளத்தில் (பஞ்சகவ்யம்) கொட்டினர். அர்ச்சகர்கள் தண் ணீரில் நின்று கொண்டு மந்திரம் சொல்லித் தீட்டைப் போக்கினர். இதுபோல் மீண்டும் நடைபெறாமல் தடுக்கக் குளத்திற்குக் காவலர்களை நியமித்தனர் அந்தப் போராட்டத்திற்குப் பின்னர் தாழ்த்தப்பட்ட மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டனர். இதைவிடக் கொடுமை, மகத் நகராட்சியினர் 5-1-1924இல் போட்ட தீர்மானத்தை இரத்துச் செய்து விட்டு, 1927 ஆகஸ்டு 4 ஆம் தேதி தீண்டப்படாதவர்கள் தண்ணீர் எடுப்பதை மீண்டும் தடை செய்தனர். அம்பேத்கர் இதனை ஒரு சவாலாக எதிர்கொண்டார்,

சம நீதியை, சமஉரிமையை நிலை நாட்டிட மீண்டும் மகத்தில்1927 டிசம்பர் 25 இல் 15000 சத்யாக்கிரகிகளைத் திரட்டினார். ஊர்க்காரர்கள் அவர்களுக்குத் தண்ணீர் தரவும், வியாபாரிகள் பொருட்களை விற்கவும் மறுத்தனர். மனிதர் களுக்குரிய உரிமையை, பிறரால் பறிக்கப்பட்ட உரிமைகளைக் கெஞ்சியோ, பிறர்க்கு அஞ்சியோ கேட்டால் அடையமுடியாது; போராட்டத்தின் மூலமே அடைய முடியும். இவர்கள் பலியிடுவது ஆடுகளைத்தான்; சிங்கங்களை அல்ல.அரசியலில் இறுதி இலட்சியம் மனித உரிமையைப் பெற்று நிலை நாட்டுவது தான், என்று கூறினார். மனித உரிமைகளை மறுக்கும் இந்து வேதங்களையும் மனுசாஸ்திரத்தையும் கண்டனம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**1927 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் நாள் மாலை 4 மணிக்கு நடந்த மாநாட்டில் அம்பேத்கர் வர்ணாஸ்ரம தர்மத் தை-நால்வகைச் சாதி பாகுபாட்டினையும், மற்றும் "தீண்டாமை" யையும் சித்தாந்த ரீதியாக நியாயப்படுத்தியதற்காக, மனு ஸ்மிருதி என்ற இந்து நூலினைக், கண்டனம் செய்தார். மனுநீதி நூலின் பிரதிகளை அன்றிரவு 7.30 மணிக்குத் தீயிட்டுக் கொளுத்தினார். ஆண்டுதோறும் டிசம்பர் 25 அன்று மனுநீதி எரிக்கும் நாள், தீண்டப்படாத வகுப்பு மக்களால் பம்பாய் மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது.**

சூத்திரர்களின் இழி நிலைக்குக் காரணமான கீதையையும், மனுஸ்மிருதியையும் தீயிலிடவேண்டும் என்று திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் 1922 இல் தந்தை பெரியார் பேசினார். ஐந்து ஆண்டுகள் கழித்து தீண்டப்படாதார் மா நாட்டில் 25-12-1927 இல் மகத் மாநாட்டில் மனு நீதி தீக்கிரையாக்கப்பட்டது.

இதற்கிடையில் குளம் தனியாருக்குச் சொந்தமெனச் சிலர் வழக்குப் போட்டு உள்ளூர் உரிமை இயல் நீதிமன்றத்தில் 14-12-1927 அன்று இடைக்காலத் தடை பெற்றனர். மாவட்ட ஆட்சியர், நீதிமன்றம் தீர்ப்பு வரும் வரை காத்திருக்கும்படி அம்பேத்கரிடம் கேட்டுக்கொண்டார். நீண்ட போராட்டத் திற்குப்பின் அம்பேத்கர் பம்பாய் உயர் நீதிமன்றத்தில் வாதாடி சௌதார் குளம் அனைத்து மக்களுக்கும் உரியதே என்ற உரிமையை நிலை நாட்டினார் . இறுதியாக 13-6-1929 இல் வெற்றியடைந்தார். ❖

# அண்ணலார்க்கு வீரவணக்கம்

திசம்பர் ஆறு அறிவுத் தீஞ்சுடர்
அண்ணல் அம்பேத்கர் கண்மூ டியநாள்!
மதவெறிக் கயவர் மசூதி இடிப்பை
நடத்தி முடித்த நாளும் இதுவே
பாழாய்ப் போன பார்ப்பனர் அண்ணலை
ஆழ்வார் ஆக்கும் அவலமும் நடக்கும்
தொடவும் மறுத்தார் அன்று; இன்று
கடவுளின் குழந்தை என்கிறார் கயவர்
திருப்பிக் கேட்டார் தீரர் அம்பேத்கர்:
'நாங்கள் கடவுளின் குழந்தைகள் என்றால்
நீங்கள் என்ன சாத்தானின் சொத்தா'?
இந்து வாகப் பிறந்தேன் ஆனால்
இந்துவாய் ஒருபோதும் சாகேன் என்றார்
பகவத் கீதையைப் பாராட்டுவோர் முன்அது
பைத்தியக் காரன் உளறல் என்றழைந்தார்
இராமன் கிருஷ்ணன் புதிர்கள் மூலம்
மோசடிக் கடவுளர் முகத்திரைக் கிழித்தார்
எந்தக் கழுதைக்கும் வயதாகும்; இப்போது
இந்தியக் கழுதைக்கு வயது எழுபது
சேரி ஊர்எனப் பிரிந்தே இருப்பதைக்
காறித் துப்பலூர் தலைவனைக் காணோம்
உலக மயத்தோடு ஓடுவார் மோடி
மலக்குழி அள்ள மாற்றுஆள் இல்லை
ஆளப் பிறந்தவர் அவாள்கள்; ஆனால்
மேல வளவில்யாம் வெட்டிப் படுகொலை
அனிதாவின் சாவு அறிவிப்ப தென்ன?
பட்டம் பதவி இவர்க்கே பண்ணையம்
இதைத்தான் அண்ணலார் என்றோ சொன்னர்:
முதலா ளியமும் பார்ப்ப னியமும்
ஒட்டி உறவாடும் இரட்டைப் பிள்ளைகள்
அதானி அம்பானி கொலைகாரக் கும்பலை
உதைகொடுத்து ஓட்டுவோம் ஓங்குக புரட்சியே!



- தமிழேந்தி

# விவசாயக் கடன் தொகை மடை மாற்றப்படுகிறதா?

விவசாயத் துறைக்கு வழங்குவதற்காக அனுமதிக் கப்படும் மொத்தக் கடன் தொகை 2004-ல் ரூ.96,000 கோடியாக இருந்தது இப்போது ரூ.10 லட்சம் கோடிக்கும் மேல் அதிகரித்திருக்கிறது. புதிதாக 18,000 கிராமப்புறக் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. இருப்பினும், விவசாயி களுக்குக் கடன் தொகை போதிய அளவு கிடைக்காமல் பற்றாக்குறையாகவே இருக்கிறது. இதற்குக் காரணம், இந்தத் தொகையின் கணிசமான பகுதி பெரு விவசாயி களுக்கும் பணக்காரர்களுக்கும் மடை மாற்றப்படுவது தான் என்கிறார் வேளாண் பொருளியல் நிபுணர் பேராசிரியர் ராம்குமார். சமீபத்தில், அனைத்திந்திய வங்கி ஊழியர்கள் சங்கத்தின் கூட்டத்தில் மும்பையில் பேசு கையில் இதை அவர் தெரிவித்தார்.

விவசாயத்துக்கான நேரடி வங்கிக் கடனில் 25 நகரங்களிலும் பெரு நகரங்களிலும் உள்ள வங்கிக் கிளைகள் மூலம் இப்போது வழங்கப்படுகின்றன.

மேற்கு வங்கத்தில் 55 கடன் நகரங்கள், பெரு நகரங்களின் வங்கிக் கிளைகள் மூலம் வழங்கப்படு கின்றன. கொல்கத்தாவில்தான் அதிகம் வழங்கப்படு கிறது. இதையடுத்து, மகாராஷ்டிரத்திலும் (37%), தமிழ் நாட்டிலும் (32%) இது அதிகம்.

இந்தக் கடன்களிலும் 50 ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில், அதாவது காரிஃப், ராபி பருவங்கள் முடிந்த பிறகு வழங்கப்படுகிறது. வங்கிக் கடன்கள் கிடைப்பதே இல்லை என்று விவசாயம் செய்யும் சிறு விவசாயிகள் புலம்புவதன் காரணம் இப்போது புரிந்திருக்கும்.

**கிராமப்புற வங்கிப் பணி வீழ்ச்சி**

1969-ல் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதாலும் பிறகு எடுத்த விவசாயம் சார்ந்த கொள்கை முடிவுகளாலும் விவசாயத் துறை முன்னுரிமை பெற்றது. அனைவரை யும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதை அரசு கொள்கை யாகவே அறிவித்தாலும் கிராமங்களுக்கும் விவசாயி களுக்கும் கடன் உதவி கிடைக்காததால் இந்த வளர்ச்சி குறிப்பிடும்படியான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.

தாராளமயப் பொருளாதாரக் கொள்கை கள் அமலுக்கு வரத்தொடங்கிய பிறகு விவசாயிகள், சிறு வணிகர்கள், சிறு தொழில்முனைவோர், கிராமப்புற மக்களுக்குக் கடன் தரும் அளவு படிப்படியாகக் குறையத் தொடங்கியது. எனவே, தனியார் லேவாதேவிக்காரர்கள் அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து அந்த இடத்தை நிரப்பத் தொடங்கினர். தாராளமயக் கொள்கை அமலாகத் தொடங்கியபோது நாட்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடனில் 17% லேவா தேவிக்காரர்களால் வழங்கப்பட்டது.

அடுத்த 10 ஆண்டுகளில் அது கிட்டத்தட்ட 27% ஆக உயர்ந்தது. அதாவது, கடனில் கால் பங்குக்கும் மேல் லேவாதேவிக்காரர்களால் தரப்படுகிறது. அரசு நிறுவனங் களும் முறையான நிதி நிறுவனங்களும் விவசாயத் துக்கும் கிராமப்புறங்களுக்கும் கடன் கொடுப்பது குறைந்துவிட்டது.




1990-கள்தான் கிராமப்புறங்களுக்கு வங்கி கள் தாராளமாகக் கடன் கொடுத்த கடைசி 10 ஆண்டுகள். ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய கடன் மூலதனம் உயர் வருவாய்ப் பிரிவினருக்கும் பணக்காரர்களுக்கும் திருப்பப்படுகிறது.

1990-களில் விவசாயத்துக்கு வங்கிகள் நேரடியாகக் கொடுத்த கடனில் 92 தலா ரூ.2 லட்சம் அல்லது அதற்கும் குறைவான தொகை. இப்போது 46% நேரடி வங்கிக் கடன்தான் ரூ.2 லட்சத்துக்கும் குறைவு. எஞ்சிய 54% ரூ.2 லட்சத்துக்கும் அதிகம். அதாவது பணக்காரர்களுக்கு அதிகம்.

**ஏறுகிறது கடன் சுமை**

மொத்த விவசாயிகளில் 25 பேர் 1992-ல் கடன் வாங்கியவர்களாக இருந்தார்கள். 2013-ல் அவர்களின் எண்ணிக்கை 46% ஆக உயர்ந்திருக்கிறது. கடனுக்கும் சொத்துக் கும் இடையிலான விகிதம் 1992-ல் 1.6% ஆக இருந்தது 2013-ல் 2.5% ஆக உயர்ந்திருக்கிறது. இது விவசாயிகளின் கடன் சுமையின் தீவிரத்தைக் காட்டு கிறது. விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தால் விவசாயி களுக்கு அதுவே பழக்கமாகிவிடும் என்ற விமர்சனம் சரியல்ல என்று ராம்குமார் மறுக்கிறார். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற உணர்வு விவசாயிகளுக்கு எப்போதுமே உண்டு. வருவாய் இல்லாததால்தான் விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

வேளாண்மையில் வளர்ச்சி இப்போது வெறும் 2% முதல் 3% ஆகத்தான் இருக்கிறது. இது இப்படியே தொடர்ந்தால் 2020-ல் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் இலக்கை எட்டவே முடியாது என்று கூறும் ராம்குமார், ஆண்டுக்கு 14% அளவுக்கு விவசாயம் வளர வேண்டும் என்கிறார்.

தமிழில் : சாரி

❖ நன்றி : தமிழ் இந்து, 23-11-2017

# தத்துவமும் - களப்பணியும்

- சி. பெரியசாமி

அரியலூரில் அரசுடமை வங்கி ஒன்றில் வாடிக்கையாளர் நேரம் முடியும் நிலையில் 21.11.2017 இல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழன் ஒருவன் வேகவேகமாக வங்கி உள்ளே நுழைந்தான். அரியலூர் நகர செயலர் தோழர் தமிழ்க் களம் இளவரசனும் உடன்வந்தார். பணம் பெறுவ தற்கான காசோலையை வங்கித்துணை மேலாளரிடம் நீட்டினான். அந்தக் காசோலையை பணம் கொடுக் கும் வங்கி அலுவலரிடம் கொடுக்குமாறு வங்கித் துணை மேலாளர் கூறினார். காசோலையை நீட்டும் நேரம் "கணிணி செயல்பாடு தடைப்பட்டுள்ளது சிறிதுநேரம் காத்திருங்க"என்றுபணம் தருபவர் கூறினார்.

2018 பொங்கல் மலருக்கு நிதி திரட்டும் வேகமான வேலையில் சென்றுகொண்டிருக்கும் மாலை நேரம் –காத்திருப்பது–நேரம் வீணாவது என்பது மா.பெ.பொ.க. தோழனுக்குப்பொறுத்துக்கொள்ள இயலாதது. வங்கி மேலாளரை நோட்டமிட்டான். அவர் மிகவும் பக்திக்காரர் போலத் தோற்றம். பொட்டுடன் கையில் கயிறுக்கட்டுகளுடன் இருந்தார். நகரச் செயலாளர் இளவரசனிடம் "ஏம்பா, நாம வங்கி மேலாளரிடம் மாநாட்டுக்கு நிதி – மலருக்கு விளம்பரம் கேட்போமே"என்றான் கட்சித் தோழன். "ஏங்க –நீங்க வேற–அவர் யாரோ–அவர்கிட்ட எப்படிக் கேட்பது" என்றுக்கூறினார் இளவரசன். "அவர் யாராயிருந்தால் என்ன– நீ வா.. துண்டறிக்கையைக்கொடுப்போம்– நிதி கேட்போம்–அவர் உதவிசெய்தால்செய்யட்டும் –இல்லையென்றால் போகட்டும்–என்னிடம் ஏன் நிதி கேட்டாய் என்றுதுப்பாக்கியால் சுடவாப்போகிறார் – சும்மா வாப்பா" என்று இளவரசனை அழைத்துக் கொண்டே இருவரும் மேலாளர் அறைக்குள் சென்றனர்.

வணக்கம் ஐயா, என் பெயர் சி. பெரியசாமி மருதூரைச் சேர்ந்தவன்–எம்.ஏ. பி.எல்., படித்தவன் –Regional Probation Officer - மண்டல நன்னடத்தை அலுவலராகப் பணி செய்தவன்– 2005 ஜூன் 30ல் பணி ஓய்வு பெற்றவன்–அதற்குப் பிறகு

*"படிப்பால் உயர்வது முதல் வேலை"*

*"பாழும் மதுவை ஒழிப்பது மறு வேலை"*

என்ற நோக்கத்தைத் தலையாய நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறேன் என்று வங்கி மேலாளரிடம் கூறினான்.

"வாங்க .. வாங்க.. உட்காருங்க– எனக்கு உங்களை முன்பே தெரியும்"என்றார் வங்கி மேலாளர். அப்படிங்களா, தெரியுங்களா என்றேன். "நீங்க வங்கிக்குள்ள வரும்போதே பழைய நினைவுவந்து விட்டது. சென்னை எழும்பூரிலிருந்து இரயிலில் நாம் ஒரே பெட்டியில் பயணம் செய்தோம். தாம்பரத்தில் தொடங்கி விருத்தாசலத்தில் நீங்க இறங்கும் வரை உங்கள் நோக்கத்தைப் பேசிக் கொண்டே வந்தீங்க–இந்தச் சிந்தனையாளன் ஏட்டையும் எனக்குக் கொடுத்தீங்க"என்றார் மேலாளர். அப்படியா, ரெம்ப மகிழ்ச்சிங்க என்றார் நம் கட்சிக்காரர். "நானும் தொழிற்சங்கத்தில் மிகவும் பாடுபட்டவன்– நீங்க வாங்க–என்னால்இயற்றதைச்செய்வேன்"என்று மகிழ்வுடன்கூறினார் வங்கி மேலாளர்."நான் வருவேங்க–இவர் அரியலூர் நகரச்செயலர் –இளவரசன்– இவர் உங்களை சந்திப்பார்" என்று கூறி விடைப் பெற்றார் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சித் தோழன். அவர்தான் கட்சியின் துணைப் பொதுச் செயலர். சி.பெரியசாமி–கொஞ்சம் தத்துவப் புரிதல் கோளாறு உடையவர் –தத்துவப் புரிதல்– களப் பணியில் சிறிது புரிதல்குறைவானவர். இது படிப்பதற்கு மட்டுமல்ல–உங்களின் நடப்புக்கும்தான்!

❖

## மா.முருகேசன்-அலமேலு 45ஆம் ஆண்டு திருமண நாள்



செங்கம் வட்டம் தீத்தாண்டப்பட்டு மா.முருகேசன்–அலமேலு இணையரின் 45ஆம் ஆண்டு திருமண நாள் மற்றும் மா.முருகேசன் 70ஆம் ஆண்டு பிறந்தநாள் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கப்பட்டது.

# மார்க்சியப் பெரியாரியக் கொள்கை விளக்க நூல்கள்

**07.01.2018 ஞாயிறு** அன்று
**சென்னையில்** நடைபெறும் மாநாட்டில்


**50 விழுக்காடு தள்ளுபடி விலையில் கிடைக்கும்**

மா.பெ.பொ.க. தோழர்களும்,
மற்றெல்லோரும்
வாங்கிப் பயன்பெறுங்கள்!

**01.12.2017** **- மா.பெ.பொ.க.**
நூல் வெளியீட்டுப் பிரிவு

இதழ் அறிமுகம்

## 'பீமா நதி' - இதழ்




ஆதிதிராவிடர் மாணவர் சங்கத்தைச் சேர்ந்த சமூக விடியலுக்கான அக்கறையுள்ள மாணவர்களால் சிறப்புடன் நடத்தப்படுகிற இதழ். இது சமூக அக்கறையுள்ள வரலாற்றுத் துறைப் பேராசிரியர்களின் கட்டு ரைகளையும் சமூக விடுதலைச் செயற்பாட்டாளர்களின் கட்டுரை களையும் தாங்கி வெளிவரு கிறது. ஆசிரியர் த.சாக்கிய சக்தி சமூக விடுதலையில் அக்கறையுள்ளவர் அனைவரும் படிக்க வேண்டிய காலாண்டிதழ் தனிச் சுற்று விலை ரூ.30.

தொடர்பு முகவரி
**அகில இந்திய**
**டாக்டர் அம்பேத்கர் மாணவர் சங்கம்**
எண்.85, பசார் தெரு, சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.
அலைப்பேசி : 9962426768

## சீனி.செந்தேவனின் தாயார் மறைவு



பெரியாரியல் அன்பர் சீனி.செந்தேவனின் தாயார் அரங்கநாயகி அம்மாள் வயது 84 உடல்நலக் குறைவால் 25.11.2017 சனி பகல் 11 மணிக்கு மறைவுற்றார். 26.11.2017 ஞாயிறு மாலை இறுதி நிகழ்வுகள் அனுப்பப் பட்டியில் நடைபெற்றது. தி.வி.க., த.பெ.தி.க., தி.இ.த.பே, சூலூர் பாவேந்தர் பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டனர். தென்மொழி ந.முத்துக்குமரனார், செந்தலை ந.கவுதமன் ஆகியோர் இரங்கலுரையாற்றினர். தாயாரை இழந்து வருந்தும் செந்தேவன் அவர்களுக்கும் அவருடைய குடும்பத்தின ருக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- சிந்தனையாளன் ஆசிரியர் குழு**

## நமக்கான சோசலிமே விடிவு ...

தூய்மை இந்தியா துடப்பம் இந்தியா
துண்டுக் காவிகளின் டிசிட்டல் இந்தியா
தெருவைக் கூட்டிப் படம் எடுத்த மோடிஇந்தியா
டெங்கு வந்தது எப்படிச்சொல் இந்தியா

தில்லிக்குப் பண்ணையடிக்கும் எட்டன் சாமியும்
தியானச் செம்மல் பன்றிப் பன்னீரும்
கொள்ளைக்கும் பதவிக்குமே ஆட்சி இங்கு
நாளும் மக்களைக் கொல்லுது டெங்கு

அய்யகோ! கந்துவட்டிக்குக் கருகியதே இசக்கிமுத்துகுடி
அடுப்புக் கரியாய்ஆனதே நம்உறவுத் தொப்புள்கொடி
நட்டகல்லுக்குக் காலத்தையும் காசையும் கரைக்கறீங்க
இப்போ எங்கடா போனதுஉங்க சாமிங்க

அரசின் காலிப்பயல்கள் காவல் துறை
அரண்காக்கத் தவறியதே மாவட்ட ஆட்சித்துறை
கொலைகார அரசுகள் இன்னும் எதற்கு
ஊளைஇடும் எதிர்க்கட்சிகள் நாளும் பிழைப்பிற்கு

ஆகமத்தை அறுத்தெறிந்து விட்டது கேரளம்
அனைவரும் அர்ச்சகராக வழிகாட்டிவிட்டது மார்க்சியம்
அனைத்திந்திய ஒன்றியமும் பின்பற்றியே ஆகவேண்டும்
அனைவரும் சமமென்று வழிபாட்டிலும் வேண்டும்

வைக்கம்வீரர் பெரியாருக்கு, அம்பேத்கருக்கு வெற்றி
அய்யன்காளி, நாரயணகுரு உழைப்புக்கு வெற்றி
ஆரியத்திற்கு விசயன் வைத்தார் வேட்டு
ஆண்டவனுக்கு இப்போ தீட்டுஎங்கே காட்டு

இந்தியாவிற்கே அன்று வழி காட்டிய நம்நாடு
சமூகநீதி சமத்துவத்தின் பிறப்பிடம் தமிழ்நாடு
நமைக்காக்கும் அரசமைப்பாய் என்றுமே அல்ல
நமக்கான சோசலிசம் அமையும்வரை விடிவல்ல!

– **நா. மதனகவி**

## சாந்தாயி அம்மையார் மறைவு



பெரம்பலூர் மாவட்டம் அல்லிநகரம் என்னும் சிற்றூரில் மூ.ரெங்கசாமி-சாந்தாயி இணையர்களுக்கு இரண்டு ஆண்கள், மூன்று பெண்கள். ஐந்து மக்களில் மூ.ரெ.சீனிவாசன் மூத்தவர். பெரியாரின் பெருந் தொண்டர். கொள்கை ஈர்ப்புக் காரணமாகவே அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களுடன் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டவர். தானும் தன் மகன் கவிஞர் அறிவுமழையும் இன்றுவரை மா.பெ.பொ.க. கட்சிக் கூட்டங்கள், பிரச்சாரங்கள், மாநாடுகள் முதலான களப் பணிகளில் பங்கு பெற்று வருபவர்கள்.

சீனிவாசனின் தந்தையார் பல ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார். இவரது தாயார் சாந்தாயி அவர்கள் இவரது பாதுகாப்பில் வாழ்ந்து வந்தார். கடந்த சில ஆண்டுகளாக நடை தளர்ந்து படுக்கை நோயாளியாக இருந்தவர். 24.11.2017 வெள்ளிகிழமை இரவு 10.00 மணியளவில் தனது 105 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

செய்தியறிந்து பெரம்பலூர், அரியலூர் மாவட்டச் செயலாளர்கள் தோழர் மா.நாராயணசாமி, புலவர் இராம.கலியமூர்த்தி, அரியலூர் நகரச் செயலாளர் த.இளவரசன் அம்மையாருக்கு மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

உள்ளூர் வெளியூர் உறவினர்கள் அனைத்துக் கட்சி தொண்டர்கள் ஏராளமானோர் இறுதி அஞ்சலிக்குப் பின் சனிக்கிழமை மாலை உடல் எரியூட்டப்பட்டது.

மூ.ரெ.சீனிவாசன் குடும்பத்தார்க்கு மா.பெ.பொ.க. சார்பிலும் சிந்தனையாளன் ஆசிரியர் குழு சார்பிலும் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்கள் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தி : **இராம.கலியமூர்த்தி**

# பிச்சை எடு!

- பாவலர் வையவன்



வெள்ளையனை வெளியேற்றி
வீரமுடன் நாம்பெற்ற
விடுதலை என்ன ஆச்சு? ...அரோகரா!
கொள்ளையர் பலர்வந்து
கூடினர் ஆட்சியில்
குற்றமே பெருகிப் போச்சு ... அரோகரா!
கள்ளமே இல்லையெனும்
காந்தியார் கண்டதோர்
கருணைஅ கிம்சை யெல்லாம் ... அரோகரா
பள்ளமே வெட்டிபடு
பாதாளம் சேர்த்தாரே
பண்பாடு பழக்க மிங்கே ... அரோகரா!

சொந்தஇம் மண்ணிலே
வாழ்கின்ற மக்கள்வாழ்
வாதாரம் செத்துப் போச்சு ... அரோகரா!
வந்துபிற நாட்டினர்
வாழவே இங்குபல
வாசலும் திறக்க லாச்சு ... அரோகரா!
கொந்திஇத் தேசத்தைக்
கூறாக்கி அம்பானி
அதானி கையில் வைத்து ... அரோகரா!
இந்தாநீ பிடியென்று
இந்திய தேசத்தைக்
கொடுப்பதே பார்லி மென்டு ... அரோகரா!

நாக்குரிமை பெற்றபல
நரிகளே இதுவரை
நாட்டினை ஆள வந்தார் ... அரோகரா!
போக்குபல காட்டியே
பொன்னான தேசத்தைப்
பொறுக்கியே சுரண்டித் தின்றார் ... அரோகரா!

வாக்குரிமை ஆஹாஓர்
வரமென்று சொன்னீரே
வரலாறு சொல்வ தென்ன? ... அரோகரா!
வாக்காள ராய்மட்டும்
வாழ்ந்துதான் சாகின்றார்
வாய்க்கரிசிப் போட்டுக் கொண்டு ... அரோகரா!

கொட்டுகிற மழையிலும்
கொளுத்திடும் வெயிலிலும்
உழைப்பவர்க் கென்ன நிலைமை?... அரோகரா!
பட்டதே போதுமென
தற்கொலையில் மாய்கின்றார்
மற்றவர்க் கென்ன உரிமை ... அரோகரா!
மொட்டையைப் போட்டுவிடு
பட்டையைப் பூசிவிடு
கொட்டையைக் கட்டிக் கொண்டு ... அரோகரா!
கட்டையைக் கக்கமிடு
வட்டையைக் கையிலெடு
பிச்சையெடு தெருவில் நின்று ... அரோகரா

## இராசேந்திரசோழனின் துணைவி
## இரசாகுமாரி அம்மையார் மறைவு



தோழர் இரேந்திரசோழன் அஸ்வ கோஷ் அவர்களின் துணைவியார் இரசகுமாரி அவர்கள் 64ஆம் அகவையில் நோய்வாய்ப்பட்டு மயிலத்தில் 21.11.2017இல் காலாமா னார். தமிழக அளவில் அறியப்பட்ட மார்க்சிய சிந்தனையாளரும், நாடக ஆசிரியரும், சிறந்த எழுத்தாளருமான தனது கணவரின் அரசியல் பொதுவாழ்விற்கு துணையாக நின்று உழைத்தவர். குறிஞ்பாடியில் பிறந்த அவர் சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர். எல்லோரிடமும் புன்னகை பூத்த முகத்துடன் பழகிய அவரின் இறுதி ஊர்வலம் 22.11.017 மயிலத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் புலவர் கி.த.பச்சையப்பன், எழுத்தாளர் செயப்பிரகாசம், பேராசிரியர் கோச்சடை, கல்விமணி, நெய்வேலி பாலு, அ.பத்மநாபன், காஞ்சிஅமுதன், பாவலர் பூங்குன்றன், மாயவன், மயிலம்பாபு உள்ளிட்ட தமிழகத்தின் பல பகுதிகளிருந்து பலரும் வந்து கலந்து கொண்டனர். கவிஞர் தமிழேந்தி தொலைபேசி வழி தோழர் இராசேந்திர சோழனுக்கு ஆறுதல் கூறினார்.

மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தி : காஞ்சி அமுதன்

## ஜானகி அம்மையார் மறைவு

1953-ஆம் ஆண்டு முசிறி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய புலவர் கோதண்டபாணி அவர்களின் மனைவியார் திருமதி ஜானகி அவர்கள் 2017, அக்டோபர் 5 ஆம் நாள் இரவு 9 மணி அளவில் இயற்கை எய்தினார்கள். பெரியார் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய சஞ்சீவி அவர்கள்,ஆசிரியர் மாதவன் அவர்கள் மற்றும் மங்கையற்கரசி என்ற மூவரும் அவர்களின் செல்வங்கள். தமிழ்மறவர் பொன்னம்பலனார் அவர்கள் முசிறியில் பணியாற்றி பார்ப்பன தலைமையாசிரியருக்கு எதிராகப் போராட்டம் நடத்தி மாற்றல் பெற்ற போது, தமிழ்மறவரோடு மாற்றப் பட்டபலரில் புலவர் கோதண்ட பாணியும் ஒருவர்.கோதண்டபாணி பொன்பரப்பியில் பணியாற்றியபோது அவரிடம் மாணவராக இருந்தவர் சிறுகடம்பூர் கோ.கலியமூர்த்தி அவர்கள். கோதண்ட பாணி அவர்கள் பொன்பரப்பியில் பணிபுரிந்த நாள் முதல்,ஜானகி அவர்களின் மறைவு வரை தமிழ் மறவர் பொன்னம்பலனார் குடும்பத்தோடு மிகுந்த நட்புடன் பழகினார்கள்.குடும்பத்தில் ஒருவராகவே இருந்தார்கள்.அனைத்து நிகழ்களிலும் பங்கேற்பார்கள். தமிழ் மறவர் குடும்பத்தினர் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு தங்களது அஞ்சலியைத் தெரிவித்தனர்.

செய்தி : பொறி. சிவப்பிரகாசம்

## அய்யாபணி தொடர்வோம்



திசம்பர்இரு பத்து நான்கு
திதிதரும் நாளா? இல்லை
அசைபோடும் நாளாம் நெஞ்சில்
அய்யாவின் நெடிய தொண்டை!
இசைவான துறைகள் தோறும்
எண்ணிலா ஆண்டுக் காலம்
பசைபோட்டே ஒட்டிக் கொண்டு
பார்ப்பானே கிடந்தான் எங்கும்

சீரான மதிப்பு மேன்மை
செல்வாக்கு எதிலும் பெற்றான்
ஈரோட்டு பெரியார் வந்தார்
இந்நிலை உற்றுப் பார்த்தார்
போராடும் மக்கள் வாழ்க்கை
புரிந்தது; பூணூ லானை
வேரோடு பிடுங்கிப் போட்டார்
விடுதலை நமக்குத் தந்தார்

பச்சைப்பு ராணம் தன்னைப்
பகுத்தறிவு கொண்டே ஆய்ந்தார்
கொச்சையாய்ப் பேசி னாலும்
குடுமிகள் வேர்த்தே ஓட
நச்சென்று கேள்வி கேட்டு
நரிகளின் தோல்உ ரித்தார்
அச்சமோ துளியும் இல்லை
அகன்றது அவாளின் தொல்லை

மொத்தமாய் இழிவு நீக்கும்
முயற்சியில் வென்றோம் இல்லை
எத்தனை சூத்தி ரர்தம்
இழிவெண்ணும் நிலையில் உள்ளார்
பக்தனாய் வீழ்ந்து பார்ப்பான்
பாதத்தை வணங்கு கின்றார்
அத்தகு நிலைமா றட்டும்
அய்யாபணி நிறைவே றட்டும்

**- தமிழேந்தி**

# எல்லாம் உங்கள் கையில்

தமிழகத்தில் இப்பொழுது திருடர்கள் அதிகரித்து விட்டனர்; ஒப்பந்தக்காரர்கள், அரசியல்வாதிகள், அரசு ஊழியர்கள் மூவரும் சேர்ந்து திட்டங்கள் தீட்டித் திருடுகின்றனர். எடுத்துக்காட்டாக நகராட்சி (ம) மாநகராட்சியில் கட்டப்பட்ட உட்புற கழிவு நீர் கால்வாய்கள் அனைத்தும் கட்டிய மூன்றே மாதத்தில் சிதைந்துவிட்டன. காரணம், கட்டப்பட்ட கால்வாய்களை அதிகாரிகள் ஆய்வு செய்யாமல் அரசியல்வாதிகளின் கூற்றுப்படி ஒப்பந்தங்கள் முடிக்கப்படுகின்றன.

இப்பொழுது ஜி.எஸ்.டி. வரி சில பொருட்களுக்குக் குறைத்துள்ளனர். இந்த வரிகுறைப்பு மக்களுக்கு அல்ல, வியாபாரிகளுக்கு மட்டும்தான். ஓட்டல்களில் வரி குறைப்பதற்கு முன்பு இருந்த வரியுடன் கூடிய விலையே வரி குறைந்த பின்பும் அதே விலையில் வரியுடன் விற்கின்றனர். இந்த பகல் கொள்ளையில் பங்கு பெற்று கண்டு கொள்ளாமல் உள்ளது நம்மை ஆளும் அரசுகள் மக்கள் வரிப்பணத்தை இப்படித் திட்டங்கள் தீட்டிக் கொள்ளையடிக்கின்றனர்.

பல ஆண்டுகளாகப் பாதிப்பு ஏற்படும் பகுதிகள் ஊடகங்களுக்குத் தெரியும். பாதிப்பின் பொழுது நிவாரணம் என்ற பெயரில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் கொள்ளையடிப்பதை ஊடகங்கள் வெளியிடுவதில்லை. கோடை காலங்களில் பாதிக்கப்பட்ட இடங்களில் வேலைகள் செய்யாமல் மழைக் காலங்களில் வேலை செய்வதால் செலவுகள் உயர்த்தி வரிப்பணத்தைக் கொள்ளையடிக்கின்றனர். ஊடகங்களும் இது இப்படியே தொடர்ந்தால் அவர்களுக்குச் செய்தி கிடைக்கும் என்றுதான் எண்ணுகின்றனர்.

இப்பொழுது ஒப்பந்தக்காரர்கள் கூடக் குறைந்த கூலி வாங்கும் வடமாநிலத்தவரை வேலைக்குச் சேர்த்து பணிகளை முடிக்கின்றனர். இங்குள்ளவர்கள் கேட்கும் கூலித் தொகை அதிகமாக இருப்பதையே ஒப்பந்தத்தில் மிகைப்படுத்தி குறிப்பிட்டு ஒப்பந்தத் தொகையை பெற்று கொள்கின்றனர்.

இந்த கொள்ளைகள் அனைத்தும் அரசியல்வாதிகளின் திட்டப்படியே அதிகாரிகளை கையில் வைத்துக் கொண்டு கொள்ளையடிக்கின்றனர்.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி திசம்பர்-2017

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **சீனி தமிழ்மணி** | காஞ்சிபுரம் | 1000/- |
| **மா.முருகேசன்-அலமேலு** திருமண மகிழ்வு (செங்கம்) | | 1000/- |
| **க.ஆறுமுகம்** | ஆரணி | 600/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **சம்பந்த சிவகுமார்** | காஞ்சிபுரம் | 500/- |
| **முருகவேல்-அமுதா** | திண்டிவனம் | 500/- |
| **ச.கோ.இராசன்** | சென்னை | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **கே.அப்துல் சத்தார்** | மேடவாக்கம் | 200/- |
| **கே.எம்.இராசேந்திரன்** | துரைமங்கலம் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - திசம்பர்-2017

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.2B/85, K.S.R.Nagar, M.W.P. 2nd Cross Street, Ambattur, Chennai-53. Editor : **V. ANAIMUTHU**